ராஜகோபாலையர்
(பி. எஸ்.)
[illegible]
பகு-3.


'15 (Q2)
N21
119 [illegible]

306

I

# The Heroines of Ind

IN TAMIL — Part I

806

BY
C. S. RAMASWAMI AIYER



APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

MADRAS:
C. COOMARASAWMY NAIDU & SONS
1931

Rights Reserved] [Price 6 As.

# இந்து ஸ்திரீ ரத்னங்கள்

## சித்திரப் படங்களுடன்

### முதல் பாகம்

மாதர் மனோரஞ்சனி பத்திராசிரியரும்,
ஐந்தாவது ஜார்ஜ் அரச சக்கரவர்த்தி அவர்களின் சரித்திரம்,
இந்திய மாயாவிநோதக் கதைகள் இவைகளின் ஆசிரியருமான

**வி. எஸ். ராமசுவாமி ஐயர்**

எழுதியது

மூன்றும் பதிப்பு

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1921

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 8 அணா

# முகவுரை

நமது தேசத்தில் பராக்ரமம் பொருந்தியவும், கல்வி, பரோபகாரம், தர்மசிந்தை, தெய்வ பக்தி முதலியவைகளைப் பூஷணமாகப் பூண்டவும், தேச சரித்திரங்களில் சம்பந்தப்பட்டவுமான மகா உத்தம ஸ்திரீகளின் திவ்ய சரித்திரங்கள் நமது நாட்டிலுள்ளவர்களுக்குத் தெரிய வேண்டுமென்ற விருப்பத்தால் "இந்து ஸ்திரீ ரத்னங்கள்" என்று இப் புஸ்தகத்திற்கு பெயரிட்டு இதை முதல் பாகமாக பிரசுரித்திருக்கிறேன்.

கல்கத்தாவிலுள்ள மிஸ்டர் மன்மதநாத் தத், எம்.ஏ., அவர்கள் இவ்வித புஸ்தகம் இங்கிலீஷில் எழுதியிருக்கிறார். அவர் அநுமதி பெற்று அதிலுள்ள சரித்திரங்களை மொழி பெயர்த்து மாதர் மனோரஞ்சினியில் பிரசுரித்து வந்தேன். அநேகர் இவ்வித சரித்திரங்களைத் திரட்டி ஒரு புஸ்தக ரூபமாக அச்சிட்டால் நமது தேசத்து ஸ்திரீகளுக்கும், சிறுவர், சிறுமிகளுக்கும் மிகவும் உபயோகப் படுமென்று நமக்குச் சொன்னமையால், அவர்கள் வார்த்தை வீண்போகாமலிருக்கும்படி இப் புஸ்தகத்தை இப்பொழுது பிரசுரித்திருக்கிறேன்.

சிற்சில சித்திரப் படங்களும், அரக்களராணியாரின் சரித்திரமும் இப்புதிய பதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப் புஸ்தகத்தை அனைவரும் வாங்கிப் படிப்பார்களென்று நம்புகிறேன்.

வி. எஸ். ராமசுவாமி ஐயர்.

## CONTENTS

### அட்டவணை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்மினி | 1 |
| 2. | ராணி சம்யுக்தா | 11 |
| 3. | பன்னா | 24 |
| 4. | கரும் தேவி | 32 |
| 5. | தாராபாய் | 41 |
| 6. | ஜஸ்ஸோஸ்வரி | 55 |
| 7. | ஜாட்பூர் ராணி | 74 |
| 8. | ராணி துர்க்காவதி | 86 |
| 9. | ராணி பவானி | 101 |
| 10 | அகலியாபாய் | 121 |
| 11. | அரக்களராணி | 141 |

## இதிலுள்ள சித்திரப் படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | டெல்லி நகரத்தின் தூரப் பார்வை | viii |
| 2. | பாழடைந்த சித்தூர் | 9 |
| 3 | பிருதிவி ராஜாவும், ராணி சம்யுக்தையும் | 12 |
| 4 | தாராபாய் | 40 |
| 5. | லாகூர் கேட் | 56 |
| 6. | அக்பர் சக்கரவர்த்தி | 59 |
| 7. | ஔரங்கசீப் | 76 |
| 8. | லார்ட் க்ளைவ் | 117 |
| 9. | அகலியாபாய் | 122 |
| 10. | விக்டோரியா மகாராணியார் | 133 |
| 11 | டெல்லி டர்பார் | 139 |



டெல்லி நகரத்தின் தூரப்பார்வை.

# இந்து ஸ்திரீ ரத்னங்கள்

## 1. பத்மினி.

பன்னிரண்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் வடக்கேயுள்ள மீவார் ராஜ்யம் மிகக் கீர்த்தி பெற்றிருந்தது. எல்லா ராஜாக்களும் இவ்விராஜ்யாதிகாரத்திற்கு உட்பட்டிருந்தார்கள். ராஜபுதனத்திலுள்ள சித்தூர் இதற்கு முக்கிய பட்டணமாக இருந்தது. அக்காலத்தில் நாகரிகமும் ஜனங்களுக்குத் தைரியம் முதலியவைகளு மிருந்ததுடன் அவ்விராஜ்யம் செழிப்பாகவு மிருந்தது. லக்ஷ்மணசிங் சிறு குழந்தையா யிருந்தமையால ராஜ்யபாரத்தை இக்குழந்தையின் சிறிய தகப்பனார் வகித்துப் பிரஜைகளுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து வந்தார். ஜனங்களும் சந்தோஷத்துடன் பீமன்சிங்கை வாழ்த்திக்கொண்டு வந்தார்கள்.

இவ்வித மிருக்கையில் சமாதானத்துடனும் சுபிக்ஷமாகவு மிருந்த ராஜ்யத்திற்கு அழிவுகாலம் சமீபித்தது. மொஹலாய அரசர்களில் கொடூரமான அலாவுதீன் என்பவன் வட இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். அவ்விதம் வரும்பொழுதே கிராமங்களையும், பட்டணங்களையும், நகரங்களையும் கொள்ளையடித்தான். கோயில்

களை பிடித்தான், குளங்களைப் பாழாக்கினான். வயது முதிர்ந்தவர்களையும் குழந்தைகள் முதலியோரையும் கொன்றான். இவ்வித அக்கிரமங்கள் செய்து கொண்டு, பலத்த மீவார் ராஜ்யத்திற்கு வந்து அதை எதிர்க்க அஞ்சித் தனது சேனைகளுடனே திரும்பிப் போய்விட எண்ணிக்கொண்டிருக்கையில், பீமன்சிங்கினுடைய பதிவிரதா சிரோமணியாயும் மகாலக்ஷ்மியே உருவெடுத்தாற் போலுமுள்ள உத்தம மனைவியாகிய பத்மினியைப் பற்றிக் கேள்வியுற்று, அவ்வுத்தமியை எவ்விதமாயாவது அபகரித்துச் செல்லவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் அங்கு தன் சேனைகளோடு தங்கினான். சில கெட்ட எண்ணமுள்ள ஸ்திரீகளை ராணியிடத்தில் அனுப்பி, அவளைக் கைவசமாக்க முயன்றதில் இவனுக்குப் பற்பல அவமானங்களுண்டாய் அவ்விராணியார் மகா உத்தமி என்று கண்டு கொண்டான். தான் செய்த காரியங்கள் பலியாததைக் கண்டு தனது சேனைகளுடன் சென்று சித்தூரைத் தாக்கினான். ராஜபுத்திர வீரர்கள் இவனை உள்ளே விடாமல் மகா கோபாவேசத்துடன் எதிர்த்து இரவிலும் பகலிலும் யுத்தம் செய்த வண்ணமாயிருந்தார்கள். உயிர்போனாலும் சரி, ஜயமுண்டானாலும் சரி என்ற எண்ணத்துடன் தங்கள் தேசத்தைக் காப்பாற்ற அகோர யுத்தம் செய்து வந்தார்கள். மொஹலாயர்களோ தேசத்தை ஜெயிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடனிருந்தார்கள். அலாவுதீன் பத்மினியை யடையவேண்டும், இல்லாவிடின் ராஜபுதன மலைச்சாரலில உயிரை விட்டுவிட வேண்டுமென்று விரதம் பூண்டிருந்தான்.

அநேக மாதங்களாகச் சித்தூர் மொஹலாயர்களால் தாக்கப்பட்ட போதிலும் அநேகர் மடிந்தார்கள். பீமசிங் சித்தூரைத் தன்னால் கூடியமட்டும் காப்பாற்ற முயன்றும்



முடியாமற் போயிற்று; இவனது சேனைகளில் அநேகர் கொல்லப்பட்டார்கள். பீமன்சிங் கடைசியில் சமாதானம் செய்து கொள்ளவும் சித்தூருக்காக அதிக திரவியம் கொடுக்கவும் இசைந்து அலாவுதீனுக்குச் சொல்லியனுப்பினான். இப்படி இவன் செய்தது தனது பிரியமுள்ள ராஜ்யத்தையும் அன்பு வாய்ந்த பிரஜைகளையும் காப்பாற்றுவதற்கே. கெட்ட எண்ணம் குடிகொண்ட அலாவுதீன் இவ்வித சமாதானத்திற்கு உடன்படவில்லை. ஆனால் பத்மினியைத் தனக்குக் கொடுத்து விட்டால் எல்லாம் சரியாய் விடுமென்று பதிலளிக்கவே, ராஜபுத்திர வீரர்களுக்குக் கோபம் பொங்கி, இவ்வித அவமானமான சொல்லைப் பொறுக்காமல் உயிர் போனபோதிலும் சரி, இவனுக்கு இனி இணங்கக் கூடாதெனத் தீர்மானம் செய்து கொண்டு யுத்தம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

இவ்விதம் ஒன்றரை வருஷம் யுத்தம் பலமாக இரு கக்ஷிக்கும் நடந்தது. சித்தூர் மொஹலாயர்களால் பிடிக்கப்படவில்லை. ராஜபுத்திரர்கள் அஞ்சா நெஞ்சுள்ளவர்கள்; தெய்வமே துணையென்று நம்பினவர்கள். மொஹலாயர்கள் மனந் தளர்ந்து சக்தியற்றவர்களாயும் சித்தூரை விட்டுவிட மனமில்லாதவர்களாயுமிருந்தார்கள். இவர்கள் பக்கத்திலோ அநேகர் கொல்லப்பட்டார்கள். கடைசியாகப் பத்மினியை யடையாமல் சித்தூரை விடுவது கண்ணியமல்லவென்று எண்ணிப் பீமன்சிங்கு சமாதானம் செய்துகொள்ள இஷ்டமுள்ளவனா யிருப்பதால் ஒரு தடவை பத்மினியைப் பார்க்கும்படி செய்தால் தான் உடனே சித்தூரைவிட்டுப் போவதாய்ச் சொல்லியனுப்பினான். ராஜபுத்திரர்கள் இவ்வித சங்கடத்தில் இன்னது செய்கிறதென்று தோன்றாமல் விழித்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும் இவர்கள் ஒரு யோசனை செய்தார்கள்.

வனை யாதொரு தொந்திரவும் செய்யாமல் சித்தூருக்கு அனுப்பி விடவேண்டும். என்னுடைய ஆயிரக்கணக்கான தாதிமார்கள் என் உயிருள்ளளவும் என்னிடத்திலேயே யிருக்க விரும்புகிறபடியால் அவர்களை என்னிடத்திலேயே யிருக்க விடை தரவேண்டும்'' என்று சொல்லி யனுப்பினாள். அலாவுதீன் இச் சங்கதியைக்கேட்டு மகிழ்ந்து பைத்தியம் கொண்டவன் போலிருந்தான். அவள்சொல்லி யனுப்பியவைகளுக் கெல்லாம் ஒத்துக்கொண்டு கூடிய சீக்கிரத்தில் ராணியை அழைத்து வரும்படி உத்தரவு செய்தான்.

பத்மினி மூடு பல்லக்கில் உட்கார்ந்து கோட்டையி னின்று புறப்பட்டாள். இவளுடன் ஒவ்வொரு பல்லக்கிலும் கத்தியுடனுள்ள இரண்டு வீரர்க ளடங்கிய 700 பல்லக்குகள் புறப்பட்டன. இவர்கள் கோரா என்ற சேனைத் தலைவரால் நடத்தப்பட்டார்கள். ஆனால் மகமதியர்கள் இவர்களின்மேல் சந்தேகம் கொள்ளாமல் தாதிமார்கள்தான் வருகிறார்களென்று நம்பி யிருந்தார்கள். இவர்கள் வந்தவுடன் வெகு ராஜரீக மரியாதையுடன் இவர்களை வரவழைக்கவே இவர்களும் சந்தோஷத்துடன் கூடாரத்திற்குள் சென்றார்கள்.

அலாவுதீன் பத்மினி ராணியாரைச் சந்திக்க வெகு விரைவாகச் சென்றான்; ஆனால் பத்மினி மூடு பல்லக்கி லிருந்து, ''ஓ பராக்கிரமசாலியான சுல்தானே! உன்னிடத்திற்கு வந்திருக்கிறேன். என் கணவனை எப்பொழுதும் பார்க்கப் போகிறதில்லை யாகையால், தயை செய்து கடைசியாக அவரைப் பார்க்கும்படி விடைதரவேண்டும்'' என்றாள். இவ்விதம் செய்வதற்கு யாதொரு தடையு மின்றிப் பீமன்சிங் சிறைப்பட் டிருக்கு மிடத்திற்குப்



பல்லக்கைக் கொண்டுபோகும்படி உத்தரவளித்தான். இதற்கு மூந்திய இரவில் இரண்டு ராஜ புத்திர வீரர்கள் மகமதியர்களைப்போல் வேஷம் தரித்துக்கொண்டு வாயு வேகம் மனோவேகமாய் ஓடும்படியான இரண்டு குதிரைகளுடன் பீமன்சிங்கிருக்கு மிடத்திற்குச் சமீபத்தில் வந்து காத்திருந்து எந்த நிமிஷத்தில் ஓட உத்தரவு ராணியாரிடமிருந்து வருகிறதோ அந்த க்ஷணத்தில் ஓடத் தயாராயிருந்தார்கள். பத்மினி தமது கணவரிருக்கும் கூடாரத்திற்கு வந்து பல்லக்கிலிருந்து கீழே இறங்கி, அங்கு ராணியாருக்காக காத்துக்கொண் டிருந்த சில வீரர்களுடன் உள்ளே நுழைந்தாள். உடனே பீமன்சிங் விசனமெல்லாம் காற்றாய்ப் பறந்து போயிற்று.

பீமன்சிங் தனது கூடாரத்தில் தன் அருமையான மனைவி வந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்றான். மனைவியைக் கூப்பிட்டு, ''நீ இங்கு எப்படி வந்தாய்?'' என்று கேட்டான். புத்திசாலியான பத்மினி, ''உஷ், காலதாமதமாகக் கூடாது; ஆயுதங்களைச் சரியாக தரித்துக் கொள்ளுங்கள். கூடாரத்திற்கு வெளியில் குதிரைகள் தயாராயிருக்கின்றன. நாம் தப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அன்புள்ள கணவரே! துரிதமாய் வாருங்கள், வாருங்கள்'' என்றாள். பீமன்சிங்கும் அவர் மனைவி பத்மினியும் காவலாளர்கள் தங்களைத் தடுக்கமுடியா வண்ணம் அகஸ்மாத்தாய் கூடாரத்திற்கு வெளியில் வந்து மின்னல் மின்னுவதுபோல் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு கண்களை மூடித்திறப்பதற்குள் அந்தப் பயங்கரமான இடத்திலிருந்து காற்றாய்ப் பறந்துபோய் விட்டார்கள். காவலாளிகள் இவர்களைக் காணாமல் கூக்குரலிடவே, எங்கு பார்த்தாலும் குழப்பமும் பயமுமுண்டாயின.

இதனிடையில் ராஜ புத்திர வீரர்கள் பல்லக்குகளிலிருந்து வெளிப்புறப்பட்டு மகமதியர்களை எதிர்த்தார்கள். இவ்விதம் இவர்கள் எதிர்க்கவே, பீமன்சிங்கையும் அவர் மனைவியையும் கண்டுபிடிக்க மகமதியர்களுக்கு காலமும், சாவகாசமுமில்லை. அவர்கள் சௌக்கியமாகத் தங்களிருப்பிடத்திற்குத் தங்கள் வீரர்களின் உதவியால் சென்றார்கள்.

கூடாரத்தில் ராஜபுத்திரர்கள் சிம்மத்தைப்போல் கர்ச்சித்துக்கொண்டு யுத்தம் செய்யவே, மகம்மதியர்கள் தங்கள் சேனையை அதிகமாகச் சேர்த்து அவர்களைச் சூழ்ந்துகொண்டு யுத்தம் செய்தார்கள். கோரா கொல்லப்பட்டான். உடனே அவனுடைய 12-வயதுள்ள குமாரனாகிய பாபால் என்பவன் சேனைத் தலைவனாக நின்று யுத்தத்தை நடத்தினான். ஒரு சிறு பிள்ளை யுத்தம் செய்யும்பொழுது மற்றவர்கள் சும்மா இருப்பார்களா? எல்லா ராஜ புத்திரர்களும் தங்கள் உயிரைக் கவனியாமல் சண்டை செய்து ஒரு சிறு புலிக்குட்டி மானைக் கொல்வதுபோல மகமதியர்களைக் கொன்றார்கள். மகமதியர்களில் பாதி சேனையைக் கொன்றபோதிலும் இவர்களில் அநேகர் கொல்லப்பட்டார்கள். அலாவுதீனுடைய கூடாரம் அழிக்கப்பட்டது. ராஜ புத்திரர்களின் அபார சக்தியைக் குறித்தும், பாபால் என்ற சிறு வீரனைப் பற்றியும் புகழ்ச்சியான பாடல்களை அத்தேசத்தில் இப்பொழுதும் பாடிக்கொண்டு வருகிறார்களாம்.

இந்த யுத்தம் நடந்து 1200-வருஷமாயின போதிலும் ஜனங்கள் அவ்விதத் தேசாபிமானமும், வீரத்தன்மையும் உள்ளவர்களின் பெயர்களைச் சொல்லிக் கௌரவப் படுத்திவருவது நியாயமல்லவா? பீமன்சிங் தப்பித்துக் கொண்ட பின்னும் ராஜ புத்திரர்களும் மகமதியர்களும் ஜயமடைவதில் நம்பிக்கை யற்றவர்களாக விருந்தார்கள்.



ராஜபுத்திரர்கள் மகமதியர்கள் பூண்டை வேரோடு களைய வேண்டுமென்றும், அப்படிச் செய்ய முடியாத பக்ஷத்தில் மரணமடைய வேண்டுமென்றும் தீர்மானங் கொண்டார்கள். மகமதியர்களும் சித்தூரைப் பிடிக்க வேண்டும், இல்லாவிடின் இரணகளத்தில் மரணமடையவேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஆனால் ராஜ புத்திரர்களுக்கு நம்பிக்கையில்லை. ஆயினும் இரு சேனைகளும் அகோர யுத்தம் செய்தார்கள். பீமன்சிங்கும் அவனுடைய குமாரர்களும் தைரியமாக யுத்தம் செய்தார்கள்; இவர்கள் எல்லாரும் கொல்லப்பட்டார்கள்.



பாழடைந்த சித்தூர்

பின்பு இவர்களுக்கு அதைரியமுண்டாயிற்று. மறுபடியும் மகமதியர்களை எவ்விதமாயாவது சித்தூரை விட்டுத் துரத்திவிட வேண்டுமென்ற தீர்மானத்துடன் யுத்தம் செய்தார்களேயொழிய, பயந்து ஓடிப்போகவில்லை. யுத்தம்

மும்மரமாக நடக்கையில் அநேக ராஜ புத்திர வீரர்கள் கொல்லப்பட்டார்கள். மீதியுள்ளவர்கள் சித்தூரை மறுபடியும் அடைந்து அரசாள ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன் ஒருவனிருக்கவேண்டுமென்றெண்ணிப் பீமஸிங்கினுடைய கடைசிபுத்திரனைத் தப்புவித்து, ஒரு வேலைக்காரியிடத்தில் கொடுத்து, ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வரும்படி உத்தரவு செய்து அவனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். இச் சங்கதி மகமதியர்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அந்தக் குழந்தையையும் கொன்றிருப்பார்கள். கடைசியாக மகமதியர்கள் ஜயித்தார்கள்; ராஜ புத்திர வீரர்களெல்லாரும் யுத்தகளத்தில் மடிந்தார்கள். இச் சங்கதி ராணி பத்மினிக்குத் தெரிந்தவுடன் எல்லா மாதர்களும் ராணி பத்மினியுடன் சென்று நெருப்புக் குண்டத்தில் விழுந்து உயிரை விட்டுவிட்டார்கள்.

அலாவுதின் சித்தூர் பட்டணத்திற்குள் சென்றபொழுது எல்லாம் பாழாய்க் கிடந்தன. ஒருவரும் அங்கு தென்படவில்லை. எரிந்துகொண்டிருந்த நெருப்பு அணைந்துகொண்டிருந்தது. கடைசியாக அலாவுதீன் உதவியற்ற குழந்தைகளும், சக்தியற்ற விருத்தர்களும் உள்ள பாழடைந்த சித்தூரை ஜயித்தும் சந்தோஷமடையவில்லை.

பத்மினி தன் கற்பைக் காப்பாற்றிக்கொண்டதோடு தன் கணவரிடத்தில் மிக அன்புடனிருந்து அவர் உயிரைக் காப்பாற்றினளல்லவா? இவ்வித உத்தம மாதர்கள் முன் காலத்திலிருந்திருக்கிறார்கள். இவர்களுடைய சரித்திரங்களைப் படித்து மற்றவர்களும் பின்பற்றுவார்களாக.

## 2. ராணி சம்யுக்தா

அயோத்திமா நகரத்தில் கானௌஜ் என்ற பட்டணத்தில் ஜயசந்திரன் என்ற அரசன் அரசாட்சி செய்து வந்தான். இவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு சம்யுக்தா என்று பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். இக் குழந்தை கல்வியில் மிகத் தேர்ச்சியடைந்து மகா தெய்வபக்தி உள்ளவளாயும், மிக்க அழகு பொருந்தியவளாயும், மகா சாமார்த்திய சாலியாயும், நற்குணமமைந்தவளாயும் இருந்தாள். இவளை அநேக ராஜாக்கள் மணம்புரிய முயன்றார்கள். அதனால் இவளுடைய தகப்பனார் சுயம்வரம் ஏற்படுத்தி, முன் காலத்திய வழக்கப் பிரகாரம் பற்பல தேசத்து ராஜாக்களை வரவழைத்து, அவர்களில் யார் தமது குமாரத்திக்கு இஷ்டமோ அவரை அவள் மணந்துகொள்ள தீர்மானித்தார். அவ்விதமே அவன் சுயம்வரத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்து, எல்லா ராஜாக்களையும் அவ்விடத்திற்கு வரும்படி கேட்டுக்கொண்டான். இந்த ஜயசந்திரன் மகா வீரன்; ஆனது பற்றி எல்லாரும் பயந்து உடனே மரியாதையாக வந்து விட்டார்கள். டெல்லிமா நகரத்து பிருதிவி ராஜா மாத்திரம் வரவில்லை. ஜயசந்திரருக்கு மகா கோபமேற்பட்டு அவனைப் பிராண சத்துருவாக எண்ணிக்கொண்டு அவனைப்போன்ற ஒரு பிரதிமை செய்து ராஜாக்கள் நிறைந்துள்ள மண்டபத்தில் வாசற்படியில் வைத்தார்.



பிருதிவி ராஜாவும், ராணி சம்யுக்தையு



இந்தப் பிரதிமைக்கு வேலைக்காரன் உடுப்புகளையும் போட்டு வைத்தார். இப்படிச் செய்தது அவனை அவமானம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தால்தான்.

பற்பல தேசத்து மன்னர்கள் திவ்யாபரணங்களுடன் கூடியிருக்கும்படியான மண்டபத்திற்குள் தனது அருமையான குமாரத்தியை வரவழைத்து "உனக்கிஷ்டமான புருஷனுக்கு மாலையிடு" என அவள் தகப்பனர் சொன்னர்.

சம்யுக்தா தனது தோழிமார்களோடு முகமலர்ச்சியுடன் சபாமண்டபத்திற்குள் நுழைந்து அன்னம்போல் நடந்து வந்தாள். அப்பொழுது அவள் கழுத்தில் நவரத்னங்களால் இழைக்கப்பட்ட ஒரு மாலை யிருந்தது. அது எங்கும் பிரகாசித்துக்கொண் டிருந்தது. இதைவிட அவள் முகம் இன்னும் அதிக பிரகாசமா யிருப்பதாகத் தோன்றிற்று. எல்லாரும் மௌனமா யிருந்துகொண்டு யாருக்கு இந்த மகாலக்ஷ்மி மாலை யிடுவாளோ என்ற ஏக்கமுடையவர்களாய் அந்த ராஜ கன்னிகையைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அவள் அங்கு வந்து ஒரு ராணியைப்போல் நின்று சுற்றிலுமுள்ள ராஜாக்களைப் பார்த்தாள்.

பின்பு மெதுவாக நடந்து ஒவ்வொருவரையும் பார்த்துக்கொண்டே வரும்பொழுது கடைசியில் பிருதிவி ராஜாவின் பிரதிமை வைக்கப்பட் டிருந்ததைக் கண்டாள். பின்னல் திரும்பிப் பாராமலும் ராஜாக்கள் என்ன சொல்லுவார்களோ அல்லது என்ன நினைப்பார்களோ வென்று அவள் கொஞ்சமேனும் மனதில் எண்ணமலும், தன் கழுத்தில் அணிந்திருந்த நவரத்ன மாலையை எடுத்து மண்ணினல் செய்யப்பட்டிருந்த பிருதிவி ராஜாவின் பிரதிமையின் கழுத்தில் சாத்தினள். உடனே "ஐயோ!

இப்படிச் செய்யலாமா! அவருக்கா மாலையிடுவது? என்ன அநியாயம்?'' என்று யாவரும் கூக்குரலிட்டார்கள். ஜயசந்திரன் கோபத்தால் வெறிபிடித்தவன்போ லிருந்தான். தன் குமாரத்தி செய்த அவமானத்தைத் தாங்க முடியாமல் கடைசியாக மகா கோபாவேசத்துடன் தனது மந்திரிமார்களைக் கூப்பிட்டுத் தனது குமாரத்தியை உடனே சிறைச்சாலையில் அடைக்கும்படி உத்தரவு செய்தான், மேலும் அவள் தனது குற்றத்தைப் பற்றியும் நிந்தையைப்பற்றியும் மூடத்தனத்தைப் பற்றியும் வருந்துகிற வரையிலும் சிறையிலேயே யிருக்கவேண்டும் என உத்தரவளித்தான். உடனே அவளைச் சிறையில் அடைத்து விட்டார்கள். அவள் அங்கே விசனப்பட்டுக் கொண்டு தனது கணவனை நினைத்துக்கொண் டிருந்தாள். அங்கு வந்திருந்த ராஜாக்கள் எல்லாரும் தங்கள் தேசங்களுக்குச் சென்றார்கள்.

இச் சமாசாரம் முழுவதும் டெல்லிக் கெட்டியது. கானௌஜில் நடந்த விஷயங்களும், சம்யுக்தாவைக் கைதி செய்த செய்கையும், அவளுடைய தைரியமான நடத்தைக்காக அவள் தகப்பன் இட்ட தண்டனை முதலியவைகளும் பிருதிவி ராஜனுக்குத் தெரிந்தவுடன் அச் சிறுமியின் கஷ்டத்திற்காக மிக வருந்தி உடனே தனது சேனைத் தலைவனைக் கூப்பிட்டு, ஜயசந்திரனுடைய ராஜ்யத்துக்கு யுத்தத்திற்குப் போகச் சன்னத்தமா யிருக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்தான். தானும் ஆயுதபாணியாய்த் தன் சேனைகளுடன் சென்று ஜயசந்திரனுடன் யுத்தம் செய்து கானௌஜ் ராஜனைத்தோற்கடித்துப் பிருதிவி அவன் குமாரத்தியைப்போய்ப் பார்த்தவுடன் அவள் ஆனந்தங்கொண்டு புன்சிரிப்புடன் அவனைத் தழுவிக் கொண்டாள். அவனும் அவளுடன் சில நிமிஷம் பேசிவிட்டு



நமது ராஜ்யத்திற்குப்போவோம் என்று சொல்லி, அவளை இட்டுக்கொண்டு ஜயபேரிகையுடன் தன் டெல்லிமா நகருக்குச் சென்று மிகவைபவத்துடன் சம்யுக்தாவை விவாகம் செய்துகொண்டான்.

ஜயசந்திரன் டெல்லி ராஜனோடு மறுபடியும் சண்டைக்குப் போகத் துணியவில்லை. ஏனெனில் முதலில் இப் பிருதிவியுடன் போர் செய்து தோல்வியடைந்தானல்லவா? ஆயினும் அவன் பிருதிவியின் விரோதத்தையும், அவன் செய்த நிந்தையையும் மறக்கவில்லை. இதற்குப் பதிலாக எவ்விதமாயாவது அவனுக்குக் கெடுதல் செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தான். இவன் மனத்தில் அவ்வளவு கோபம் குடிகொண்டிருந்தது.

இது இப்படியிருக்க, பயங்கரமுள்ள மகமதிய அரசனான மகமதுகோரி என்பவன் இந்தியாவுக்கு வந்து பல விடங்களில் கொள்ளையடித்துக் கோயில்களை யெல்லாம் இடித்துக் குட்டை, குளம் முதலியவைகளைத் தூர்த்துத் துவம்சம் செய்தான். மேலும் பரிசுத்தமான ஸ்திரீகளைச் சிறைபடுத்தியும், கற்பை அழித்தும் அடிமைகளாக வைத்துக்கொண்டான். மகமதுகோரி சென்ற விடமெல்லாம் பேய் பிடித்த இடம் போலிருந்ததும் தவிர அகௌரவமும், மானமும் அதிகரித்திருந்தன. இவர்களை எவ்விதமாகவாவது தண்டித்து இவர்களிருப்பிடத்திற்கு ஓட்டிவிட வேண்டுமென்று பிருதிவி ராஜன் எண்ணி, எல்லா ராஜாக்களையும் தங்கள் ஸ்திரீகளின் கௌரவத்தைக் காப்பதற்கும், கோயில்களைப் புனிதமாக்கவும், தேசத்திற்குச் சுயாதீனமுண்டாக்கவும் உதவி செய்யக் கூப்பிட்டான். ஜயசந்திரனாகிய சத்துருவைத் தவிர யாவரும் வந்தார்கள். இவன் தனது துவேஷத்தை பாராட்டினானே தவிர தேச க்ஷேமத்தையும் மானிடர் தர்மத்தையும் எண்ணவே

யில்லை. ஆனால் விரோதியுடன் சேராமல் தனிமையாக இவனிருந்தே இவனுடைய கௌரவத்தைக் கொஞ்சம் காண்பித்தது. டெல்லி நகரத்துக்கு எண்பது மைல் தூரத்திலுள்ள திரௌரி என்ற விடத்தில் மகமதியர்களுக்கும், இந்துக்களுக்கும் யுத்தம் நடந்தது. மகமதுகோரி தோல்வியடைந்தான். அநேகர் இறந்தார்கள். மீதியுள்ள சேனையுடன் செத்தோம் பிழைத்தோம் என்று மகமது கோரி ஓடிப்போய்விட்டான்.

இவ்விதம் பிருதிவிக்கு ஜயமுண்டானது ஜயசந்திரனுக்கு எரிகிற நெருப்பில் நெய்யை வார்த்தாற்போல கோபமதிகரித்தது. தனது விரோதியின் ஜயத்தைக் கண்டு பொறாமை கொண்டான். ஜய முண்டாகாமலிருந்தால் வெகு சந்தோஷப்பட்டிருப்பான். ஆகையால் இவனுக்குக் கோபமும், விரோதமும் அதிகரித்தன. அவனுக்கு எவ்விதத்திலாவது கெடுதல் செய்யவேண்டுமென்று பல துர்யோசனைகளைச் செய்துகொண்டிருந்தான். பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணமானது பாப கிருத்தியங்களைச் செய்யும்படி தூண்டிற்று. அது அவனை அக்கிரமமும், அவமானமுமுள்ள காரியங்களைச் செய்யும்படி செய்தது. மகமதுகோரி யிருக்கும்படியான தேசத்திற்கு ஒரு தூதனிடத்தில் பின் வருமாறு சொல்லியனுப்பினான். 'மறுபடியும் யுத்தத்திற்காக இந்தியாவுக்கு வர வேண்டு'மென்று வேண்டிக்கொண்டான். தான் அவனுக்கு உதவி செய்வதாக வாக்களித்தான். பகிரங்கமாகவே தான் மகமது கோரியுடன் சேருவதாகச் சொன்னான். 'பிருதிவி ராஜனுடன் சேர்ந்திருந்த ராஜாக்களைக் கலைத்து விட்டேன். பிருதிவி தனிமையாகத்தான் சண்டைசெய்ய வேண்டு'மென்றான். இவ்விதம் தூது சென்றவன் மகமது கோரியினிடம் சொல்ல அவன் கேட்டுப் பழம் நழுவிப்



பாலில் விழுந்தாற்போலச் சந்தோஷப்பட்டு நல்ல சமயமென்று எண்ணி 120,000 குதிரைப் படைகளைச் சேர்த்து 1193-வது வருஷம் இந்தியாவுக்கு வந்தான். ஜயசந்திரன் சந்தோஷத்துடனும் கர்வத்துடனும் அவன் வரவை எதிர்பார்த்திருந்தான். ஏனென்றால் தனது விரோதி அபஜயமடைவான். தனக்கு ஜயம் கிடைக்கும் என்ற பேராசை அவனிடத்திலிருந்தது.

ஜயசந்திரன் அந்த நகரம் கொள்ளையடிக்கப்படவேண்டுமென்றும், அவனை அகௌரவப்படுத்த வேண்டுமென்றும் எண்ணி, இந்தியாவின் பெரிய சத்துருவை வரவழைத்தவுடன் சும்மா இருக்கவில்லை. அவன் சிற்றரசர்களுக்குள் கலகங்களை உண்டாக்கிப் பிருதிவியுடன் சேராமலிருக்க என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்துவிட்டான். பிருதிவி ராஜன் தன்னைச் சகோதர ராஜாக்கள் மறந்துவிட்டதைக் கண்டான். அவர்களெல்லாரும் இவனைத் தனிமையாகவே சண்டை செய்யும்படி விட்டார்கள். பாபிஷ்டனாகிய ஜயசந்திரன் பிருதிவியினுடைய விரோதியைத் தனது சேனைகளுடன் பகிரங்கமாய்ச் சேர யமுனா நதிக் கரைக்குச் சென்று, மகமது கோரியையும் அவன் சேனைகளையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். தன் கூடாரத்தில் இவன் மாத்திரம் பிருதிவியைத் தோற்கடித்துச் சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்று கனவு கண்டுகொண்டிருந்தான்.

ஒரு போர்ச் சேவகன் உள்ளே வந்து "மகாராஜா! விரோதியினுடைய கூடாரத்திலிருந்து தங்களுடன் பேச ஒரு சிறிய வாலிப யுத்தவீரன் வந்திருக்கிறான்" என்றான்.

ஜயசந்திரன் "ஒரு வாலிப யுத்த வீரனா" என்று ஆச்சரியப்பட்டான்.

போர்ச் சேவகன் —"ஆம்! மகாராஜா. அவன் எதிரியின் கூடாரத்திலிருந்து வந்திருக்கிறான்?"

"அவனுக்கு என்ன வேண்டும்?"

போர்ச்சேவகன் — "அவன் தூது வந்திருக்கிறானாம். ஆகையால் அவனை இங்கு அழைத்து வந்திருக்கிறேன், மகாராஜா!"

ஜயசந்திரன் — "அவனை இங்கு அழைத்துவர வேண்டாம்; நீ வெளியில் காத்திரு. அவனை மாத்திரம் இங்கு அனுப்பு."

உடனே ஜயசந்திரன் கத்தியை எடுக்க எழுந்தான்.

யுத்த வீரன் வந்தான்! ஜயசந்திரனுக்கு மரியாதையாக வந்தனம் செய்து அவன் காலில் விழுந்தான்.

ஜயசந்திரன் "உனக்கு என்ன வேண்டு" மென்று ஆச்சரியத்துடன் கேட்டான.

"தகப்பனாரே! தங்கள் ஆசிர்வாதத்தைப்பெற நான் தங்களிடம் வந்திருக்கிறேன். என் தேசத்திற்காக நான் சண்டைசெய்யப் போகிறேன்; நான் தங்கள் ஆசிர்வாதம் பெற்றுத்தான் விரோதிகளுடன் யுத்தம் ஆரம்பிக்கவேண்டும். ஏனெனில் பிதாவினுடைய ஆசிர்வாதமின்றி ஜயம் பெறுவது கஷ்டம்" என்று மாறு வேஷத்துடன் இருந்த சம்யுக்தா சொன்னாள்.

ஜயசந்திரன் ஐந்து நிமிஷம் வரையில் ஸ்தம்பம் போல் பிரமித்து நின்றான். பின்பு ஏதோ சொல்ல வாயெடுத்தான்; ஆனால் அவன் நிறுத்தி விட்டான். பின்னும் ஐந்து நிமிஷம் அவளுடன் தன் குமாரத்தியைப் பார்த்தான். பின்பு அவன், "நீ தானே இதற்கெல்லாம் காரணம். காரியம் மிஞ்சிப்போயிற்று, நீ போய்விடு" என்று சொன்னான்.



"தகப்பனாரே, எனது பிரியமுள்ள தகப்பனாரே, தங்கள் தேசத்தைப் பக்ஷத்துடன் கவனியுங்கள்; அகௌரவப்படுத்தப்பட்டவும், பரிதாபமானவும், உதவியற்றவுமான ஸ்திரீகளைக் கவனியுங்கள்; இடிக்கப்பட்ட நமது தேவாலயங்களைக் கவனியுங்கள்' என்று கூச்சலிட்டுக்கொண்டு தன் இரு கைகளாலும் தனது தகப்பன் பாதங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள்.

"பெண்ணே! நில், காரியம் மிஞ்சிப்போய் விட்டது; நீ போய்விடு" என்று ஜயசந்திரன் சொன்னான்.

சம்யுக்தை எழுந்து, "எனது ஸ்தோத்திரங்களெல்லாம் வீணா?" என்று கேட்டாள். மறுபடியும் ஒரு கோபமுள்ள பெண் சிங்கம்போல் தன் தகப்பனை நோக்கி "நமது முன்னோர்களின் பெயரைக் கெடுத்து அவர்களுக்கு அவமானத்தைத் தாங்கள் கொண்டுவருவதற்கு முன் தங்களுடைய குமாரத்தியைக் கொன்று விடுவது நலம். அவமானம்! தகப்பனாரே, அவமானம்; மகமதியர்களுடன் சேர்ந்து தங்கள் தேசத்தை விற்று விடலாமா?" என்றாள்.

ஜயசந்திரன் உடனே அந்த வீரன் ஜாக்கிரதையாகத் தனது கூடாரத்திற்குப்போய்ச் சேரத் தனது வீரர்களுக்கு உத்தரவு செய்துவிட்டுத் தான் குதிரைமேலேறி மகம்மது கோரியிருக்கும் கூடாரத்திற்குச் சென்றான். சம்யுக்தா கால்மணிநேரம் வரையில் காத்திருந்து வெளியில் வந்து தனது தகப்பனாரைத் தேடினாள். அவர் அகப்படவில்லை. பின்பு கூடாரத்தின் வழியாகத் தனது கணவரிடத்திற்குத் திரும்பிச் சென்றாள்.

பிருதிவிராஜன் தனக்கு ஜயம் கிடைப்பது அரிதென்று தெரிந்துகொண்டபோதிலும் தைரியத்தை விடவில்லை. அவ்விதமே சம்யுக்தாவுக்கும் புலப்பட்டது. பிருதிவிராஜன் தன் அருமையான மனைவியைப் பார்த்து, "என் அன்புள்ள மனைவியே! என்னுயிருள்ளளவும் யுத்தகளத்தை விட்டு வரமாட்டேன். அவ்விதமே நமது சேனைகளும் செய்வார்களென்று நிச்சயமா யிருக்கிறேன்" என்றான்.

சம்யுக்தா, "எனது அன்பின் களஞ்சியமே! அவ்விதம் செய்வீர்களென்று எனக்குத் தெரியாதா? அவ்விதமே நானும் டெல்லிமாநகருக்குச் சென்று நமது மாதர்களின் கௌரவத்தைக் காப்பாற்ற உத்தரவு கொடுங்கள். நான் போகாவிடில் அவர்கள் தைரியத்தை யிழந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் சக்தியற்றவர்களா யிருப்பார்கள். என் தகப்பனார் தம் சிநேகிதர்களுடன் டெல்லிக்கு வரும்பொழுது ஓர் உயிருள்ள ஸ்திரீயையும் காண்ப தரிது; இதைப்பற்றி மாத்திரம் நிச்சயமாயிருங்கள். கடவுள்தான் நமக்குத் துணை" என்று சொல்லியபின் கணவர் உத்தரவு பெற்றுக்கொண்டு தன் சகோதரிகளின் கௌரவத்தைக் காப்பாற்ற விரைவாகச் சென்றாள்.

ராணியாய் இருந்தும் தன் அந்தஸ்தையும் தேக சிரமத்தையும் பாராமல் தன் சகோதரிகளின் க்ஷேமத்தை நாடி இம்மகாராணி சென்றது இவ்விராணியின் பெருமையையும் இராணி குடிகளிடத்து கொண்டுள்ள அன்பையும் காண்பிக்கின்றதல்லவா? பெரிய அந்தஸ்திலுள்ள மாதர்கள் இம்மாதைப்போன்று தங்களது சகோதரிகளுக்கு எவ்வளவோ உதவிகளைப்புரிந்து வரலாம். மற்ற மத்திய வகுப்பாரும் ஒற்றுமையுடன் வீண் பெருமை பாராட்டாமல் ஏழைகளிடத்தில் பிரியமாயிருந்து தங்களாலியன்ற உத



வியைப் புரிந்து வரலாம். சாதாரணமாகத் திரவியமுள்ள மாதர்கள் பெருமையைப் பற்றியும், நகை முதலியவைகள் செய்வதைப்பற்றியும் பேச இஷ்டமுள்ளவர்களா யிருக்கிறார்களே யொழிய ஏழைகளின் க்ஷேமத்தைப் பற்றியும், உலக விஷயங்களைப் பற்றியும், தங்கள் புத்திரி புத்திரர்கள் கல்வி விஷயங்களைப்பற்றியும் கவலையுடன் பேச இஷ்டமுள்ளவர்களாய் இருப்பதாகக் காணப்படவில்லை. இனியாகிலும் அப்படிக்கின்றி உறவினர், மித்திரர்கள் முதலியவர்களுடன் சந்தோஷமாக எப்படி நடந்து வருகிறார்களோ அவ்விதமே ஏழைகளிடத்திலும் நடந்துவர முயல வேண்டும். அப்பொழுது கடவுளுக்குத் திருப்தியுண்டாவதுடன் தேசத்திற்கும் க்ஷேமமுண்டாகும்.

1193-ம் வருஷத்திலேயே திரௌரி என்ற விடத்திற்கு மகமது கோரி 120,000 குதிரைப்படைகளுடன் வந்தான். ஜயசந்திரனும் தன் சேனையுடன் சென்று மகமது கோரிக்கு நல்வரவு கூறினான். பிருதிவிராஜனும் தன் பலத்த சேனைகளுடன் வந்து நின்றான். இரு வகுப்பாரில் யார் முதலில் யுத்தத்தை ஆரம்பிக்கிறதென யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் இருவருக்குமுள்ள சேனைகள் பலமுள்ளவைகளே. யுத்தம் செய்யவேண்டுமென்றால் கொஞ்சம் யோசனையாகத்தானிருக்கும். இவ்விதமிருக்கையில் சம்யுக்தா டெல்லிமாநகரத்தில் விரதம்பூண்டு ஜலபானம் மாத்திரம் செய்து கொண்டு, துறவியைப்போல் கடவுளைத் தியானம் பண்ணிக்கொண்டேயிருந்தாள். அவளுடைய நகரத்திலுள்ள எல்லாச் சகோதரிகளும் அம்மகா பதிவிரதா சிரோமணியைப் பின்தொடர்ந்து அம்மாதிரியே விரதம் பூண்டவர்களா யிருந்தார்கள். இவர்களெல்லாரும் ஒரு நிமிஷத்தில் உயிரைத் துறந்துவிட ஆயத்தமா யிருந்தார்கள்.

ராணியார், பெரிய அந்தஸ்திலுள்ள மாதர்கள், ஏழை ஸ்திரீகள் முதலியவர்களெல்லாரும் இரவும் பகலும் தங்கள் ராஜனுக்கு ஜயமுண்டாக வேண்டுமென்றும், கோயில்களெல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமென்றும் கடவுளை ஸ்தோத்திரம் விடாது செய்தே வந்தார்கள். அத்தேசத்திய மாதர்களுக்குந் தங்கள் ராஜ்யத்தின்மீது அவ்வளவு அபிமானமிருந்தது!

சிறிதுநேரம் சென்றபின் இருதிறத்தாரும் யுத்தத்திற்கு ஆரம்பித்தார்கள். இருசேனைவீரர்களும் பயங்கரமாக யுத்தம்செய்து பலரைக் கொன்றார்கள். கடைசியாக பிருதிவிராஜன் தோல்வியடைந்து கொல்லப்பட்டான். இம்மகா வீரனுடைய தேகம் இரத்தத்தால் மூடப்பட்டிருந்தது. என்செய்வது? யாவரும் துக்கத்துடன் மடிந்தார்கள். ஒருவனாவது தன்னுயிர் போகும் வரையில் சரணாகதியுமடையவில்லை; மன்னிப்பும் கேட்கவில்லை. வெகு வீராவேசத்துடன் யுத்தம் செய்து ரணகளத்தில் மடிந்தனர். மகமதுகோரி தனக்குப் பூர்ண ஜயமுண்டானதைப் பற்றி மிக மகிழ்ந்தான். ஜயசந்திரனுக்கு ஒருவரும் எதிர்பாராத ஜயமுண்டானதைப்பற்றிச் சந்தோஷம் பொங்கிற்று. ஆனால் ஜயசந்திரன் எவ்விதத்தாலோ ஏமாற்றப்பட்டான். ஜயமுண்டானால் தான் வெகு சௌக்கியமாக இருக்கலாமென்று நினைத்தான். இப்பொழுதோ ஜயமுண்டானதும் அவன் மிகத் துக்கப்பட்டான்.

இறந்துபோனவர்களில் சிலரைக் கொளுத்திவிட்டும், சிலரைப் புதைத்துவிட்டும் பின்பு இவர்கள் டெல்லிமாநகருக்குச் சென்றார்கள். தங்கள் தேசத்து அரசனுக்குத் தோல்வி உண்டான சங்கதியைக் கேட்ட மாதர்களெல்லாரும் அக்கினியில் விழுந்தார்கள். எங்கு பார்த்தாலும் நெருப்பு எரிந்து கொண்டிருந்ததே தவிர நெருப்



பில்லாத இடமில்லை. எங்கு பார்த்தாலும் பிண நாற்றமே. சம்யுக்தாவைப் பார்க்க ஜயசந்திரன் சென்றான். சம்யுக்தா அக்கினிப் பிரவேசமாய்விட்டாள் என்ற சங்கதி தெரிந்ததும் மனதில் ஒரு பெருத்த விசாரமுண்டாயிற்று. இவ்விதமாக மாதர்களெல்லாரும் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றுவதன் பொருட்டு நெருப்பில் விழுந்து தங்கள் உயிரை இழந்தார்கள்.

ஜயசந்திரன் மிக விசனத்துடன் தன் தேசத்திற்குத் திரும்பிப் போனான். அஜ்மீர், டெல்லி என்ற நகரங்களைக் கைவசமாக்கிக்கொண்டு குட்புடீன் என்ற அடிமையை டெல்லியில் கவர்னராக நியமித்துவிட்டு மகமது கோரி தன் தேசத்திற்குச் சென்றான். அடுத்த வருஷத்தில் அதாவது 1194-ம் வருஷத்தில் ஜயசந்திரனுடைய நண்பனாகிய மகமது கோரி இந்தியாவுக்குத் திரும்பி வந்து ஜயசந்திரனை எதிர்த்து அவனைத் தோற்கடித்ததுந் தவிர அவனைக் கொன்று அவன் ராஜ்யத்தை டெல்லியுடன் சேர்த்துவிட்டான்.

"கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற்கிணங்க இவன் பிருதிவிக்குத் தீங்கு செய்யவேண்டும் என்று நினைத்து அவனுக்குக் கெடுதல்களைச் செய்தமையால் தானே அழியவேண்டியதாயிற்று.

மாதர்களோ மகமதியர்களுடைய கையில் அகப்படாமல் தங்கள் உயிர்களை அக்கினிபகவானுக்கு ஆகுதி கொடுத்தார்கள். எப்பொழுதும் மாதர்கள் மகா பரிமான மனதையுடையவர்கள். ஆவ்விதம் ராணி சம்யுக்தாவுமிருந்து தெய்வபதம் சேர்ந்தாள்.

# 3. பன்னா

இராஜபுதனத்தில் மீவார் ராஜ்யாதிபதியாகிய சங்காம சிங் மகா கீர்த்திபெற்ற அரசர்களிலொருவரென்று யாவராலும் மதிக்கப்பெற்று வந்தார். ஆனால் இவர் தம்மிடத்திலுள்ள ஒரு வேலைக்காரனாகிய பனாபீர் சொன்னவண்ணம் செய்துவந்தார். அவனைப் பிரதான மந்திரியாகவும் நியமித்தார். இழிந்த குலத்திற் பிறந்தவர்கள் உயர்ந்த அந்தஸ்திற்கு வந்தால் சில சமயங்களில் தங்களையே மறந்துபோவது வழக்கம். தங்களுக்கு நன்மை செய்தவர்களைக் கனவிலும் நினையார்கள். இவன் துராசையும், பஞ்சமா பாதகம் முதலிய குணங்களும் அமைந்த மனிதனாயிருந்தான். இப்படியிருந்தும் இவனை அரசன் முழுவதும் நம்பியிருந்தானே தவிர இவன்மேல் சந்தேகப்படவேயில்லை. தன் மந்திரி மகா யோக்கியனென்றும் அபார சக்தியுள்ளவனென்றும் எண்ணியிருந்தான். இவன் மரணமடையும் தறுவாயில் பனாபீரைத் தன் குமாரனுக்கு ஆதரணைக் கர்த்தனாக நியமித்தான். அப்பொழுது இவனுடைய குமாரன் உதயசிங்குக்கு வயது ஆறுதான்.

இக் குழந்தைக்கு ஒரு சாமானிய ராஜ பு
மாதை ஒரு தாதியாக நியமித்து இக் குழந்தையை
வரப் பாதுகாத்து வரும்படி கட்டளையிட்டான்.
ராஜ குமாரனைத் தன் குழந்தையைப் போலப் பாவி,
அதிக பிரியத்துடன் நாளொரு மேனியும் பொழுதொ,
வண்ணமுமாக வளர்த்து வந்தாள். இவள் தாய், பாட்



முதலியவர்கள் இந்த ராஜ கிருகத்தில் தலைமுறை தலைமுறையாக அலுவல் செய்துவந்தமையால், இவளுக்கு இந்த ராஜ கிருகத்திலுள்ளவர்களிடத்தில் அன்பு மிகுந்திருந்தது. இது சகஜமே. இவளைச் சேர்ந்தவர்கள் விசுவாசமாயும், நன்றியுள்ளவர்களாயுமிருந்து யாவரும் அதிசயிக்கும்படியாய் வியப்பான காரியங்களைச் செய்துவந்தார்கள். ஆயினும் இந்தப் பன்னா என்ற தாதியின் ஆத்மதானம், ராஜாபிமானம், உண்மையான பக்தி முதலியவைகளை ஒருவருக்கும் நிச்சயமாய் ஒப்பிடவே முடியாது. இவள் தன் முன்னோர்களைவிட மிகப் பரிசுத்தமான இருதயத்தை அடைந்திருந்தாள். அடங்காத பேராசையுள்ள பனாபீர் மந்திரி வேலையிலிருப்பது அவனுக்குத் திருப்தியாயில்லை.

இவனுக்கு அதிக ஆசையுண்டாயிற்று. அதாவது மீவார் ராஜ்யத்திற்கே தான் அரசனாக விரும்பினான்; இவன் ஒரு இழிந்தகுல ஏழை வேலைக்காரியின் புத்திரன். இவனுக்கு கல்வி வாசனையுமில்லை; நற்சகவாசமுமில்லை. இவ்விதமிருந்தவனுக்குக் கடவுளின் கடாக்ஷத்தால் "மீவாருக்கு ஆதரணைக் கர்த்தன்" என்ற வேலையும் கிடைத்தது. இத்துடன் தன் காரியத்தைச் செவ்வனே பார்த்துவரலாமல்லவா? இப்படிக்கின்றி துராசை மேலிட்டவனாய்த் திருப்தியடையாமல் ஏனோதானோ துர் எண்ணங்களை யெல்லாம் எண்ணினான். தான் ராஜன் ஆகவேண்டுமென்றும், அப்பட்டம் தன் வமிசத்துக்கு வரவேண்டுமென்றும் விரும்பி அதற்குத் தக்கபடி பிரயத்தனப்பட்டான்.

'ஆனால் ராஜகுமாரனாகிய உதயசிங் உயிருடனிருக்கிறானே. என்ன செய்கிறது? இவன் உயிருள்ளளவும் நமக்கு ராஜ்யாதிகாரம் கிடைப்பது அரிது' என்று

யோசித்தான். சாதாரணமாக மனிதர்களிலே துஷ்டர்கள் எப்பொழுதும் கெட்டதையே எண்ணிக்கொண்டிருப்பார்கள். புண்ணியத்தையும், பாவத்தையும் கவனிக்கமாட்டார்கள், சத்தியத்தை நினைக்க மாட்டார்கள். நல்லவர்களைச் சேர்ந்து சத்விஷயங்களைத் தெரிந்து கொள்ள மாட்டார்கள், பிறருடைய திரவியம் முதலியவைகளை அபகரிப்பார்கள். அவர்களுக்கு இரக்க மென்பதே யிராது. கொலைசெய்யவும் அஞ்சார்கள். இவ்வித அஞ்சாத நெஞ்சுடைய துஷ்டனான பனுபீருக்கு துர் ஆசை அதிகரிக்கவே, ராஜகுமாரனைக் கொல்லுவதுதான் நலமென்று தீர்மானம் செய்து கொண்டான். இவ்வித அக்கிரமச் செயலைச் செய்ய ஒருவரையும் நியமிக்கவில்லை. ஏனெனில் இவனுக்கு ஒருவரிடத்திலும் நம்பிக்கையில்லை; இச்சங்கதி வெளிவந்து விட்டால் எங்கு தன் உயிருக்கே கெடுதி வந்து விடுமோ என்கிற பயமுமிருந்தது. ராஜ புத்திரர்கள் சத்தியத்திற் குட்பட்டவர்க ளாகையால் இவன் இவ்விதமான கெட்ட எண்ணங்கொண்டிருக்கிறான் என்ற சங்கதி தெரிந்துவிட்டால் இவனை உடனே கொலை செய்து விடுவார்கள் என்பதும் இப்பாவிக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் இது ஒருவருக்கும் தெரியாமலுமிருக்க வேண்டும். தானே இக்காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்று எண்ணினான். கொலை நடந்த பின் எப்படியாவது புத்தியில்லாத ராஜபுத்திரர்களைச் சரிப்படுத்தி விடலாமென்றும் எண்ணினான்.

இப்பாதகனுடைய துர் ஆசை பிடித்த மனத்தையும், சிம்மாசனத்தை அடைய இவனுக்கு இடைஞ்சலா யுள்ளதை நீக்க இவன் பகீரதபிரயத்தனம் செய்து வருவதையும் ஒருவரும் தெரிந்துகொள்ள வில்லை. ஆனால் அந்த ராஜ அரண்மனையில் இவன் இப்பேர்ப்பட்ட மனித



னென்று அறிந்தவன் ஒருவன் இருந்தான். இவன் மனதில் உதித்திருக்கும்படியான கெட்ட எண்ண மின்னதென்றும் அவனுக்குத் தெரியும். அவன்தான் ராஜகிருகத்து அம்பட்டன். பன்னாவைப் போலவே அவனும் தலைமுறை தலைமுறையாக வேலைசெய்து வந்தவர்களின் பந்து. அவனும் வெகு வருஷங்களாக ராஜ கிருகத்தில் வேலை செய்து வருகிறான். பனுபீர் இவ்விதம் திடீரென்று உயர்ந்த பதவிக்கு வந்தது அவனுக்குச் சம்மதமில்லை. ஏனெனில் எழுத்துவாசனை யில்லாதவனும், நல்ல வம்சத்தானல்லாதவனுமான பனுபீருக்கு உயர்ந்த பதவி கிடைத்தது குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்ததுபோல் இருக்கிறது என்று அபிப்பிராயப் பட்டான்.

பன்னா ஒருநாள் இரவில் 10 மணிக்கு ராஜகுமாரனைத் தூங்கும்படி செய்துவிட்டுத் தனக்கு நித்திரை வாராமையால் துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது அரண்மனை அமைதியா யிருந்தது. சப்தம் ஒன்றும் கேட்கவேயில்லை. திடீரென்று அவளிருக்கும்படியான இடத்திற்கு ஒருவன் வரும் காலடிச் சத்தம் கேட்டது. “இந்த நிசிவேளையில் தனிமையாக இவ்விடத்திற்குத் துணிந்து வருபவன் யார்” என்று அவள் யோசிக்குமளவில், அவள் முன் யோக்கியமுள்ள அம்பட்டன் வந்து நின்றான். “என்ன சமாசாரம் ஏதாவது விசேஷம் உண்டா, அண்ணா?” வென்று கேட்டாள். “ஆம், விசேஷம் உண்டு. ஆனால் அது பயங்கரமான சமாசாரம்” என்றான் “அது என்ன? தயைசெய்து சொல்லும்” என்றாள் பன்னா.

“இப்பொழுது பனுபீர் ராஜகுமாரனைக் கொல்ல இங்கு சீக்கிரத்தில் வருவான்” என்றான் அம்பட்டன்.

அவள் "நான் பயப்பட்ட மாதிரியே நிமை சம்பவிக்கும்போலிருக்கிறதே! அந்தப் பாவியை நான் ஒருபொழுதும் நல்லவனென்று எண்ணவேயில்லை. ஆனால் இப்பொழுது நாம் எப்படியாவது நமது அருமையான ராஜகுமாரனைக் காப்பாற்றவேண்டும்" என்றாள்.

"நாம் என்ன செய்யமுடியும்? இரவாகவுமிருக்கிறது. பன்னா! நீ ஏதாவது யோசனை சொல்லம்மா" என்றான் அம்பட்டன்.

பன்னா மௌனமாகச் சிறிதுநேரமிருந்து, "அண்ணா! ராஜகுமாரனைப் பத்திரமான விடத்தில் எவ்விதமாவது கொண்டுபோய் வைக்கவேண்டும். இந்த அரண்மனையில் இனி ஒரு நிமிஷம்கூட குழந்தையை வைத்திருக்கக் கூடா" தென்றாள். "ஐயோ! அந்தப் பாவி அரண்மனை முழுவதும் பாரா வைத்திருக்கிறான். உருவிய கத்தியுடன் சேவகர்களிருக்கிறார்களே, மேலும் இன்று இராத்திரி ஒருவரும் குழந்தையுடன் வெளியே செல்லக் கூடாதென ஒரு உத்தரவும் செய்திருக்கிறான். என்ன செய்கிற"தென்றான். "நல்லது அப்படியானால் தந்திரத்தால் வெல்லலாம். அதோ இருக்கிறதே அந்தக் கூடையைக் கொண்டுவா. அதில் ராஜ குமாரனை வைத்து அவன்மேல் குப்பை கூளங்களைப் போட்டு மூடிவிடுகிறேன். பெருக்குகிறவள் குப்பைகளைத் தூக்கிக்கொண்டு போவதுபோல நீ அதைத் தூக்கிக்கொண்டுபோ. ஒருவரும் உன்னை ஒன்றும் கேட்கமாட்டார்களென்று நான் நம்புகிறேன். அவனை ஒரு பத்திரமான இடத்திற்குக் கொண்டுபோ" என்றாள்.

பின்பு பன்னா ராஜகுமாரனை ஒரு வியாபாரியின் வீட்டிற்குக் கொண்டுபோகும்படி சொன்னாள். "ஆனால் அந்தக் கொலைபாதகன் இங்கு வந்து ராஜகுமாரனைப் பார்ப்பான். அவனைக் காணாவிடில் ஆட்களைவிட்டுப் பட்டண முழுவதும் தேடச் சொல்லுவானே. அச்சமயத்தில் ராஜகுமாரன் அகப்பட்டுக்கொள்வானாயின் என்ன செய்வது" என்றான். "ஆம் அதுவும் சரிதான். அப்படுபாவி அவ்விதம் செய்வான் அதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் எனது பிள்ளை யிருக்கிறானல்லவா. அவனை ராஜ குமாரன் படுக்கையில் படுக்க வைக்கிறேன். ராஜ குமாரன் வெளிப்படுத்தப்பட்டா னென்பது அவனுக்குத் தெரியாது. மீவார் ராஜ்பத்துக்கு அரசனாக வரும் இந்த ராஜ குமாரன் உயிர் என் குமாரனால் தப்பினால் போதும். என் குமாரன் உயிர் போனாலும் போகட்டும். நான் எவ்வளவோ தலைமுறை தலைமுறையாக இந்த ராஜ கிருகத்தின் வரும்படியிலிருந்து ஜீவித்து வருகிறேன். இவர்கள் எங்கள் குடும்பத்திற்குச் செய்த உபகாரத்திற்கு அளவே கிடையாது. அவ்வித தர்மசிந்தையுள்ள காலஞ்சென்ற மகாராஜாவின் புத்திரனைக் காப்பாற்றுவதே மேலானது" என்று தைரியமாகச் சொன்னாள்.



அம்பட்டன் ஒன்றும் பதில் சொல்ல நாவெழாமல் ஸ்தம்பம்போல் நின்றான். பன்னா எழுந்து தானே கூடையைக் கொண்டுவந்து ராஜகுமா ர அதில் வைத்து அவன்மேல் குப்பை கூளங்களைப் போட்டு செவ்வையாய் மூடி அம்பட்டன் தலைமீது வைத்துச் "சாந்தமாகவும் மௌனமாகவும் போ"வென்று சொல்லி வழி அனுப்பினாள். அவன் இன்னும் ஒன்றும் தோன்றாமல் பிரமித்து நின்றான். பன்னா மறுபடியும் "கூடையுடன் சீக்கிரம் போ"வென்றாள். "பன்னா! நீ என்ன காரியம் செய்கிறாய்? இது சரியல்லவே" என்றான், "அது சரிதான். நான் செய்யவேண்டிய கடமையை நான் செய்கிறேன்" என்றாள். உடனே

அம்பட்டனைப் பலவந்தஞ் செய்து அவனைக் கூடையுடன் அனுப்பிவிட்டுத் தன் குமாரனை ராஜகுமாரன் படுக்கையில் நித்திரை செய்யும்படி செய்வித்துத் தான் ஒரு மூலையில் கொலைபாதகனைப் பார்க்க காத்திருந்தாள்.

அப்பொழுது மணியோ பன்னிரண்டாய் விட்டது. அரண்மனை முழுவதும் நிச்சப்தமாயிருந்தது. இருளாயிருந்தது. அச்சமயத்தில் பனுபீர் கையில் கத்தியை எடுத்துக்கொண்டு மெதுவாக ராஜகுமாரன் படுத்திருக்கும் அறைக்கு வந்தான். இவன் காலடிச் சப்தம் கேட்கவே பன்னா எழுந்து மரியாதை செய்தாள். "குழந்தை சௌக்கியமா?" வென்று கேட்டுக் கொண்டே படுக்கையண்டை போனான். "நான் அவன் தேகசௌக்கியத்தைப் பற்றி மிகக் கவலையுள்ளவனாய் இருக்கிறேனாகையால் அவனைப்பார்க்க வந்திருக்கிறேன்" என்று கொலைபாதகன் சொன்னான். படுக்கையில் உள்ள குழந்தையார் என்பதைக்கூடப் பார்க்காமல் வேலைக்காரியாகிய பன்னாவின் அருமையான புத்திரன் இருதயத்தில் கத்தியால் அழுக்கென்று குத்தினான். அப்படிச் செய்யவே குழந்தை பயங்கரமாகக் கூச்சலிட்டு மாண்டு போய் விட்டது. இச்சத்தம் அரண்மனை முழுவதும் கேட்டது. பனுபீர் [illegible]மாகக் கத்தியை எடுத்துக்கொண்டு தன்னை ஒருவேளை யாராவது குற்றவாளியென்று கண்டு பிடிப்பார்களோ எனப்பயந்து அவ்விடத்திலிராமல் வேகமாய்த் தன்னிருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

ஜனங்கள் அப்பயங்கரமான கூச்சலைக்கேட்டு நடுங்கி எழுந்து ராஜகுமாரன் படுத்திருக்கும் அறைக்கு வந்தார்கள். பன்னா மூர்ச்சையாய்க் கீழே விழுந்து கிடந்தாள். தன் ஞாபகமே கிடையாது. நாடியும் ஓடவில்லை. சிலர் கொஞ்சம் ஜலம் கொணர்ந்து முகத்தில் தெளித்தார்கள்.



சில நிமிஷத்திற்கெல்லாம் கண்திறந்து பார்த்தாள். ஜனங்கள் உள்ளே நுழைந்து குழந்தை இரத்தத்தால் நிரப்பப்பட்டிருப்பதையும் சவமாயிருப்பதையுங் கண்டு அழுதார்கள். இது நகர முழுவதும் உடனே பரவிவிட்டது. இரவாக விருந்தும் தங்கள் ராஜாவின் குமாரன் கொல்லப்பட்டான் என்ற சங்கதியைக் கேட்ட ஜனங்கள் கோபாவேசத்துடன் கும்பல் கும்பலாய் வந்துகொண்டிருந்தார்கள். பன்னாவுக்குச் சௌக்கிய முண்டாய்ப் பேசவும் சக்தி யுண்டானது. ஜனங்கள் 'யார் ராஜகுமாரனைக் கொலை செய்தது, சொல்லு' என்றார்கள். இவள் உண்மையைத் தெரிவித்துவிட்டால் எங்கு ராஜகுமாரனுக்கு தீங்கு விளையுமோ என்று பயந்து யாரோ ஒரு கருமையான மனிதன் உள்ளே நுழைந்து குழந்தையைக் கொன்றான் என்றாள். யாவரும் ராஜகுமாரன்தான் கொலையுண்டானென்று எண்ணித் துக்கப்பட்டார்கள்.

பன்னா உடனே தன் வேலையை விட்டுவிட்டு ராஜகுமாரனிருப்பிடத்திற்குச் சென்று குழந்தையை வெகு ஜாக்கிரதையாய் வளர்த்து வந்தாள். இவனுக்குத் தக்க வயது வந்தவுடன் வெளியிற்போக ஆரம்பித்தான். யாவரும் ராஜன் மகன் என்று தெரிந்துகொள்ளவே இவன் உடனே அவர்கள் உதவியால் பனுபீரைக் கொன்று ராஜ்யத்தை அடைந்தான். ஜனங்களுக்கு இச்சமாச்சாரம் முழுமையும் தெரிந்தவுடன் பன்னாவின் புத்தி சாதுரியத்தையும், சாமர்த்தியத்தையும் கண்டு புகழ்ந்தார்கள்.

உதயசிங் மகாராஜா பன்னாவைத் தன் அரண்மனையிலேயே வைத்துக்கொண்டு தன் தாயாரைப்போல் காப்பாற்றி வந்தான்.

# 4. கரும் தேவி

மாஹிர் என்ற ஜாதியார்கள் ஔரீந் என்ற இடத்தில் வசித்துக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு ஒரு தலைவனிருந்தான். அவனுக்கு ஒரு அழகுவாய்ந்த புத்திரியிருந்தாள். இப் பெண்மணியை விவாகம் புரிய மண்டூர் அரசன் பிரியப்பட்டு மாஹில் தலைவனை அணுகித் தன் எண்ணத்தை அவனிடத்தில் தெரியப்படுத்தினான். அவன், மண்டூர் அரசன் தன் குமாரத்தியை நாடி வந்ததைக் கண்டு மிக மகிழ்ந்து அவ்விதமே செய்விப்பதாக ஒத்துக்கொண்டான். அவ்விதமே கலியாணத்தைப் பற்றி யோசனை செய்தபின் ஒரே மனத்துடன் தீர்மானம் செய்து விவாக தினத்தையும் ஏற்படுத்தினான்.

"நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது" என்பதற்கிணங்க இவ்வித ஏற்பாடுகள் செய்தான் இவைகளெல்லாம் மாறும்படி நேரிட்டன. இவனது கிருகத்திற்கு ஒரு அந்நியன் வந்தான். இவன் காட்டில் வசிப்பவன். அங்குள்ளவர்களுக்கு எஜமானன். கலங்காத நெஞ்சம், அஞ்சாத வீரமுமுள்ளவன். எங்கும் திரிவதில் துணிகரமுள்ளவன். இவனைக் கண்டால் யாவரும் நடுங்குவார்கள். இவ்வித வீரபராக்கிரமமுள்ளவனைப் பற்றி ஔரீந் தலைவன் கேள்விப்பட்டிருக்கிறானே தவிர அம் மகா புருஷனைப் பார்த்ததில்லை. இம் மகா புருஷனுடைய பெயர் சாது.

சாது என்பவன் சண்டைக்குச் சென்றிருந்தான். அவன் ஜயத்துடன் தனது வனாந்திரத்திற்குத் திரும்பிப்



போகையில், தனது இருப்பிடத்திற்கு வந்து சிலநாள் தங்கியிருந்துவிட்டுப் போகும்படி ஔரீந் தலைவன் கேட்டுக்கொண்டான். அவனும் அதற்கிசைந்து ஔரீந்துக்கு வந்து ஒருவாரம் தங்கியிருந்தான்.

கரும்தேவி வர்லிப வீரனைப் பார்த்தாள். இவனுடைய தைரியமும் யுத்தாபேக்ஷயுள்ள கீர்த்தியும் இவள் மனதை வென்றன. இவனது துணிகரமான செய்கையைப் பற்றியுள்ள அதிசயமான கதைகளைக் கவனமாய்க் கேட்டுத் தன் ஹிருதயத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டாள். "தின்டா விளக்கைத் தீண்டவரும் பூச்சி மாண்டாற்போல் மாளுகிறது" என்றதைக் கவனியாமலும் தன்னை வேறொருவனுக்கு விவாகம் செய்துவைக்கத் தனது தகப்பனார் ஏற்பாடு செய்திருப்பதையும் மறந்து "தீராத நெஞ்சுக்குத் தெய்வமே சாட்சி" என்பதாக எண்ணி, இம் மகா புருஷனைத் தனது பர்த்தாவாக நினைத்துவிட்டாள். இவ்விதம் இவள் செய்தது இவள் குடும்பத்திற்கே கெடுதியாக முடிந்ததுடன் இவள் உயிருக்கும் ஆபத்து நேர்ந்தது.

இவள், தான் கொண்ட விருப்பத்தைத் தனது தாயாரிடத்தில் நேராகச் சொல்ல வெட்கித் தன் தோழிகளிடத்தில் சொல்லவே, அவர்கள் தங்கள் எஜமானியாகிய கரும் தேவியாரின் தாயாரிடத்தில் சொன்னார்கள். இவள் தனது கணவனிடத்தில் இச்சங்கதியைத் தெரிவிக்கவே அவருக்கு இன்னது செய்கிறதென்று புலப்படவில்லை. மண்டூர் அதிபதிக்குத் தன் மகளை விவாகம் செய்விப்பதாக முன் வாக்குறுதி செய்ததை ரத்துசெய்ய முடியுமா? அவ்விதம் செய்தாலோ அவ்வதிபதி தன்னை நிந்தித்ததாக எண்ணிக்கொண்டு யுத்தத்திற்கு வந்து தேசத்தைப் பாழாக்கி விடுவான், புத்தியற்ற பெண்ணின் இஷ்டத்திற்

காக அவ்விதம் தன் தேசம் கஷ்டப்பட அவன் மனது சம்மதிக்கவில்லை. என்ன செய்வான்! எவ்வளவோ யோசனைகளை யெல்லாம் எண்ணினான். கடைசியில் ஒன்றும் புலப்படாமையால், "தன் மகள் மண்டூர் அதிபதியைத்தான் மணம் புரியவேண்டும். அப்படிச் செய்து கொள்ளச் சம்மதியாவிடில் வேறொருவரைப் பற்றிக் கனவிலும் நினைக்கக் கூடாது. தன் பெண் கன்னியாப் பெண்ணாக இருப்பது நலம்" என்று தீரமாக ஆலோசித்துத் தீர்மானம் செய்துவிட்டான்.

ஆனால், இவ்வுலகத்தில் மனைவியின் விருப்பத்திற்கு விரோதமாக நடக்கும் கணவர்களுண்டா? மனைவிமார்கள் புத்திசாதுரியமாயும், நல்ல நடத்தையுள்ளவர்களாயும், தங்கள் கணவர்கள் சுக துக்கங்களை யனுபவிப்பவர்களாயும், அவர்கள் உயிர் தங்கள் உயிருக்குச் சமானமாயும், அவர்கள்மேல் கண்ணும் கருத்துமா யிருப்பின் அவர்கள் கூறும் நன்மையும் க்ஷேமகரமுமான வார்த்தைகளின்படி எப்பொழுதும் கணவர்கள் நடக்கச் சந்தேகமுண்டா? அவ்விதமே இவ்விடத்திலும் ஔரீந்த் அதிபதியும் தமது மனைவியின் நல்லெண்ணப் பிரகாரம் நடக்கச் சம்மதித்தார்.

அவர் மனைவி தங்கள் குமாரத்தி சௌக்கியமாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தி சொல்லவே, அவள் கணவரும் அதற்கு இசைந்து தூதனை அழைப்பித்து சாதுவின் தகப்பனுக்குத் தமது குமாரத்திக்கும் அவரது குமாரனுக்கும் விவாகம் செய்ய நிச்சயம் செய்திருப்பதைத் தெரிவிக்கும்படி அனுப்பினார்.

தூதன் விரைவாகச்சென்று சாதுவின் தகப்பனிடத்தில் விவாகச் சங்கதியைச் சொன்னவுடன் சந்தோஷப்



பட்டு, "வலிய வந்த ஸ்ரீதேவியைக் காலா லுதைத்துத் தள்ளாமல்" விவாகத்திற்குத் தமது புத்திரனை 700 சேனைகளுடன் அனுப்பினார். குறிக்கப்பட்ட தினத்தில் விவாகமும் விமரிசையாக நடைபெற்றது. சில தினங்கள் சென்ற பின் சாது தன் மனைவி கரும் தேவியாருடன் தன் சொந்த இருப்பிடத்திற்கு யாதொரு பயமு மின்றிச் சந்தோஷத்துடன் புறப்பட்டான்.

நிற்க, மண்டூர் அதிபதிக்கு ஔரீந்த் அதிபதியின் நடவடிக்கை கோபத்தை யுண்டாக்கியது. அவன் விவாகத்தைத் தடுக்க முடியாவிடினும் பழிவாங்க நிச்சயித்து 4000-காலாட் படைகளைச் சேகரித்துக்கொண்டு சாதுவும் அவன் மனைவியும் செல்லும் மார்க்கத்தில் தயாராகக் காத்திருந்தான். மனம் நொந்தவனும் ஏமாற்றப்பட்டவனுமான மண்டூர் அதிபதியின் சேனைகளால் தங்கள் வழி அடைக்கப்பட்டிருப்பதைச் சாதுவும் அவன் மனைவியும் கண்டார்கள். சாதுவும் சாமானிய மனிதனன்று. மகா வீரபராக்கிரமமுள்ள தீரன். அஞ்சா நெஞ்சுடையவன். மனந் தளராமல் தங்கள் வழியைக் கடந்து தன்னிருப்பிடத்திற்குச் செல்ல வேண்டுமானால் தான் யுத்தம் செய்ய வேண்டுமென்று எண்ணினான்.

ஆனால், மண்டூர் அதிபதி வீரமுள்ள விரோதியைப் போல் சாதுவைப் பார்த்து, "உனக்குப் புருஷத்துவ மிருந்தால் என்னுடன் யுத்தத்திற்கு வா; இல்லாவிடின் உன்னைச் சிறைப்படுத்தி விடுவேன். ஆனால் என்னிடத்தில் அதிக சேனையின் தொகை யிருப்பதைப்பற்றிப் பயப்படாதே; அவைகளைப்பற்றி நான் இகழ்ந்து பேசுவேன். உனக்கு வல்லமை யிருந்தால் என்னுடன் மல் யுத்தஞ் செய்ய வா, கத்திச் சண்டையும் செய்யலாம்" என்றான்.

இருவரும் அகோர யுத்தம் செய்யத் தலைப்பட்டார்கள். சாது தன் பிரியமுள்ள மனைவியிடத்திற்கு வந்து, "எனது அன்பு வாய்த்த கண்மணியே! நான் யுத்தம் செய்யப் போகிறேன், என்னை வழியனுப்பு" என்றான்.

அவள் தன் கணவன் கையி லிருந்த கத்தியைத் தொட்டுக் கொண்டு, "எனது பிரியமும் அன்பும் வாய்ந்த கணவரே! நீர் செய்யும் யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருப்பேன். நீர் அபஜயமடைந்து கொல்லப்பட்டால், நானும் உம்மைப் பின் தொடர்வேன்" என்று சொல்லித் தன் கணவருக்கு ஜயமுண்டாக வேண்டுமென்று கடவுளை ஸ்துதி செய்துவிட்டு, நீங்கள் தைரியமாக யுத்தம் செய்யுங்களென்று மன உறுதியுடன் சொன்னாளே தவிர "போய் வாருங்கள்" என்று சொல்ல அவளுக்கு மனம் வரவில்லை. ஆயினும் கடைசியாக சாது, தன் மனைவியின் அன்பென்ற பாசத்தினின்று விலகி விடை பெற்றுக் கொண்டு மண்டீர் அதிபதியுடன் யுத்தம் செய்யப் போய் விட்டான்.

பீமனும் கீசகனும் யுத்தம் செய்த காலத்தில் உலகெங்கும் எவ்வித மிருந்ததோ அவ்விதமே இவ்விரு வீரர்களும் யுத்தம் செய்தபொழுது உலகமெல்லாம் நடுங்கிற்று. ஜனங்களும் சேனைத் தலைவர்களும் இன்னது செய்கிறதென்று தெரியாமல் திகைத்து முகம்வாடி வதங்கி நின்றார்கள்.

மண்டீர் அரசன் கழுத்தில் பலமாகக் கத்தியைச் சாது வீசினான். அது அவனுக்கு அதிக நோவுண்டாக்கியபோதிலும் மின்னல் எவ்வளவு வேகமாக மின்னி மறையுமோ அம்மாதிரி மண்டீர் அரசன் உடனே சாதுவையும் பலமாகக் கத்தியால் வீசினான். வீசிய கத்தி



அவன் தலைவழியாக நுழைந்ததைப் பார்த்துத் துக்கமுற்றாள் கரும் தேவியார். இருவரும் பூமியில் விழுந்து விட்டார்கள். சாது மரணமடைந்து விட்டான். ஆனால் மண்டீர் அதிபதி இரத்தத்தால் நிரப்பப்பட்டுச் சோர்ந்து கீழே கிடந்தானே தவிர அவன் உயிர் போகவில்லை.

சாதுவின் மரணத்தைப் பற்றி அங்குள்ளவர்களெல்லாம் மிக வருந்தினார்கள். சிலர் மகா பராக்கிரமசாலி இறந்தானே என்றார்கள். சிலர் ஐயோ பாவம் இப்பொழுதுதான் விவாகம் செய்துகொண்டு தன்னிருப்பிடத்திற்குப் போகும்பொழுது மடிந்தானே என்றும், வேறு சிலர், அவன் மனைவி மகா பதிவிரதா சிரோமணியாயிற்றே! அவனுக்கு இக்கதி வரவேண்டுமா வென்றும், ஐயோ! இந்த மண்டீர் அதிபதியின் கெட்ட எண்ணத்தினால்தான் அம் மகா புருஷன் மடிந்தானென்றும் விசனத்துடன் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் கரும் தேவியார் சிறிதளவேனும் அழாமல், தன் கணவனுக்குப் பதிலாகச் சேனைத் தலைமையை வகித்து அவர் பக்கத்திலிருந்த கத்தியையும் எடுத்துக் கொண்டாள். தன்னை மற்றவர்கள் தடுக்க வருமுன் தன் இடதுகையைத் தியரொன்று வெட்டிக் கொண்டாள். அம் மகா பதிவிரதை உடனே ஒரு சிப்பாயைக் கூப்பிட்டு "இந்தக் கையை நெருக்கமான வனத்திலுள்ள எனது மாமனாரிடத்தில் சீக்கிரம் கொண்டு போய்க் கொடு. மேலும் அவருடைய மருமகளது கையென்றும் அவருடைய பராக்கிரமசாலியும் தைரியவானுமான புத்திரனுக்கு மனைவியாயிருக்கத் தனக்கு வாய்த்தது தன் அதிர்ஷ்டமென்றும், அதனால் தனது யோக்கியதைக்குக் குறை யொன்றுமில்லை யென்றும்" சொல்லும்படி உத்தரவளித்து அனுப்பினாள்.

பின்பு "தனது வலது கையை ஒருவனை வெட்டும்படியும் வெட்டிய பின் அதைத் தனது அருமையான தகப்பனாருக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும்படிக்கும் கட்டளையிட்டாள். மேலும் வீரபராக்கிரமம் பொருந்திய மாஹறில் ஜாதியைச்சேர்ந்த ஸ்திரீகள் மரணமடைவது போல அவரது குமாரத்தியும் மரணமடைந்தாளென்று போய்ச்சொல்" எனக் கட்டளையிட்டாள்.

இவ்வித பயங்கரமான செய்கையைச் செய்யவொண்ணாத வேலைக்காரர்கள் நடுநடுங்கி அவ்விதம் செய்ய ஒருவரும் முன் வராமல் மௌனமாய் நின்றார்கள். இவ்விதம் அவர்களிருப்பதைக் கண்டு அம் மகா உத்தமி அவர்களை ஒரு பெண் சிங்கம் பார்ப்பது போலப் பார்த்து பின்வருமாறு பேரொலி செய்தாள். "உங்கள் எஜமானியினுடைய கட்டளைக்கு மீறி நடக்கத் துணிகிறீர்களா?"

இதைக் கேட்டதும் ஒருவன் உடனே ஓடிவந்து "எங்கள் தாயே! நாங்கள் ஒழுங்காயிருப்பதையும், தங்கள் எச்சரிக்கையையும் மறந்து விட்டோம். நாங்கள் தங்களை மெச்சுவதிலும் தங்களுக்கு மரியாதை செலுத்துவதிலுமிருக்கிறோமே தவிர, தங்கள் உத்தரவை மீறி நடக்க எங்களுக்கு எப்பொழுதும் மனம் வராது. ஆனால், தாங்கள் இட்ட பயங்கரமான செய்கையைச் செய்ய எங்கள் மனம் ஒப்பவில்லையே! அதனால்தான் தயங்கி, இன்னது செய்கிறதென்று தோன்றாமல் விழிக்கின்றோம். அவ்விதம் நாங்களிருப்பதால் தங்களை எங்கள் தலைவியாக வைத்துக்கொள்ள வில்லையென்றும், அதனால்தான் நாங்கள் தங்கள் உத்தரவுப்படி நடக்கவில்லையென்றும் நினைக்கக் கூடாது. தங்கள் அனுமதியின் மேலும் தங்கள்



கட்டளைப் பிரகாரமும் தங்கள் கையை இதோ துண்டித்து விடுகிறேன்' என்றான்.

'உடனே செய்' என்று சொல்லிவிட்டு ஸ்தம்பம் போல நின்றாள்.

உடனே அம் மனிதன் கையைத் துண்டித்து அம் மாதின் தகப்பனாரிடத்திற்கு அனுப்பினான்; இம் மா உத்தமி உடனே தனது கணவர் மடிந்த விடத்திலே நெருப்பு குண்டம் வளர்க்க உத்தரவளித்துக் கடவுளை ஸ்துதி செய்துவிட்டு யாதொரு கல்மஷமுமின்றித் திரிகரண சுத்தியாய் அதில் குதித்துவிட்டாள்.

இம் மகா பதிவிரதா சிரோமணியின் மரணத்தைப் பற்றி இவளது பெற்றோர்களும், மாமனார் மாமியார் முதலியவர்களும் மற்ற ஜனங்களும் மிக்க விசனமுற்றார்களென்று சொல்லவும் வேண்டுமா? இவளல்லவா மகா உத்தம குணமுள்ள மனைவி? இவள் தனது பர்த்தாவுக்கு ஆறுதல்களைச் சொல்லி அனுப்பியதும் மெச்சத் தகுந்ததல்லவா?



தாராபாய்

# 5. தாராபாய்.

ராஜபுதனத்தில் தோடா என்ற ஒரு சிறு ராஜ்யமிருந்தது. 16-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் சூராதன் என்ற அரசன் அதை ஆண்டுவந்தார். டெல்ஹி ராஜ்யத்து மகமதிய சக்கரவர்த்தி அப்பொழுது பலத்த சேனைகளை வைத்துக்கொண்டிருந்தார். இவரைக் கண்டால் எவருக்கும் பயம். சூராதன் தம் தேசத்தை பல பராக்கிரமமுள்ள மகமதிய சக்கரவர்த்தியினின்று காப்பாற்றிக் கொள்ளப் போதுமான பலமில்லாதவராயிருந்தார். மகமதியர்கள் கும்பலாய் வந்து இவரை இம்சை செய்து கொண்டு வந்தார்கள்.

சக்தி யற்ற இவர் தம் தேசத்திற்குப் பக்கத்திலுள்ள சில ராஜாக்களுக்கும் தம் சக்கரவர்த்தியாகிய மீவார் மஹாராஜா அவர்களுக்கும் மகமதியர்களுடைய தொந்திரவைத் தெரியப்படுத்தித் தமக்கு உதவி புரியும்படி வேண்டிக் கொண்டார். ஆனால் அவர்கள் தங்கள் தங்கள் ராஜ்யத்தைக் காப்பாற்ற முயன்றார்களே தவிர இவரைக் கவனிக்க முடியவில்லை. மேலும் மற்ற ராஜாக்களுக்கும் மகமதிய அரசனைக் கண்டால் மிக அச்சம். ஒவ்வொருவரும் தங்கள் தேசத்தைப் பந்தோபஸ்து செய்துகொண்டிருந்தார்கள். ஆகையால் இவருக்கு உதவிசெய்ய அவர்கள் எவ்விதம் முன்வர முடியும்?

சூரதன் ஒருவர் உதவியுமின்றித் தம்மாலியன்ற மட்டும் தம் தேசத்தைப் பலப்படுத்தினார். என்னசெய்தும் கடைசியாகப் பலத்த சேனைகளுடன் மகமதிய சக்கரவர்த்தி இவரைத் தோற்கடித்து இவரது அருமையான தோடா ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

சூரதன் தமது அருமையானவும் அன்புள்ளவுமான தாரா என்ற புத்திரியுடன் சித்தூருக்குச் சமீபத்திலுள்ள பிதனாருக்குச் சென்றார். தம்முடைய தோடா ராஜ்யத்தையும், தமது ஜனங்கள் கஷ்டப்படுவதையும் மறவாமல் எண்ணி எண்ணித் துக்கித்துக்கொண்டு ஏகாந்தமாக வசித்து வந்தார். சேனைகளின் உதவி, திரவியம், ஆயுதங்கள் முதலியவைகளின்றி இவர் என்ன செய்ய முடியும்? சித்தூர் அரசன் இவருக்கு உதவி செய்யலா மென்றாலோ அவன் அடிக்கடி மகமதிய சேனைகளால் பயமுறுத்தப்பட்டான். ஆகையால், அவன் தன் தேசத்தைக் காப்பாற்ற முயன்று வந்தானே தவிர அவன் இவருக்கு உதவிசெய்ய முடியாமற் போயிற்று.

ஆனால் சூரதன் தாம் இந்த ராஜ்யத்தை மறுபடியும் அடையவேண்டுமென்ற நம்பிக்கையைக் கை நழுவவிடவில்லை. தம் ராஜ்யத்தைப் பெறத்தக்க சமயம் வாய்க்குமென்றே உறுதியாக நம்பியிருந்தார். இவ்விதமே அவரது பிரியமுள்ள மகளும் எண்ணியிருந்தாள். இவருக்குப் புத்திர னில்லாமையால் இவர் தமது மகளுக்குக் கல்வி புகட்டியும் யுத்தத்திற்கு வேண்டிய விஷயங்களைக் கற்பித்தும் வந்தார்.

தாரா பாலியப்பருவமுதல் குதிரை சவாரிசெய்யவும், கத்தி வீசவும், அம்பு, கேடகம், துப்பாக்கி முதலியவைகளை உபயோகிக்கவும் கற்றுவந்தாள். ஒவ்வொன்



றிலும் யாவரும் மெச்சத்தக்கபடியாகத் தேர்ச்சி யடைந்து பராக்கிரமசாலியெனப் பெயரெடுத்தாள். அவளுடைய சௌந்தரியமோ விசித்திரமாக விருந்தது; இவளைப்போன்ற அழகுவாய்ந்த பெண் ராஜபுதனத்தில் கிடையாது.

ஒரு பெரிய ராஜஸ்திரீக்கு வேண்டிய சாமர்த்தியங்களெல்லாம் இவளிடத்தில் பொருந்தியிருந்தன. இவள் மேலும் பெண் சிம்மத்தைப்போல் தைரியமாயும், பெண் புலியைப்போல் முயற்சி யுள்ளவளாயும், திறமை பொருந்திய ராஜபுத்திரர்களைப் போல் யுத்தத்தில் வீரமுள்ளவளாயும், சமர்த்துள்ளவளாயுமிருந்தாள். சூரதன் அநேக தடவை யுத்தம் செய்த காலத்தில் இப் பெண்மணியும் இவர் பக்கத்தி லிருந்துகொண்டு யுத்தம் செய்தாள். இதல்லவோ இவளிடத்தில் விசேஷம்! இவருக்குப் புத்திரனும் புத்திரியும் இப் பெண்மணிதான்.

சூரதன் தம் ராஜ்யத்தை மறுபடியும் அடையாமல் மடிந்துபோனாலும், தாம் தம் குமாரத்திக்குப் போதித்த யுத்த கல்வி கேள்விகளின் தேர்ச்சியும் பழக்கமும் அதைப் பெறச் செய்விக்குமென்று நம்பியிருந்தார். அவர் தம் புத்திரிக் களித்த கல்வியின் திறமையால் அவள் அந்த ராஜ்யத்தைப் பெற்றுப் புகழ்ச்சியுடன் ராஜ்ய மாளுவா ளென்று நம்பியிருந்தார். இதன்றியும் தம் ராஜ்யத்தி லிருந்த மகமதியர்களை எவன் ஜெயித்துத் துரத்திவிடுகிறானோ அவன், தன் அருமையான மகளை மணம்புரியக் கடவனென்றும் நிர்மாணித்தார். ராஜபுதனம் முழுவதும் தாராவின் கல்வித் திறமையும் அவளுடைய ரூபலாவண்ணியமும் பரவியது. அநேக ராஜகுமாரர்கள் தாராவை மணம்புரிய வொரு ஆவலுடனிருந்தார்கள். ஆனால் சூரதன் சம்மதிக்கவில்லை.

மீவார்தேசத்து ராஜபுத்திரனும் இளவரசனுமாகிய ஜயபாலன் என்றவன் தாராவை விவாகம் செய்துக் கொள்ள எண்ணிச் சூரதனிடத்திற்கு வந்தான். மீவார் அதிபதியின் ஆதரணையின் விருப்பமால் சூரதன் தம் மகளை விவாகம் செய்விக்கச் சம்மதிப்பான் என்று ஜய பாலன் எண்ணினான். இவ்விதம் இவன் எண்ணியது சரியே; ஏனெனில் இருவரும் பெரிய ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர் பெண்ணை இவன் மணம் முடித் துக் கொண்டால் இவனுக்கு கௌரவ மதிப்பும். ஆனால் இவ்விஷயம் சூரதனுக்குத் தெரிந்தவுடன் "எவன் என் ராஜ்யத்தை மறுபடியும் ஜயித்து எனக்குக் கொடுப் பானோ அவனுக்குத்தான் என் செல்வக் குழந்தையை நான் மணம்செய்து வைப்பேனே ஒழிய மற்றவனுக்குக் கொடுக்கமாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னார்.

ஜயபாலன் கர்வமுள்ளவன், வீண் டம்பக்காரன், கெட்ட எண்ணம் குடிகொண்டவன், பயங்காளி, மகா துரோகி என யாவராலும் இகழப்பட்டு வந்தான். இவ் வித குணம் வாய்ந்த ஜயபாலன் சூரதன் சொன்னதைக் கேட்டு நகைத்து, அவரது குமாரத்தியைப் பற்றி மிக இழிவாகப் பேசினான். மேலும் அதிசீக்கிரத்தில் தாரா தன் குதிரைகள் கட்டிமிடத்திற்கு ஒரு வேலைக்காரியாக விருக்கும் காலம் சமீபித்து விட்ட தென்று பரிகாசம் செய்வதுபோல் சொன்னான்.

இவ்விதம் சொன்ன சொற்களைக் கேட்டுச் சகியாமல் சூரதன் தம் கத்தியை உறையி லிருந்து உருவி உடனே அவன் தலையை ஒரு நிமிஷத்தில் வெட்டி விட்டார். கர்வமும் துர் எண்ணமு முள்ள ஜயபாலன் சொன்ன சொற்கள் "தீப்புண் ஆறும், வாய்ப்புண் ஆறாது" என்று



சொல்வதுபோல், அவர் மனதை வேதனைக்குள்ளாக்கி யது. "தீராத நெஞ்சுக்குத் தெய்வமேசாட்சி" என்று எண்ணி, அவர் அவன் உயிரை ஒரு நொடியில் வாங்கி விட்டார்.

மீவார் ராஜ்யாதிபதி மேன்மையான குணமுள்ள வன். வீரபராக்கிரமமுள்ள ராஜபுத்திர சாதியாரைப் போ லிருந்தான். சத்தியம், தயை, தான தர்மம் முத லியவைகள் இவனிடத்தி லுண்டு. இம் மகாராஜா தன் மகன் சூரதனால் கொல்லப்பட்டான் என்ற சங்கதியை யறிந்தவுடன், "நல்லது, என் மகன் அவ்வித தண்டனைக் குத் தகுதியானவன்தான்." "கோடாலிக் காம்பு குலத் துக்கு ஈனம்" என்பதற்கிணங்க "என் குடும்பத்திற்கு ஒரு பாபியாக விருந்து எனக்கு அவமானத்தை விளை வித்து வந்தான். ராஜபுத்திரர்கள் செய்யத் துணியாத காரியத்தை இவன் செய்தமையால் இவன் மரணமடைந் தான். சூரதன் செய்தது நியாயமானது; அவனை நான் மன்னிக்கிறேன்" என்றான்.

பிறகு, ப்ருதிவிராஜன் என்ற மற்றொரு குமாரன் மீவார் அதிபதிக்கு உண்டு. இவன் ஒரு சமயத்தில் தன் தகப்பனருக்கு விரோதமாக நடந்தமையால் இவனை இவன் தகப்பனார் மீவார் ராஜ்யத்திற்குவெளியில் அனுப்பி யிருந்தார். ஆயினும் ஜயபாலன் இறந்த பின் மீவார் ராஜா தன் மகனை வரவழைத்து அவனுக்கு அந்தஸ் துக்களையெல்லாம் கொடுத்து, இளவரசு என்ற பட்டத் தையும் அளித்தான். இவன் ராஜ்யத்திற்குத் திரும்பிவந் ததும், ஜனங்கள் மிக மகிழ்ந்தார்கள். ஏனெனில், இவன் நற்குண முள்ளவன். அழகும் தைரியமு முள்ளவன். சேனைத்தலைமை வகிப்பதில் மகா திடமுள்ளவன். ராஜ

குமாரர்களில் இவன் தாராவை மணம் புரியத்தக்க யோக்யதையுள்ளவன்.

ஆகையால், இவனுக்கும் தாராவின் அபாரசக்தியும் யோக்கியதையும் தெரியவந்தவுடன், இவன் அவளை மணம் புரியவேண்டுமென்று கருதினான். சூரதன் செய்திருக்கும் தீர்மானம் வீண்போகுமா? அனது பற்றி, இவன் தோடா ராஜ்யத்தை ஜெயித்துச் சூரதனுக்குக் கொடுக்க முயன்றான். தாராவை அடையாமல் நாமிருந்தென்ன என்று எண்ணி, நமது உயிர் போனாலும் சரி 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்றிருக்கிறதே. ஆதலால் நாம் முயற்சி செய்து பார்ப்போம் என்று தீர்மானித்து யுத்தத்தில் தேர்ந்த இருநூறு ராஜபுத்திரக் குதிரைவீரர்களைச் சேர்த்துக்கொண்டு தோடா ராஜ்யத்தைநோக்கிப் புறப்பட்டான்.

ப்ருதிவி செய்யத் துணிந்த காரியம் தாராபாயிக்குத் தெரிந்தவுடன் தானும் நம்பிக்கையுள்ள ப்ருதிவியுடன் யுத்தத்திற்குப் போக நிச்சயித்தாள்.

இவள் தகப்பனார் இவளைத் தடுத்தும் கேளாமல், "நான் போய்வருகிறேன், உத்தரவு கொடுங்கள் அப்பா" என்று வணங்கிக் கேட்டு, விடை பெற்றுக்கொண்டு தானும் ஆயுதபாணியாய்த் தோடா தேசத்தை ஜெயிக்கச் சென்றாள்.

இவர்கள் தோடா ராஜ்யத்திற்குச் சமீபத்தில் வந்து மரங்கள் அடர்ந்த காட்டிற்குள் தங்கள் கூடாரங்களை அடித்துக்கொண்டார்கள். அச்சமயம் மொஹரம் பண்டிகை வரும் காலமாயிருந்தது. பிராணத்தியாகியாகிய ஹுஸேன் என்ற மகான் கொலையுண்டதின் ஞாபகார்த்தமாக இப்பண்டிகை மகமதியர்களால் அநுசரிக்கப்பட்டு



வருகிறது. சென்னையில் வெகு விமரிசையாக இப்பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. அக்காலத்தில் ஒரு நாள் மகமதியர்களில் ஒரு வகுப்பார் தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு ஊர்கோலம் செல்லுவார்கள். அப்பொழுது இக்காட்சி மனதுக்கு வருத்தத்தை யுண்டாக்கும்.

ப்ருதிவி இச்சமயத்தில் மகமதியர்கள் மத ஆவேசங்கொண்டு மிகப் பயங்கரமாக யாவருக்கும் தென்படுவார்களென எண்ணி, அத்தினமே அவர்களுடன் யுத்தத்திற்குச் செல்லத்தகுந்த தினமென்று உத்தேசித்து, அவர்களை எதிர்க்கத் தீர்மானித்தான்.

மறுநாள் சாயங்காலம் இருநூறு குதிரைவீரர்கள் தோடாவின் கோட்டைக்குள் நுழைந்தார்கள். ப்ருதிவிராஜனும், தாராபாயும் முதலில் சென்றார்கள். மூன்றாவது ப்ருதிவியின் ஆப்த சிநேகிதனாகிய சங்கரன் என்பவன் சென்றான். மற்றவர்களெல்லாம் கோட்டைவாசலில் மெதுவாகச் சத்தம் செய்யாமல் வந்து, உள்ளே நுழைய உத்தரவு வருமளவும் காத்திருந்தார்கள். இங்கு இவர்கள் பொம்மைகளைப்போல் சத்தம் செய்யாமலும் அவயவங்களை அசைக்காமலுமிருந்தார்கள். உட்சென்ற மூன்று வீரர்களும் தங்கள் புலன்களுக்குத் தென்பட்டவர்களையெல்லாம் துண்டித்து வந்தார்கள். உடனே கோட்டையிலெங்கு பார்த்தாலும் பயமும் குழப்பமுமுண்டாயிற்று. ஜனங்கள் மனக்கலக்கத்துடனும் திசை தெரியாமலும் ஓடினார்கள். அபாயத்தைக் குறிக்கும்படியான மணிச்சப்தம் கேட்டதும் உடனே கோட்டையின் வாசற் கதவுகளும் மூடப்பட்டன.

ப்ருதிவிராஜன் இப்படிச் சம்பவிக்குமென்றே எதிர்பார்த்தான். எல்லா மனிதர்களுடனும் அவன் கோட்

டைக்குள் சென்றால் அவர்களை அதிசயிக்கும்படி செய்ய முடியாதென்பது முன்னமேயே ப்ருதிவிக்குத் தெரியும். அவ்விதம் உட்சென்றிருந்தால் குதிரைகள் நடக்கும் சப்தத்தைக் கேட்டு ஜனங்கள் கண்விழித்துக் கொண்டு தங்கள் சைனியங்களை இம்சிக்காத வண்ணமாய் இப்பித்திருப்பார்கள். இவ்விதம் ஒன்றும் உண்டாகாமலிருக்கும் பொருட்டு இவ்வித யுக்தியைச் செய்து, மூன்று பேர் முதலில் உள் நுழைந்து அநேகரைக் கொன்றார்கள்.

மகமதியர்கள் யாரோ விரோதிகள் அக்கிரமம் செய்கிறார்களென்று தெரிந்துகொண்டு இம்மூவர்களை நோக்கி வந்தார்கள். உடனே இவர்களும் அவர்களைப்போல் முன் ஓடிக் கோட்டை வாசற்கதவைத் திறந்து விட்டார்கள். வாசற்கதவு திறக்கப்பட்டவுடன் ராஜபுத்திர வீரர்கள் உள்ளே நுழைந்து குழப்பத்தில பயந்தும் மனம் கலங்கியு மிருந்தவர்களை யெல்லாம் கொன்று விட்டார்கள். மகமதிய சிப்பாய்கள் ஒன்றுசேர முயன்றார்கள்; ஆனால் அவர்கள் அவ்விதம் சேரமுடியாமல் ராஜ புத்திரர்களுடைய கத்திக்கு இரையானார்கள். தாரா, தான் கணவனாக வரிக்கப்போகும் ப்ருதிவியின் பக்கத்தி லிருந்துகொண்டு தன்னுடைய தேசத்து விரோதிகளைச் சின்னபின்னமாக்கினாள். அன்று சாயங்காலம் இவர்கள் முழு ஜெயமடைந்தார்கள்; மகமதியர்களில் அநேகம்பேர் அங்கேயே கொலையுண்டு மடிந்தார்கள். மீதியுள்ளவர்களில் சிறுபான்மையோர் பல திக்குகளிலும் சிதறி ஓடினார்கள். அவர்களை நோக்கி ராஜ புத்திர வீரர்கள் சென்றார்கள்.

தாராபாய் அவ் வீரர்களைப் பார்த்து, "அவர்களைத் துரத்தவேண்டாம், அவர்கள் உயிருடனிருக்கட்டும். நமது தேசத்தைப் பிடிக்கவேண்டிய எண்ணம் பூராவாக



முடிந்துவிட்டது. ஆகையால் அவர்களைக் கொல்ல வேண்டாம்!" என்று சொல்லி ராஜபுத்திர வீரர்களைத் தடுத்தாள்.

ப்ருதிவிராஜன் தாராபாய் செய்த சாமர்த்தியத்தைக் கண்டு மிகச் சந்தோஷித்து, அவளை மிக அன்புடன் பார்த்தான். தாராவும் தனது பிதாவின் வார்த்தைப் பிரகாரம் அவனது ஹிருதயத்தைக் கவர்ந்துகொண்டாள். உடனே இருவருக்கும் விவாகம் வெகு விமரிசையுடன் நடந்தேறியது.

சூரதன் மருமகனையும் மகளையும் அழைத்துக்கொண்டு தோடா ராஜ்யத்திற்குச் சென்று, அங்கு அவர்களுடன் சிலகாலம் வசித்துவந்தார். அவருக்குப் பிள்ளையில்லாமையாலும் தம் மகளைப் பிரியமாய் வளர்த்து வந்தமையாலும், அவள் கணவனுக்கு பட்டாபிஷேகம் செய்வித்து அவர்களை ராஜ்யத்தைச் சரிவர ஆண்டுவரும்படி ஆசிர்வதித்துப் பிதனூருக்குச் சென்று வசித்துவந்தார்.

இத்தம்பதிகள் இரண்டுவருஷம் சுகமாக ராஜ்யத்தை ஆண்டுகொண்டு காலத்தைச் சன்மார்க்கத்தில் கழித்து வந்தார்கள். தாராபாய் தன் கணவன் இஷ்டம்போல் நடந்துவந்ததும் தவிர, தன் ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளை யெல்லாம் செய்து வந்தாள். இவள் பாலியப் பெண்ணாகவிருந்தும் இவளுடைய சாமர்த்தியத்தையும் புத்தி நுட்பத்தையும், தயாளகுணத்தையும், தர்மசிந்தனையையும் கண்டு எல்லா ஜனங்களும் இவளை வாழ்த்தி வந்தார்கள்.

ப்ருதிவிக்கு விவாகமானபோது வயது 23, அவன் மனைவி தாராபாய்க்கு வயது 17. இவ்வித இளம்பிராயத்தில் இவர்கள் யாதொரு கஷ்டமுமின்றிச் சுகமாக

வாழ்ந்து வருவதற்குப் பதிலாகக் கடவுள் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. ப்ருதிவிக்கு நற்குண மமைந்த ஒரு சகோதரி யுண்டு. ப்ரவுராய் என்றவனுக்கும் இவன் சகோதரிக்கும் மணமுடிந்திருந்தது; ப்ரவுராய் பொய் சொல்பவன், கடவுளிடத்தில் பக்தியில்லாத பாவி, கெட்ட எண்ணமுள்ள வஞ்சகன், சூதாடும் பழக்க முள்ளவன். இவ்வித துர்க்குணங்களுள்ளவன் தன் மனைவியைச் சரிவர நடத்த முடியுமா? அடிக்கடி தன் மனைவியை இம்சித்துக் கொண்டுவந்தான்.

இவள் மிக்க நல்லவள். கணவன் சொல்லுக்கு மீறி நடப்பவளல்ல; ஆயினும் கணவன் குடித்துவிட்டு வந்து தன்னை வருத்திக்கொண்டு வந்ததைப் பொறுத்துவந்தும் அவளால் தாங்கமுடியாமல் போயிற்று. கருடனைக் கண்ட பாம்புபோல் நடுங்கிக்கொண் டிருந்தாள்.

கடைசியாகத் தனது அன்பும், கீர்த்தியும் வீரமும் பொருந்திய ப்ருதிவிதான் இக்குறையை நீக்கவல்லவன் எனத் தெரிந்துகொண்டு உடனே, "எனது பிரியமுள்ள அண்ணா! எனது கணவர் என்னைப் படாத பாடு படுத்துகிறார். என்னால் சகிக்க முடியவில்லை. அவர் எப்பொழுதும் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைப் பானஞ் செய்கிற காரியத்தைச் சொல்ல என் நா வெழவில்லை. எழுத கையும் இடமில்லை. தங்களுடைய பரிதாபமான சகோதரியின்மீது அன்பும் இரக்கமும் தயையும் தங்களுக் கிருந்தால் அவள் படும் கஷ்டத்தினின்று அவளை நீக்கிக் காப்பாற்றுங்கள்" என வெகு உருக்கத்துடன் ஒரு கடிதம் எழுதி அனுப்பினாள்.

ப்ருதிவிக்குத் தன் சகோதரி எழுதியனுப்பிய கடிதம் கிடைத்தவுடன் அதைப் பார்த்தான்; அவனுக்கு



அடங்காத கோபமுண்டாயிற்று, அவனைத் தண்டிக்க உடனே அவனிடத்திற்குச் சென்று, "தன் சகோதரியாகிய ஒரு பெண்ணைத் தொந்திரவு செய்யலாமா? ஒரு பெண் சுகமாக விருந்தால்தான் உனக்கும் சுகமுண்டு, உன் குடும்பமும் விருத்தியடையும். ஏ! மூடா! நீ இனி மேலாவது உன் மனைவியாகிய என் பிரியம் வாய்ந்த சகோதரியைச் சரிவர நடத்தி வரவேண்டும். இல்லாவிடின் உனக்குத் தக்க தண்டனை கிடைக்கும். நீ யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு வாராமைக்குக் காரணம் உனது கெட்ட குணங்களும் நடவடிக்கையும்தான். உனக்கு நல்ல சகவாசம் கிடையாது. ஆகையால் அவைகளை நீக்கி நல்லவர்களோடு சகவாசம் செய்து வா. தினம் ஈஸ்வரனைத் தியானம் பண்ணு. அவனன்றி ஓரணுவு மசையாது என்பது பெரியோர்கள் வசனமன்றோ? நீ இவைகளை யெல்லாம் கவனியாமல் இவ்வித மிருப்பது எங்களுக்கெல்லாம் அவமானமா யிருக்கிறது. இனி நீ நல்வழியில் நடந்து வரவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் உன்னைச் சிட்சிப்பேன்" என்று கோபாவேசத்துடன் சொல்லித் தன் சகோதரியின் பாதரக்ஷையை எடுத்து அவன் தலையில் வைத்து அவனிடத்தில் வாக்குறுதி வாங்கிக்கொண்டு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

ப்ரவுராயுக்குத் தன் மைத்துனனிடத்தில் பயம். தன் மைத்துனன் மாசற்ற குணமுள்ளவனென்று தெரியும்; அவன் தன்னைக் கொல்ல நினைத்தால் கொன்றுவிடுவான் என்பதும் நன்றாகத் தெரியும். அதனால் அவனிடத்தில் மிக்க பயமுண்டு. ஆதலால் அவன் இட்ட கட்டளைக்குச் சம்மதிக்கவேண்டி யிருந்ததே யொழிய மனத்தில் அவனிடத்திலுள்ள விரோதத்தை மறந்தவனல்ல. பகிரங்க

மாக தன்னை அவமானப் படுத்தியதற்காக அவன்மேல் தீராப் பகை கொண்டு பழிக்குப் பழிவாங்கத் தீர்மானித்தான். ஆனால் இவ்வித கெட்ட எண்ணத்தை வெளிப்படுத்தாமல் தன் மனத்திலேயே வைத்திருந்து தக்க சமயம் எப்பொழுது வாய்க்குமென்று காத்திருந்தான். வெளிக்கு அவனிடத்தில் அதிக மரியாதையுடன் நடந்தும் வந்தான். ஒருநாள் ப்ருதிவியை வஞ்சக எண்ணத்துடன் தன்னுடன் போஜனமுண்ண வரும்படி மிக வேண்டிக்கொண்டான். கபடற்றவும் யோக்கியமுமுள்ள ப்ருதிவி இவனுடைய சூதான எண்ணத்தை அறியாமல் இவன் வேண்டிக்கொண்டபடி வருவதாக ஒத்துக்கொண்டான்.

போஜன சமயத்தில் எந்தப் பதார்த்தத்திலோ மரணத்துக்கு ஏதுவான பாஷாணத்தை ஒருவருக்கும் தெரியாமல் கலந்து அவனுக்குக் கொடுத்துவிட்டான். பரம சாதுவாகிய ப்ருதிவி நன்றாக அவைகளையெல்லாம் சரசசல்லாபமாயுண்டு களித்துவிட்டு விடைபெற்றுத் தன் கிருகத்திற்குச் செல்லப் புறப்பட்டான்; உடனே சாப்பிட்ட விஷத்தின் வேகத்தால் மயக்கம் மேலிட்டு ஞாபகமின்றிக் கீழே விழுந்தான். உடனே இவன் தங்கை ஐயோ! அண்ணா விழுந்துவிட்டாரே, காரணமென்னவெனப் பலவாறாக யோசிக்கலானாள். இந்தச் சங்கதி இவன் மனைவி முதலானோருக்கும் தெரியவந்தவுடன் அவர்கள் திடுக்கிட்டு ஓடிவந்து இவனைப் பார்த்து அழத்தலைப்பட்டார்கள். தாராபாய் தன் பிரியமுள்ள கணவனைத் தன் தொடையின்மீது வைத்துக்கொண்டு சைத்தியோபசாரங்களையெல்லாம் செய்து பார்த்தாள், ஒன்றும் பிரயோசனப்படவில்லை. வைத்தியர்கள் ப்ருதிவி பாஷாணத்தினால் மரணமடைந்தானென்று சொல்லிவிட்டார்கள். நல்ல பிராணியின் உயிர் ஒரு நிமிஷத்தில் போகவே ஊரிலுள்ள ஜனங்கள் திரளாக வந்து துக்கம் கொண்டாடினார்கள்.



"பொன்னுங் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும் - முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து."

"பொன்னையும், கரும்பையும், பாலையும், சந்தனத்தையும் பொடியாகச் செய்தாலும் அவற்றின் சுபாவக் குணம் சிறிதேனும் குறையாது. அதுபோல உத்தமர்கள் எவ்விதமான துன்பம் வந்த காலத்திலும் தங்களுடைய ஒழுக்கத்திலிருந்து அணுவளவாயினும் தவற மாட்டார்கள்" என்றவாறு தாராபாய் தன்னுடைய கணவனுடன் உடன்கட்டை ஏற நிச்சயம் செய்துவிட்டாள். தாராபாய் குழந்தைப் பருவத்தில் வீரமாயிருந்தாள்; தனது இளமைப் பருவத்திலும் சௌரியமாயிருந்தாள்; தனது மரண காலத்திலும் வீரபராக்கிரமமாயிருந்தாள்; தாராபாயை ராஜ்யத்திலுள்ள யாவரும் நேசித்துவந்தார்கள். தாராபாய் என்றால் மகாலக்ஷ்மிதான் அவதரித்துத் தங்கள் ராஜ்யத்திற்கு வந்திருக்கிறாளென்று மதித்துவந்தார்கள். தாராபாய் உடன்கட்டை ஏறப் போகும் சமாசாரத்தைக் கேட்ட ஜனங்கள் திடுக்கிட்டு "வேண்டாம், எங்கள் தாயே!" என்றார்கள்.

அவ்விதமே இவளுடைய மாமனார் மாமியார், தகப்பனார், தாயார், நாத்தனார் முதலியோரும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார்கள். மன உறுதியுள்ள தாராபாய் ஒருவர் பேச்சையும் கேட்காமல் தான் செய்யப்போகும் காரியத்தில் கண்ணும், கருத்துமாயிருந்ததுடன் தன்னை எல்லாரும் மன்னிக்க வேண்டுமென்று மிக்க வணக்கத்துடன்

சொன்னாள். அப்போது அங்கு கூடியிருந்த உறவினர், சிநேகிதர், பொது ஜனங்கள் முதலியோர் ஒரு வார்த்தையும் சொல்ல நாவெழாமல் மௌனமாயிருந்தார்கள். இவ்விதம் அவர்களிருந்தது தாராபாயிடத்தில் அவர்கள் வைத்திருந்த மரியாதையே தவிர வேறன்று.

உடனே நெருப்புக் குண்டம் வளர்க்கும்படி உத்திரவளிக்கப்பட்டது. தாராபாய் யாதொரு ஆடம்பரமுமின்றிக் கடவுளைத் தியானித்து வணங்கி அக்குண்டத்தைச் சுற்றிவந்து அதில் மாசற்ற இருதயத்துடன் தன் கணவன் பக்கத்தில் குதித்துவிட்டாள். உடனே அக்கினி ப்ரமாதமாக ஜ்வலித்துக்கொண்டு அப்புண்ணிய ஆத்மாக்களைச் சாம்பலாக்கிற்று. ஜனங்கள் மிகவும் துக்கித்தார்கள். இனி நமக்கு வேறு தாரா கிடைப்பாளோவென்றார்கள். அநேகர் இவ்விருவரும் மோக்ஷ சாம்ராஜ்ய பதவியடைய வேண்டுமென்று கடவுளை ஸ்துதி செய்துவிட்டுத் துக்கத்துடன் தங்கள் வீடு சேர்ந்தார்கள்.

தாராபாய் அன்போடும், முகமலர்ச்சியோடும் தன் கணவனுக்குப் பணிவிடை செய்துவந்தாள். "குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்" என்றபடியே மாசற நடந்துவந்தாள். ஜனங்களுக்காகத் தன் தகப்பனார் கொண்டிருந்த எண்ணத்தைப் பூர்த்திசெய்தாள். அவ்வித நற்குணம் அமைந்த பெண்மணிக்குச் சிறு பிராயத்தில் மரணம் உண்டானது கடவுள் செயலே. ப்ருதிவியும் சகோதரியினிடத்தில் மிக்க வாஞ்சையாயிருந்ததுடன் தன் மனைவியினிஷ்டப்படியே நடந்துவந்தான். இவர்களல்லவோ புண்ணிய ஆத்துமாக்கள்!

# 6. ஜஷ்ரேஸ்வரி

வங்காள ராஜ்யத்தை அரசுபுரிந்த பட்டாணி அரசர்களின் கடைசி அரசன் சுலிமான் என்பவன்.* ஆக்பர் டெல்லியை முக்கிய ஸ்தானமாக ஏற்படுத்தியபொழுது வட இந்தியா முழுவதும்* இவனாளுகைக்குக் கீழ்ப்படிந்திருந்தது. ஆனால் வங்காளம் மாத்திரம் சுயாதீனம் பெற்றிருந்தது. பட்டாணி அரசனாகிய சுலிமானை ஜெயித்துத் தனக்குச் சிற்றரசனாகச் செய்யும்படி முனிம்கான் என்பவனை ஆக்பர் அனுப்பினான். முனிம்கான் அவ்விதமே சென்று சுலிமானைக் கொன்று அத்தேசத்தையும் டெல்லியுடன் சேர்த்துவிட்டான். சுலிமானுடைய குமாரன் தாவுட்கான் ஒரிசாவுக்கு ஓடிப்போய்விட்டான். ஆனால் முகலாயர் ஒரிசாவுக்கும் வருவதை அறிந்து வங்காளத்திற்குத் தெற்கிலுள்ள ஜெஸ்ஸோர் என்ற பட்டணத்திற்குத் தனது ஆஸ்திகளையெல்லாம் கொண்டுபோய்த் தனது தகப்பனிடத்தில் உண்மையாயிருந்த மந்திரியாகிய ஒரு வங்காளியிடத்தில் கொடுத்துப் பத்திரப்படுத்திவிட்டான். இம்மந்திரி சுலிமானிடத்தில் விசுவாசமாயிருந்ததுடன் ராஜ்ய பொக்கிஷத்தையும் சரிவரப் பாதுகாத்துவந்தான். இவனுக்கு ஜெஸ்ஸோர் என்ற ஜாகீரையளித்து விக்கிரமாதித்ய ராஜாவென்ற பட்டத்தையும் அளித்தான். சுலிமான் கொலையுண்ட பின் வங்காள முழுவதையும் ஆண்டுவந்தான்.

அக்காலத்தில் சிற்றரசர்கள் தங்கள் நாடுகளை முழுச் சுதந்தரத்துடன் ஆண்டுவந்தார்கள். இவர்களிட்டதே



லாகூர் கேட் (இது டெல்லியிலிருக்கிறது.)

சட்டம். இவர்கள் பட்டாணி அரசனுக்குக் கீழ்ப்பட்டவர்களாயிருந்தார்கள் என்பதே யொழிய எல்லாச் சுதந்தரங்



களையும் பெற்றுத் தங்களிஷ்டம்போல் தங்கள் தேசத்தை ஆண்டுவந்தார்கள். பட்டாணி அரசனும் இவர்களிடமிருந்து வருஷாவருஷம் கப்பம் பெற்றுவந்தான். ஆனால் அடிக்கடி இவர்களுக்குள் சண்டை நடந்து வந்தது. இவர்கள் அடிக்கடி கப்பம் கட்டாமலும் பட்டாணி அரசனைத் தங்களுக்கு மேலானவனென்று மதியாமலுமிருந்தார்கள். பட்டாணி அரசன் தன் சேனையை அவர்களிடத்தில் அனுப்பிக் கலகத்தை அடக்கிக் கப்பம்பெற்று வருவதுதான் அவனுக்கு முக்கிய தொழிலாயிருந்தது.

சலிமான் கொலையுண்டதும், தாவுட்கான் நாட்டைத் துறந்துவிட்டு ஓடினதும் வங்காளத்திற்கு நன்மையாயிற்று. வங்காளம் ஒருவராலும் ஜயிக்கப்படவில்லை. சிற்றரசர்களுக்குப் பணம் மீதியாய்விட்டது. மொகுலாய சேனைத்தலைவன் தாவுட்கானைப் பின்தொடர்ந்து அவனைப் பிடிக்க முயன்று வந்தமையால் வங்காளத்தைக் கவனிக்க இவனுக்கு அவகாசம் சிறிதேனுமில்லை. தேசம் விட்டு ஓடின தாவுட்கானைப் பின்தொடர்ந்து அவனைக் கடைசியாகப் பிடித்துக் கொன்றுவிட்டான். அப்படிச் செய்யவே அவன் சேனைகள் சிதறுண்டு போயின. தாவுட்கானுடைய சேனைத்தலைவன் மொகுலாய சக்கரவர்த்தியினிடம் சமாதானம் செய்து கொண்டு வங்காளத்தை ஆண்டுவந்தான்.

இவன் ஆளுகையிலும் சிற்றரசர்களுக்குள் சண்டைகள் அதிகரித்திருந்தன. இவ்விதம் வங்காள ராஜ்யமிருப்பதை ராஜா தோடர்மால் கண்டு விசனமுற்று அவர்களை எதிர்த்தான். ராஜா தோடர்மால் மாங்கீர் கோட்டைக்குள் தங்கிவிட்டு அக்கோட்டையை இந்து அரசர்களும், பட்டாணிகளும் வளைத்துக்கொண் டிருந்தார்கள். ராஜா தோடர்மால் ஒன்றரை வருஷம் இக்

கோட்டையிற்றானே யிருக்கவேண்டி யிருந்தது. கடைசியாக தந்திரோபாயத்தால் இந்த அரசர்களைச் சிநேகம் செய்துகொண்டு அவர்களுதவியால் பட்டாணிகளை வங்காள ராஜதானிக்கு வெளியில் துரத்திவிட்டு அதைக் கைவசம் செய்துகொண்டார்.

உடனே சிற்றரசர்கள் சண்டைகளின்றியும் சமாதானத்துடன் அக்பர் சக்கரவர்த்தியின் ஆளுகையின் கீழிருந்து தங்கள் நாடுகளை ஆண்டு வந்தார்கள். பட்டாணி அரசனுக்குக் கப்பம் கொடுத்து வந்ததுபோல் அக்பருக்கும் கப்பம் கட்டிவரச் சம்மதித்தார்கள். விக்கிரமாதித்ய ராஜனும் இவ்விதமே கப்பம் கட்டி வருவதாகத் தோடர்மாலிடம் சொல்லி விடை பெற்றுக்கொண்டு தன்னிருப்பிடத்திற்குச் சென்றான். இவன் சிலகாலமிருந்து பின் மரணமடையவே இவனது புத்திரன் ப்ரதாப ஆதித்யன் என்பவன் ராஜ்யாதிகாரம் பெற்று அரசபுரிந்து வந்தான்.

இவன் நாட்டில் சண்டை சச்சரவுகளின்றி ஜனங்கள் சமாதானத்துடனிருந்தார்கள். இவனும் மகா பராக்கிரமமுடையவனாய் விளங்கினான். இவனுக்கு ஜஷோரேஸ்வரி என்ற மனைவியிருந்தாள். இவளுடைய உண்மையான பெயரின்னதென்று யாவருக்கும் தெரியாது. ஆனால் இது அவள் கணவன் குடும்ப தேவதையின் பெயர். இத்தேவியாருக்கு அரண்மனையிலேயே ஒரு அழகான கோயில் வெகு காலத்திற்கு முன் கட்டப்பட்டிருந்ததாம். முதலில் இக் குடும்பத் தலைவனுக்கு இத் தேவியார் பிரசன்னமாகிப் பின்வருமாறு சொன்னளாம்:— "அப்பா! உன் குடும்பத்தில் தர்மம் நிலைத்து நீங்கள் நல்லவர்களாயிருக்கும் வரையில் நானிவ்விடத்திலேயேயிருந்து உங்களையெல்லாம் பாதுகாத்து வருவேன். ஆனால் உங்கள் குடும்பத்தில் அக்கிரமங்களும் தீயசெயல்



களும், அதர்மமும் அதிகரித்தால் நான் உங்களை விட்டு நீங்கிப் போய்விடுவேன். அப்பொழுது என்முகம் அரண்மனையை நோக்கி யிராமல் திரும்பியிருக்கும். பின் பக்கம் மாத்திரம் தென்படும். இதுதான் நான் உங்கள் குடும்பத்தை விட்டு நீங்கும் முன் தென்படும் அடையாளம்."



அக்பர்

இப்பொழுது இக் குடும்பத்தில் இரண்டு ஜஷோரேஸ்வரிகளிருக்கின்றார்களல்லவா? ஒருவர் உயிருள்ள ஸ்திரீ — ப்ரதாப ஆதித்யனுடைய மனைவி — மற்றொருவர் இக் குடும்ப தேவியார். ப்ரதாப ஆதித்யனுடைய மனைவி மகா பதிவிரதா சிரோமணி. தர்மம் செய்பவள். தெய்வபக்தியுள்ளவள். ஒருவருக்கும் தீங்கு செய்யமாட்டாள். ஏழைகளிடத்தில் இரக்கமுள்ளவள். கணவனிடத்தில் மிக அன்பு வாய்ந்தவள். கணவனே தனக்குத் தெய்வமென எண்ணி நடப்பவள். நற்காரியங்கள் செய்வதில் மகா தைரியம் பொருந்தியவள். ப்ரதாப ஆதித்யன் இவ்வித நற்குணங்களமைந்த இல்லாளோடு வாழ்ந்து ராஜ்யத்தை ஆண்டு வந்தான்.

இவன் மகா பலமுள்ளவன். இவனைக் கண்டால் மற்ற அரசர்கள் பயப்படுவார்கள். இதனால் இவனுக்கு கர்வ மதிக மூண்டானது. கர்வத்தால் துஷ்டனானான்.

அடாத செயல்களை யெல்லாம் செய்ய ஆரம்பித்தான். துஷ்டர்களுடன் கூடிக் குலாவி வந்தான். நல்லெண்ணங்களும் தர்ம சிந்தையும் இவன் மனத்தில் இல்லை. இவ்விதக் கெட்ட குணங்க ளமைந்த மகானுபாவன் தர்மதேவதை போன்ற ஐஷ்ரேஸ்வரிக்குக் கணவனாக வாய்த்தது தெய்வ சங்கற்பமே. விதியை வெல்ல யாரால் முடியும்? நற்குணவதியான ஐஷ்ரேஸ்வரி "ஐயோ! நமது கணவன் நல்வழியில் திரும்பிச் சத்சகவாசம் செய்துகொண்டும், கடவுளைப் பூசித்துக்கொண்டும் ராஜ்யத்தை எப்பொழுது ஆண்டுவருவார்" என கடவுளை ஸ்தோத்திரம் செய்துகொண்டு வருவாள். தினம் தேவியாரைக் கண்டு புலம்புவாள். நல்ல அழகும் வாசனையும் பொருந்திய மலர்களைக் கொண்டு வந்து மாலை தொடுத்து அம்மனுக்கு அளித்து பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்து வணங்குவாள்:

"பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி யென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்ச ரிக்க வசமோ
வாரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
வகிலாண்ட கோடி யீன்ற
வன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசு
மானந்த ரூப மயிலே."

ப்ரதாப ஆதித்யனைக் கண்டவர்களெல்லாம் நடுங்குவார்கள். இவன் தனது பலத்தாலும் வீரம் பொருந்திய சேனைகளின் உதவியாலும் எல்லாரையும் ஜெயித்து



சுயேச்சையாக இருக்க எண்ணினான். இதற்காக இன்னும் தன் சேனையைப் பலப்படுத்தி விருத்தி செய்ய முயன்றுவந்தான். துஷ்டர்களை யெல்லாம் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு தனது ராஜ்யத்திற்குச் சமீபத்திலுள்ள அரசர்களிடமிருந்து கப்பம் பெறவும், பட்டணங்களையும், நகரங்களையும் அழித்துக் கொள்ளையடிக்கவும் ஆரம்பித்தான்.

சனி பகவான் இவனிடத்திலேயே குடிகொண்டார். இவன் அநேக வீடுகளையெல்லாம் கொளுத்தி நாசமாக்கினான். அநேகருடைய ஆஸ்திகளையெல்லாம் அபகரித்துக் கொண்டான். அநேக கோயில், குளம், நகரம் முதலியவைகளை அழித்துவிட்டான். இவைகளெல்லாம் போதாதென எண்ணிப் பெருந்த சேனைகளையும், போர்த்துகீஸ் கப்பற்படைகளையும், தீவர்த்திக் கள்ளர்களையும் சேகரித்துக் கொண்டு ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரைக்கும் கொள்ளையடித்துப் பாழாக்கப் புறப்பட்டுவிட்டான்.

மொஹலாய கவர்னரால் இவனைத் தண்டிக்க முடியவில்லை. அவரை நிந்தித்துக் கப்பம் செலுத்தமாட்டேனென்றும், மொஹலாய சக்கரவர்த்தியைத் தான் அங்கீகரிக்க மாட்டேனென்றும் பகிரங்கமாக மறுதலித்துவிட்டான்.

தன்னைப் போன்ற சிற்றரசர்களைக் கொன்று அவர்கள் ராஜ்யங்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டான். இத்துடன் அவன் சந்தோஷப்படவில்லை. தன் தந்தையின் சகோதரனாகிய வஸந்தராயின் மீது இவனுடைய கண்கள் பாய்ந்தன. வஸந்தராயைப் போல் நல்லவர் கிடையாது. பழம் முதிர்ந்த தேசாபிமானி. யாவராலும் நேசிக்கப்பட்டும், வணங்கப்பட்டும் வந்தார். தனது

சகோதரன் குமாரன் செய்கைக்கு இணங்கவில்லை. கெட்ட நடவடிக்கைகளை விட்டுவிடும்படி அவனைத் தூண்டுவதில் முயன்றார். ஆனால் ப்ரதாப் அவருடைய புத்தியுள்ளவும், ராஜதர்மமுள்ளவுமான வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்கவேயில்லை. தன்னைத் தனது ப்ரஜைகள் நேசிக்கவில்லையென்பதும் அவனுக்குத் தெரியும். வஸந்தராயை ஜனங்கள் கடவுளைப் பூஜிப்பது போல் பூஜித்து வருவதும் இவனுக்குத் தெரியும். எங்கே ஜனங்கள் ஒன்றாகச் சேர்ந்து தன்னை எதிர்த்துத் தோற்கடித்து வஸந்தராயை அரசனாகச் செய்துவிடுவார்களோ என்ற பயம் இவன் மனதில் உதித்தது. உடனே இவ்விதம் ஒன்றும் நேரிடாமல் தன்னைக் காத்துக்கொள்ளக்கூடிய உபாயங்களையெல்லாம் யோசித்தான். கடைசியில் அம்மஹா பாவி யோக்கிய சிகாமணியாகிய வஸந்தராயையும், அவன் குடும்பத்தாரையும் கொலைபுரிந்துவிடுவதே நலமெனத் தீர்மானித்தான்.

இத்துன்மார்க்கனுடைய சற்குணமுள்ள மனைவி இப்பயங்கரமான துராலோசனையைக் கேட்டவுடன் நடுங்கி மயிர்சிலிர்த்து "ஓ! தேவியாரே! என் கணவருக்கு இவ்வித எண்ணமும் உண்டாக வேண்டுமோ? நீங்கள் இதை இனியாவது தடுக்கக் கூடாதா?" எனப் புலம்பித் தன் கணவனை யணுகி அவனைத் தன்னால் ஆனமட்டும் இவ்வித அருவருப்பான செய்கையைச் செய்யாமலிருக்கும்படி பற்பல விதத்திலும் மன்றாடினள். "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற்கிணங்க இவன் அவள் சொற்களைக் கேட்கவில்லை. தான் எண்ணியதைச் செய்துமுடிக்க ஆயத்தமாயிருந்தான். இக்கொடிய பாதகச் செயலைத் தன் கணவன் செய்யாமலிருக்கும்படி தடுக்க தைரியமான யோசனை



யொன்று இவள் ஞாபகத்திற்குவந்தது. அவ்விதம் செய்யலாமென்று எண்ணினள். அது நிறைவேற வேண்டுமே என்று சொல்லிக்கொண்டு கடவுளைத் தியானித்தாள். பின்பு தேவியார் ஆலயத்துக்குப் போய் தேவியாரைப் பலவிதமாய்த் தோத்திரம்செய்து வேண்டிக்கொண்டாள். தன் கணவனுக்கு நல்ல அறிவும், நற்சகவாசமும் உண்டாகும்படி பிரார்த்தித்தாள். இவ்வித துர் எண்ணம் அவர் மனதிலிருந்து அகலும்படி செய்யவேண்டுமென்று வணங்கியபின் வீடு சென்றாள்.

வங்காளத்தில், எல்லா ராஜ குடும்பத்தாராலும் ஒரு பழமையான வழக்கம் பெருமையாக அநுசரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுதும் அது வழக்கத்தில் வழங்கி வருகிறதாம். ஒரு உயர்குலத்து மாது தன் விவகாரத்தை நியாயஞ் சொல்லித் தன்னைத் தப்புவிக்க ஒரு வீரமுள்ளவனைக் கோரினால், வீரர்களுள்ள ராஜசபையில் தன் கையில் அணிந்திருக்கும் கங்கணத்தை அனுப்புவாள். ஒரு தாதி மூலமாகக் கொடுத்து, "இதை அங்கு கொண்டு போய் அவர்கள் மத்தியில் வைத்து எவனாவது ஒரு வீரன் இதை எடுத்துக்கொள்ளும்படி சொல்லி" யனுப்புவாள். தாதி அவ்விதமே கங்கணத்தைப் பெற்றுத் துரிதமாகச் சபைக்குச் சென்று அவர்கள் மத்தியில் அதை வைத்து வீரமுள்ளவனை எடுத்துக் கொள்ளும்படி சொல்லுவாள்.

வீர பராக்கிரமமுள்ளவன் தைரியமாக முன்வந்து எந்த மாது இதை இங்கு அனுப்பினாளோ அம்மாது உயிருள்ளளவும் அவளுக்கு யாதொரு தீங்கும் வாராவண்ணம் அவளைப் பாதுகாப்பேன் என்றும், அம்மாதின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருப்பே னென்றும் அச் சபையின்முன் சபதம் செய்வான். செய்தபின் இவ்

வீரன் அம்மாதின் விவகாரத்தை யறிந்துகொண்டு அம்மாதுக்கு யாதொரு விபத்தும் விளையாமல், அவள் ஜீவிய கால முழுவதும் அவளைப் பாதுகாத்து வருவான். முன் காலத்தில் வீரர்கள் சத்தியம் பிசகாமல் நடந்து வந்தார்கள். தாங்கள் செய்த சபதத்தைச் சிறிதேனும் தவறாமல் நிறைவேற்றியும் வந்தார்கள்.

ஒருநாள் ராஜசபை கூடிற்று. ப்ரதாப ஆதித்யன் சபைக்கு வந்து சிம்மாசனத்தில் உட்கார்ந்தான். அப்பொழுது அநேக வீரர்களும் அங்கு தங்கள் ஆசனத்தில் வீற்றிருந்தார்கள். திடீரென்று ஒரு தாதி அச் சபையில் நுழையவே, யாவரும் கண்டு அதிசயித்தார்கள். என்ன சமாச்சாரமோ வென ஏங்கி யிருந்தார்கள். யாவரும் ஆச்சரியப் படும்படியாகத் தான் ஐஷ்ரேஸ்வரியி னிடமிருந்து பெற்றுவந்த கங்கணத்தைச் சபாமண்டப மத்தியில் விட்டெறிந்தாள். "ஏதை எறிந்தாள், எதற்காக அகஸ்மாத்தாய் வந்து இவ்விதம் செய்தாள்" என்று ஜனங்கள் எண்ணி ஆச்சரியப்பட்டுத் தங்கள் அரசனை ஆவலுடன் உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். அரசன் மௌனமாக உட்கார்ந்திருந்தான் — அவனுடைய அகோரமான முகம் மேகம் மூடியதுபோல் தென்பட்டது. எல்லாரும் அக்கங்கணத்தைக் கண்டவுடன் சங்கதி வெளிப்படையாயிற்று.

ஆயினும் ஒருவரும் அதை யெடுக்க முன்வரவில்லை. தங்கள் ராஜனுக்குப் பயந்திருந்தார்கள். கடைசியாக ஒரு வீரன் மெதுவாக யாதொரு ஆடம்பரமு மின்றி எழுந்தான். இவன் தான் சேனைக்குத் தலைவன், ராணியாரின் ஸ்ஹோதரன், கங்கணமிருக்கு மிடத்திற்குச் சென்று மிகப் பிரியத்துடன் அதை எடுத்துக்கொண்டு ராஜனைப்



பார்த்து "இந்தக் கங்கணம் நமது ராணியாரிட மிருந்து வந்திருக்கிறது. ராணியார் ஒரு வீரன் உதவியைக் கோருகிறாள். எவ் விஷயத்தைப் பற்றி ஆதரித்துப் பேசி ராணியாருக்கு உதவி புரிய வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. இது ராணியாரிடமிருந்தே வந்திருக்கிறபடியால், அவளது எஜமானரும், அவளைக் காப்பாற்றிவருபவரும், அவளது எதிரிகளை எதிர்ப்பவரும், அவளது ராஜனுமாகிய நமது ராஜா அவர்கள், நான் இதை எடுத்துக் கொண்டதை அங்கீகரிப்பாரென்று நம்புகிறேன். ஆனால் அவர் மௌனமாய் உட்கார்ந்துகொண்டு தாம் அதை அங்கீகரிப்பதாக யாதொரு குறியையும் காண்பிக்காம லிருப்பதாலும், இம் மண்டப சபையில் வீரமுள்ள மனிதர்கள் இல்லாமையாலும்; நான் இதை எடுத்துக்கொண்டதை மனப்பூர்வமாய் ஒத்துக்கொண்டதாக நீங்கள் இப்பொழுதே சொல்லுங்கள். நான் அவ்விராணியாரின் மரண காலம் வரையில் அவளுடைய விவகாரங்களைச் சரியாய்த் தீர்த்து அவளுக்கு யாதொரு தீங்கும் வராமல் அவளைப் பாதுகாப்பதாகத் தெய்வ சாக்ஷியாகச் சத்தியம் செய்கிறேன்" என்று மனோதைரியத்துடன் சொன்னான்.

அரசன் பதிலொன்றும் உரைக்காமல் கோபமா யிருந்தான்.

ராணியாருடைய தாதி உடனே தனது இனிய குரலுடன் பின் வருமாறு யாவருக்கும் நன்றாகக் கேட்கும்படி சொன்னாள் :—"இக் கங்கணத்தை மனோதைரியத்துடன் ஏற்றுக்கொள்ளும் தைரிய புருஷன் ராஜா வஸந்தராயையும், அவர் குடும்பத்தாரையும் பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டியதுதான் நமது ராணியாரின் கட்டளை. இதுதான் நமது ராணியாரின் எண்ணமும், கோரிக்கையுமேயாம்" என்றாள்.

உடனே "அது அவ்விதமே செய்யப்படுமென்று" வீரமுள்ள சூரன் உரைத்துத் தனது ஸ்தானத்திற்கு மெதுவாகச் சென்று ஆசனத்தில் முகமலர்ச்சியுடன் அமர்ந்தான்.

அங்கிருந்தவர்களெல்லோரும் இவன்தான் நமது ராஜனைத் தண்டிக்கத் தகுந்தவன் என்று சொல்லிக்கொண்டார்கள்.

ராஜனுக்கோ அடங்காக் கோப முண்டாயிற்று. என்ன செய்வான் பாவம்! தனது மைத்துனனே வஸந்தராயிக்கு உதவியாக வந்திருக்கிறான். மேலும் தனது உயிர்க்குயிரான மனைவியும் நற்குணமுள்ள அவனை இரக்ஷிக்கவேண்டுமென்று கோருகிறாள்.

அரசன் தக்ஷணமே ராஜ சபையைக் கலைத்துவிட்டு அந்தப்புரத்திற்குத் துரிதமாக ஏகினான். போயும் என்ன? ஒருவருக்கும் பயப்படாத இவன், தன் மனைவியைக் கண்டால் மிக அஞ்சுவான். ஏனெனில் இவள் மகா பதிவிரதை, நற்குணவதி. இவனோ துராத்துமா. எப்பொழுதும் கெட்டவர்கள் யோக்கியர்களைக் கண்டால் அஞ்சுவார்கள். இவ்விதமே இவனும் மிகுந்த கோபத்துடன் உட்சென்று ஒன்றும் பேசாமல் சிம்மத்தைக் கண்ட பூனை போல் நடுங்கியிருந்தான்.

உண்மையாகவே அவன் பெண்சாதி ஒரு பெண் சிங்கத்தைப் போல் இருந்தாள். உட்சென்ற அரசன் மெதுவாகத் தன் மனைவியை அழைக்கவே, அவள் உடனே வந்து கணவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைத் தவறின்றிச் செய்தாள். அவன் 'நீ ஏன் வஸந்தராயைக் காப்பாற்ற வேண்டுமென்று உறுதியுள்ளவளாயிருக்கிறாய்? அவன் இறந்துபோகவேண்டியதுதான்; அப்படிக்



கின்றி அவன் உயிருடனிருந்தால் நமக்கு ஆபத்து வருவது நிச்சயம்' என்றான். இன்னும் அவனைப் புகழ்ந்து பேசினான். அவளுடன் குதூகலத்துடன் பேசினான். அவள் இசையவில்லை; பின் அவளைக் கடிந்து பேசினான்.

இதற்கும் அவள் இணங்காமல் "அவன் மகா யோக்கியன், அவனைக் காப்பாற்ற வேண்டியவர்கள் நாம்தாம், அப்படியிருக்க அவனை கொலைபுரியலாமா? அது நியாயமன்று, நான் அதற்குச் சம்மதியேன்" என்று சொல்லவே, 'நமது உயிருக்குச் சேதம்வரும்' என்றான் அவள் கணவன்.

"நமது உயிருக்கு அபாயம் வந்தாலும் சரி, வராவிடினும் சரி, அவ்வித பெரிய பாதகத்தைச் செய்யும்படி உம்மை நான் விடமாட்டேன்" என மனோ உறுதியுடன் சொன்னாள். அரசன் பின்பு மனந்தளர்ந்து, ஐயோ! நாமென்ன உபாயங்கள் செய்தும் நமது மனைவி ஒன்றுக்கு மிணங்கவில்லையே. இனி நாம் எவ்விதம் அவன் உயிரை வாங்குகிறது? என்ற கெட்ட எண்ணத்துடன் யோசித்துக் கொண்டிருந்தான்.

அந்தக் கிழ மனிதனைக் கொல்லுவது இனி அசாத்தியமெனக் கண்ட ப்ரதாபன் இரகசியமாய் அவனை வஞ்சித்துக் கொலை செய்யும் வழியைத் தேட ஆரம்பித்தான். தான் முன்செய்த கெட்ட செயல்களுக்காக வருந்துபவன் போல் பாசாங்கு செய்தான். வஸந்தராயினிடத்திற்குப் போய் அவன் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். இவ்விதம் இவன் சுமார் ஆயிரம் தடவைக்குமேல் செய்து வந்தான்.

வஸந்தராய் ஜெஸ்ஸுருக்கு இரண்டு மைல் தூரத்தில் ஒரு கோட்டையில் வசித்துக்கொண்டிருந்தார்.

இவர் வசித்த இடம் ரிஷி ஆசிரமம்போல விருந்தது. இவர் மகா பக்தி சிரத்தையுள்ளவரே. தினம் பூஜை ஜபம் முதலியவைகளைத் தவறாமல் செய்து வந்தார். இவரைக் கொல்லச் சதியாலோசனை செய்து இவரிடத்திற்கு வந்து தனது அரண்மனையில் விருந்துண்ண வரும்படி மிகப் பிரியமுள்ளவன்போல் இக் கபட நெஞ்சுள்ள பாவி வேண்டிக்கொண்டான். சூது வினை யொன்று மறியாத அம் மகா உத்தமர் அவ்விதமே வர ஒத்துக் கொண்டார்.

ஆனால் அதிதாப முள்ளவன்போல் வெளிவேஷ மாக நடித்த ப்ரதாபன் மீது இருவருக்குத்தான் அதிக சந்தேக முண்டானது. "பாம்பறியும் பாம்பின்கால்" என்பதுபோல் இவனுடன் பழகினவர்களுக்குத்தான் இவனது கெட்ட எண்ணங்களும், செய்கைகளும் நன்றாகத் தெரியும்.

ப்ரதாபன் தன் மனைவியைப் பார்த்து வஸந்தராயை விருந்துக்கு அழைக்க எனக்கு விருப்பமிருக்கிறது. உனக்குச் சம்மதமா வென்றான்.

அந்தத் தைரியம் பொருந்திய ராணி வஸந்தராயின் குமாரனைப் பத்திரப்படுத்தி விட்டுச் சரி உமது இஷ்டம்போல் செய்யும்; ஆனால் அவருக்கு யாதொரு தீங்கும் செய்யாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் என்றாள். இவள் செய்யவேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து விட்டாள். தன் சகோதரனையும் வரவழைத்திருந்தாள்.

வஸந்தராய் ஜெஸ்ஸூருக்குப் புறப்படுமுன் தனது மனைவியைக் கூப்பிட்டு, "நான் இந்தப் புறாவை எடுத்துக்கொண்டு போகிறேன். இது உடனே உன்



னிடத்திற்குத் திரும்பி வந்துவிட்டால் நான் கொல்லப் பட்டேனை அல்லது சிறையாக்கப்பட்டேன் என்பதாக அறிந்துகொள்" என்று சொல்லியபின் தன் மனைவியிடம் விடை பெற்றுக்கொண்டு சில துருப்புகளுடன் சென்றான்.

வழியில் ப்ரதாபன் ஒருவருக்கும் தெரியாமல் இவரைக் கொன்றுவிடும்படி சில தடிகாரர்களை ஏற்படுத்தி உத்திரவு செய்திருந்தான். இவ் வஞ்சகர்கள் பாபமோஷத்திற் கஞ்சாமல் கொடிய பாதகத் தொழிலைச் செய்யத் துணிந்து வஸந்தராயின் வரவை நோக்கியே யிருந்தார்கள். பரிதாபமான வஸந்தராயர் சமீபத்தில் வருவதை இவ்வஞ்சகர்கள் அறிந்து அவருக்குத் தெரியாமல் மறைந்திருந்து மெதுவாக அவர் பின்சென்று அவரை ஒரு நொடியில் கொன்று விட்டார்கள்.

எஜமானிடத்தில் மிகப் பழகிய பக்ஷியுள்ள அந்தப் புறா தப்பித்துக்கொண்டு தனதுமே பறந்து வஸந்தராயின் கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தது. புறா வந்ததைக் கண்ட வஸந்தராயின் உத்தம மனைவியரும், மற்ற பந்துக்களும் அந்தத் துன்மார்க்கன் இன்னும் என்னென்ன கெடுதல்களை விளைவித்துத் தங்களை இம்சிப்பானோவென்று பயந்து நடுநடுங்கி, அரண்மனைக் கோட்டையிலுள்ள சித்திரக்குளத்தில் விழுந்து பிராணனை விட்டார்கள்.

வஸந்தராயின் குமாரன் ப்ரதாபன் மனைவியாரால் பத்திரப்படுத்தப்பட் டிருக்கிறானென்பது நமக்கு முன்னமேயே தெரியுமல்லவா? ப்ரதாபன் சிலரைவிட்டு அக் குமாரனையும் கொலை புரிந்துவர ஏவினான். அவர்கள் அவன் இருப்பிடத்தின் வாசனைகூடத் தெரிந்துகொள்ள முடியாமல் திரும்பி வந்துவிட்டார்கள்.

எப்பொழுதும் துஷ்டர்கள் நீடித்த காலம் சுகமாக ஜீவித்து வருவது அரிது. எப்பொழுதாவது கடவுள் அவர்களைத் தண்டிப்பாரென்பது நிச்சயம். மொஹலாய சேனாபதிகளில் மகா கீர்த்திபெற்ற ராஜா மன்சிங் என்பவன் பெருத்த சேனையுடன் இறுமாப்புள்ள அரசனைச் சிக்ஷை செய்துவரும்படி அக்பரால் அனுப்பப்பட்டான்.

இவன் உடனே புறப்பட்டுக் கங்கா நதிக்கரையண்டை வந்து இறங்கி இதர சிற்றரசர்களையும் உதவிக்காக சேர்த்துக்கொண்டு ஜெஸ்ஸூருக்குப் பயணமானான். ஜெஸ்ஸூருக்குச் சமீபத்தில் வந்து கூடாரங்களை யடித்துக்கொண்டு எல்லாரும் தங்கினார்கள்.

ராஜா மன்சிங் ப்ரதாபை அக்பர் மன்னித்து அவனை அரசனாக அங்கீகரித்து இருக்கிற ஆஞ்ஞாபத்திரத்தையும், ஒரு கத்தியையும் அவனுக்கு அனுப்பினான். ப்ரதாபன் அப்பத்திரத்தைத் துண்டு துண்டாகக்கிழித்தெறிந்து விட்டுத் தூதனைக் கூப்பிட்டு "இந்தக் கத்தியைத்திரும்பி எடுத்துக்கொண்டுபோய், அதை மன்சிங் எஜமானன் கழுத்தில் சுற்றிவைக்கும்படி, மன்சிங்குக்குச் சொல்லு" என்றான்.

தூதன் வேகமாக் கோபக்குறிகளுடன் ராஜா மன்சிங் முன்வந்து நடந்த விஷயங்களை யெல்லாம் சொன்னவுடன், சேனாபதி இருக்கட்டும், உடனே யுத்தத்திற்குப் புறப்படுங்கள் என்று உத்திரவளித்தான்.

ப்ரதாப் ஆதித்யன் திரண்ட சேனைகளைச் சேகரித்துக்கொண்டு யுத்தம் செய்ய ஆயத்தமா யிருந்தான். இருவருக்கும் பலத்த யுத்தம் காலை முதல் சாயங்காலம் வரையிலும் வெகுகோரமாக நடந்தது. ஒருவரும் இளைத்தவர்களல்ல. ஆயினும் ப்ரதாபுக்கு ஜயம் உண்டாகும்



போலிருந்தது. எதிரியின் சேனையை ஒழுங்கீனமாகச் செய்துவிட்டான். ப்ரதாப்புக்குத்தான் ஜயமென்று யாவரும் எண்ணியிருந்தார்கள். உடனே ஒரு குழப்பமுண்டானது. ஒழுங்காயிருந்த குதிரைவீரர்கள், காலாட்கள் முதலியவர்களெல்லாம் தங்கள் ஸ்தானத்தை விட்டுப் பல திக்குகளிலும் ஓடத் தலைப்பட்டார்கள்.

இவ்விதம் அகஸ்மாத்தாய் என் யுத்தவீரர்கள் செய்கிறார்கள்? இதற்கு காரணமென்னவென்று ப்ரதாபன் கேட்டான். "ஐஷ்ரேஸ்வரி போய்விட்டாள்" என்று பதில் சொன்னார்கள். அவர்கள் சொன்ன தின்னதென்று ப்ரதாபனுக்கு விளங்காமையால் "என் மனைவியா இறந்து விட்டாள்" என்று கேட்டான். "மகாராஜ்! இல்லை; நமது குலதெய்வமாகிய ஐஷ்ரேஸ்வரி நமது அரண்மனையை விட்டு நீங்கிவிட்டாள்" என்று கும்பலிலுள்ள எவனோ ஒருவன் பதிலுரைத்தான்.

முன்னமேயே ஐஷ்ரேஸ்வரி அவ்வூரை விட்டு நீங்கும்பொழுது அடையாளம் தென்படுமென்றும், அவ்விதம் தேவியார் போனவுடன் அவ்வூர் அரசன் வல்லமையெல்லாம் அழிந்துவிடுமென்றும் சொல்லியிருக்கிறதல்லவா? எங்கு பார்த்தாலும் தங்கள் குலதெய்வம் தங்கள் ஊரைவிட்டுப் போய்விட்டாள் என்ற கூச்சல் பரவியிருந்தது. உண்மையாகவே ஐஷ்ரேஸ்வரியின் முகம் பின்பக்கம் திரும்பியிருந்தது.

ஜனங்களுக்குத் தைரியம் போய்விட்டது. தங்களுக்கு ஜயம் உண்டாகுமென்ற எண்ணத்தைத் துறந்தார்கள். பல திக்குகளிலும் ஓடத் தலைப்பட்டார்கள். இவர்களை ஒருவராலும் தைரியப்படுத்தி மனோதிடத்துடனிருந்து யுத்தம் புரியும்படி புத்தி சொல்ல முடியவில்லை.

ஏனெனில் கடவுளுக்கு ப்ரதாபனுடைய குணங்கள் பிடிக்கவேயில்லை. அவனுக்கு அழிவுகாலமும் சமீபித்து விட்டது. இவனும் புத்தி ஸ்திரமின்றித் தயங்கி மூடன்போலிருந்தான்.

எதிரிகள் இவைகளை யெல்லாம் நன்றாக அறிந்துகொண்டு ப்ரதாபனிடத்திற்குச் சென்று அவனைச் சிறை பிடித்துவிட்டார்கள். ப்ரதாபன் உடனே எண்ணாத எண்ணங்களை யெல்லாம் எண்ணி எண்ணித் துக்கித்தான். தான் செய்த வினையின் பயனென்று அறிந்து விசனமுற்றுக் கடவுளை ஸ்துதி செய்தான். இதுதான் அவன் செய்த முதல் தெய்வ ஸ்துதி.

இச் சங்கதி ஜஷ்ரேஸ்வரிக்கு எட்டினது. அவள் "வரும் விதி வந்தால் படும் விதி படவேண்டும்" என்பதற் கிணங்க விசனமுற்றுத் தன் கணவனைச் சிறையினின்று மீட்கவும் கோட்டையை எதிரிகள் எதிர்க்காம லிருக்கவும் தக்க ஏற்பாடுகள் செய்து, தான் சேனைத் தலைமையை வகித்துக் கோட்டையைப் பாதுகாத்து வந்தாள்.

எதிரிகள் ஜயமடைந்தோமென எண்ணிக்கொண்டு கோட்டையைக் கைவசமாக்கிக் கொள்ளச் சென்றார்கள். கோட்டையண்டை வந்ததும் அது பலமாக வளைக்கப் பட்டிருந்ததைக் கண்டு தங்கள் சேனாபதிக்குத் தெரிவித்தார்கள். அவர் தீர விசாரித்ததில் தைரியமுள்ள ராணியாரே சேனைத் தலைமையை வகித்துத் தம் தேசத்தின் சுயாதீனத்தை நிலைநாட்டவும் மரணமடையவும் தீர்மானித்திருக்கிறாளெனத் தெரியவந்தது.

மன்சிங் தூதன் ஒருவனை யனுப்பிக் கோட்டையை உடனே ஒப்புவிக்கும்படிக் கேட்கச் சொன்னார். தூதன் அவ்விதமே சென்று ராணியாரைக் கண்டு கேட்டான்.



ராணியார் "சில நிபந்தனைகளை ஒத்துக்கொண்டாலொழியக் கோட்டையைக் கொடுக்க முடியாது. மகா சக்கரவர்த்தியின் சேனையை எதிர்த்துக் கோட்டையைக் காப்பாற்றுவது பிரயோசனமற்றதென்று எனக்குத் தெரியும். அவ்விதம் செய்வதில் உயிர்ச்சேதம் அதிகமுண்டாகும். ராஜபுத்ர வம்சத்தைச் சேர்ந்த ராஜா மன்சிங் என்பவர் என் தேசத்தைக் கொள்ளையடிக்காமலும், என் ஜனங்களை இம்சிக்காமலுமிருப்பதாக வாக்களித்தால் யாதொரு தடங்கலுமின்றிக் கோட்டையைக் கொடுத்துவிடுகிறேன். மேலும் இன்னொரு நிபந்தனையுளது. என் கணவன் உயிரோடிருந்தால் என்னை என் அன்புள்ள கணவனுடனிருக்க உத்தரவளிக்கவேண்டும். மேற் கூறியவைகளை யெல்லாம் அவருக்குச் சொல்லு. அவர் சம்மதப்படாவிடில் நாம் யுத்தம் செய்வோம். உங்கள் இம்சையைச் சகிக்க ஒருவருமில்லாமல் எல்லோரும் சாகும் வரையில் சண்டை நிச்சயமாகவே நடக்கும்" என்றாள்.

ராஜபுத்திர வீரன் தூதனால் யாவற்றையும் கேள்வியுற்று, உடனே ராணியார் செய்துகொண்ட விண்ணப்பத்தை ஒப்புக்கொண்டுவிட்டார். ராணியார் தமது கணவனிருக்கும் சிறைச்சாலைக்குச் சென்று அவருக்குப் பணிவிடைகள் செய்துகொண்டிருந்தாள். சிலகாலம் சென்றபின் ப்ரதாபன் இவ்வுலகத்தை விட்டு வானுலகுக்கு நீங்கவே இவளும் தன் கணவனைத் தகனம்செய்த அக்கினி குண்டத்தில் விழுந்து உயிரைத் துறந்தாள்.

ஜஷ்ரேஸ்வரியை அவளது பர்த்ரு சிஷ்ருஷைக்காகவும், நற்குணங்களுக்காகவும் ஜனங்கள் வெகுவாகக் கொண்டாடி வந்தார்கள்.

## 7. ஜாட்பூர் ராணி.

ஷாஜிஹான் அரசுபுரியும் காலத்தில் டெல்ஹி சிம்மாசனத்திற்குரியவரான ஜாட்பூர் ராஜாவாகிய ஜெஸ்வந்த்சிங் என்பவர் மகா கீர்த்தி பெற்று விளங்கினார். ஔரங்கசீப் பலத்த துருப்புக்களுடன் டெல்ஹி சிம்மாசனத்தை அபகரிக்கவும் ஜெஸ்வந்த்சிங்கைச் சிறை பிடிக்கவும் டெல்ஹியை நோக்கிச் சென்றபொழுது, ஜெஸ்வந்த்சிங் சென்று அவனை ஜாட்பூர் எல்லைக்குள் வராமலிருக்கும்படி தடுக்க முயன்றார். நர்மதா நதிக்கரையில் ஒரு யுத்தம் நடந்தது. சூரியன் அஸ்தமிக்குமுன் ஜெஸ்வந்த்சிங்கின் பக்கம் 10,000 பேர் யுத்தகளத்தில் மடியவே ஜெஸ்வந்த் தனது ஊருக்குத் திரும்பிப் போகும்படி நேரிட்டது. மனம் தளர்ந்து தனது பட்டணத்திற்குச் சென்றான்.

ஏனெனில் இவனது மனைவி தன் கணவன் தோல்வியடைந்த அவமானத்தைக் கேட்டால் மிக வருந்திக் கோபித்துக்கொள்ளுவாளென்று இவனுக்குத் தெரியும். எவ்விதம் கோட்டைக்குள் நுழைவதென்று யோசித்துக் கொண்டு தயங்கி வெளியில் நின்றான்.

தனது கணவன் தோல்வியடைந்து கோட்டைக்குச் சமீபத்தில் வந்திருப்பதை ராணி அறிந்தாள். தனது கணவனுக்கு நேர்ந்த துரதிர்ஷ்டமான அபஜயத்தைக் குறித்து அவருக்குத் துக்கம்சொல்லி வரவழைக்க விரும்பவில்லை. அவமான மடைந்த தன் கணவன்



கோட்டைக்குள் நுழையாமலிருக்கும்படி கோட்டை வாசல்களை மூடிவிடத் தனது மனிதர்களுக்கு உத்தரவளித்தாள்.

ஜாட்பூர் ராஜனும், மீவார் தேசத்து ராஜாவின் மருமகனுமாகிய ஜஸ்வந்த்சிங் என் கணவன் அல்லவென்று கோபாவேசத்துடன் சொன்னாள். சில நிமிஷம் சென்ற பின் இவளுக்குக் கோபம் சாந்தமானவுடன் அக்கினி குண்டம் தயார் செய்யும்படி ஆக்ஞைசெய்து அதில் குதித்துத் தன் பிராணனை விட்டுவிட எண்ணினாள். "தன் கணவன் இறந்துபோக வேண்டியதுதான். அபஜெய மடைந்து அவமானப்பட்ட என் கணவன் உயிருடன் திரும்பிவர முடியாதே" என்று சொல்லி விசனமுற்றிருந்தாள்.

இவ்விதம் ஒருவாரம் அன்ன ஆகாரமின்றியும் தன் கணவனைப் பார்க்க மனமில்லாமலுமிருந்தாள். இவளது கணவனோ தன்னா லியன்றமட்டும் யுத்தம் செய்தும் பிரயோசனப்படவில்லை. இந்தச் சங்கதியும் ராணிக்குத் தெளிவாகத் தெரிந்தது. உடனே தனது கணவனைப் பார்க்க மிக்க ஆவல்கொண்டு கோட்டைவாசலைத் திறக்கும்படி உத்தரவளித்து, அவரைப் பத்திரமாக உள்ளே வரவழைத்தாள்.

இவளுக்குண்டாயிருந்த கோபம் இப்பொழுது நீங்கியது. தனது கணவன் தேகத்தைப் பரிசீலனம் செய்து சில காயங்களைப் பார்த்துத், துக்கித்துத் தானே அவைகளுக்கு மருந்துபோட்டுத் துணிகளைக்கொண்டு செவ்வையாகக் கட்டி வைத்தாள். அவருடைய சேனைகளுக்கும் செய்யவேண்டிய சிகிச்சைகளையும் தானே செய்து முடித்தாள். தன் கணவனுக்குக் காயங்கள்

சொஸ்தமாகும் வரையில் அவரிடத்தில்தானே இருந்து வந்தாள். காயங்கள் சொஸ்தமானவுடன் சந்தோஷப்பட்டு அவருக்குப் பலமுண்டாக்கத்தக்க மருந்தையும் கொடுத்து வந்தாள். இவ்விதமே மற்றவர்களையும் கவனித்து வந்தாள்.



ஒளரங்கசீப்

ஒளரங்கசீப் டெல்லியை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டான். அதன்பின் ஜஸ்வந்த் சிங்கின் கீர்த்தியையும், பலத்தையும் எவ்விதமாயாவது அழிக்க எண்ணினான். ஏனெனில் இவனிடத்தில் ஒளரங்கசீப்புக்கு மிகப் பயம்.



இவனோ மகா பலபராக்கிரமமுள்ளவன். யுத்தம் செய்வதில் சமர்த்தன். ஒரு தடவை இவன் தோல்வியடைந்ததினாலேயே இனி நமக்குப் பயமில்லை என்று இவனை அலக்ஷியம் செய்துவிட்டு இருக்கவில்லை.

ஒளரங்கசீப், இவனை எப்படியாவது கைவசம் பண்ணிக்கொண்டு ஏதாவது பெருத்த யுத்தத்திற்கு இவனை யனுப்ப உத்தேசித்தான். அவ்விதம், எப்படி இவனை யனுப்புவதென்று தீர்க்காலோசனை செய்து, கடைசியில் இவனைக் கௌரவ சேனாத்தலைவனாக நியமித்தான்.

அந்த வஞ்சக நெஞ்சமுள்ள மகமதிய அரசன் இவனைச் சிநேகப் பான்மையாகவே நடத்திவந்தான். திடீரென்று காபூலில் பெருத்த கலகம் ஏற்பட்டதாக ஒளரங்கசீப்புக்குச் சமாச்சாரம் எட்டிற்று. "ஜஸ்வந்தை அனுப்பினால் அங்குள்ள கலகக்காரர்களால் இவன் சிறையாக்கிக் கொல்லப்படுவான். இதுதான் நல்ல சமயம். இவனை அனுப்பவேண்டும்" என்று ஒளரங்கசீப் தீர்மானித்தான்.

ஜஸ்வந்த் இந்தக் கௌரவமான வேலையை ஒப்புக்கொண்டான். ஆயினும் இது தன் உயிருக்கே அபாயத்தை யுண்டாக்குமென்று அவனுக்கு நன்றாகத் தெரியும். அவனுடைய அன்பும் தைரியமும் வாய்ந்த மனைவி, இச்சங்கதியைக் கேட்டுத் தனது கணவனுடன் புறப்பட்டுப் போகவும், அவருக்குண்டாகும் சுக துக்கங்களைத் தானும் அனுபவித்துத் தன்னாலியன்ற அளவு அவருக்குதவி செய்யவும் தீர்மானித்தாள்.

ஸ்ரீராமர் வனம்புகுந்த சமயத்தில் சீதாப்பிராட்டியார் தாமும் தமது கணவருடன் வனத்திற்குப்போக எண்ணங்கொண்டு, ஸ்ரீராமர் என்ன சமாதானம் சொல்லியும் கேட்காமல், அவருடன் வனத்திற்குச் சென்று

படாத பாடெல்லாம் பட்ட மாதிரி, இம் மாதரசியும் தனது கணவன் வரவேண்டாமென்று சொல்லியவைகளுக்கெல்லாம் தக்க உத்தரம் சொல்லி அவருடன் போக ஆயத்தமாயிருந்தாள்.

உடனே தங்கள் குமாரனாகிய ப்ருதிசிங்குக்கு அநேக புத்திமதிகளைச் சொல்லி அவனை ஜாட்பூர் ராஜ்யத்தை ஆண்டுவரும்படி தக்க ஏற்பாடு செய்துவிட்டு ஆப்கன் ஜனங்களை எதிர்க்கத் திரண்ட சேனைகளுடன் புறப்பட்டார்கள்.

வீரபராக்கிரமமுள்ள ராணி தன்னை ஒருவரும் ஸ்திரீ என்று அறியாமலிருக்கும்படி ஒரு போர்வீரனைப்போல வேஷம் பூண்டு, தனது கணவனுடன் குதிரைச் சவாரி செய்துகொண்டு, அநேக காடு வனாந்தரங்களில் அடிக்கடி தங்கி ஸ்ரமபரிகாரம் செய்துகொண்டு மலைகளையும், சிறு குன்றுகளையும் தாண்டிச் சென்றார்கள். செல்லும் வழி பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தது. காட்டு மிருகங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. இவ்வித கஷ்டங்களை எல்லாம் சகித்துக்கொண்டு தைரியத்துடன் கடைசியாகக் காபூலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஜனங்கள் அமைதியின்றியும் ராஜத்துரோகிகளாயும் காணப்பட்டார்கள். ஜஸ்வந்த் ஜனங்களை அடக்கத்தக்க ஏற்பாடுகளைத் தீர்க்காலோசனை செய்து அவர்களுடன் யுத்தம் புரிந்தான். அங்கு பனியும், பனிக்கட்டியு மதிகம். காட்டு ஜனங்களும் நாகரிக மற்றவர்களுமான அவர்கள் பஞ்சமா பாதகத்திற்குக்கூட அஞ்சாத நெஞ்சுடையவர்களென்பதை யறிந்துகொண்டான்.

இவ்வித ஜனங்களுள்ள இடத்திற்கு ராணி தனது கணவனை நிழலைப்போலப் பிரியாமல் இருந்து பல கஷ்டங்களை யனுபவித்துக்கொண்டுவந்தாள். கணவனுக்குச் சொல்ல வேண்டிய ஆறுதல்களையும் அப்போதைக்கப்போது சொல்லிக்கொண்டுவந்தாள். தைரியத்தைக் கைசோர விடாமல் தன் கணவன் பக்கத்திலிருந்து தானும் யுத்தம் புரிந்தாள். இவளுடைய சௌரியமும், அஞ்சா நெஞ்சும், பொறுமையும், திடவிக்கிரமமும் ராஜபுத்திர வீரர்களை அதிசயிக்கும்படி செய்தன.



ஜஸ்வந்த் வெகு நாள் ஜீவித்திருக்கவில்லை. தன்னாலியன்றமட்டும் வீரபராக்கிரமத்துடன் யுத்தம் செய்தான். ஆனால் துரோக சிந்தனையுள்ள சிலர் இவனை அக்கிரமமாகக் கொலை புரிந்துவிட்டார்கள். இவனுடைய குமாரனாகிய ப்ருதிசிங் டெல்லி நகருக்கு ஔரங்கசீபால் வரவழைக்கப்பட்டான். பின்பு விஷம் வைத்துக் கொல்லப்பட்டான். ஜஸ்வந்த்சிங் காபூலிலிருந்து திரும்பி வராமலிருக்கவும், அவன் குமாரர்களெல்லாம் தனக்கு யாதொரு தொந்தரவும் செய்யாமல் மடிந்துபோகவும் ஏற்பாடு செய்திருந்ததுடன் பிரார்த்தனையும் செய்துவந்தான். இவனுடைய சதிகாரர்களில் சிலரால் ஜஸ்வந்தின் குமாரன் கொலையுண்டிருக்க வேண்டுமென்று எண்ணப்பட்டது.

ராணி தனது கணவன் உயிர் துறந்ததை யறிந்து துக்கித்து என்னுடைய எண்ணங்களையெல்லாம் எண்ணி "ஈசனே! என் உயிரையும் அபகரித்துக்கொண்டு போகக் கூடாதா? என்னை ஏன் சோதனை பண்ணுகிறீர்? என் ராஜ்யத்திற்கு அப்பால் வெகு தூரத்தில் — அந்நிய தேசத்தில் என்னை இட்டுக்கொண்டு வந்து, என் கணவன் உயிரை அபகரித்துக்கொண்டுவிட்டீர்? என் உயிர் இனி இருந்து என்ன பிரயோஜனம்?" என்று பலவாறாக வருந்திக்கொண்டு தன் உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானம் செய்தாள்.

இதை யறிந்து இவளுடன் வந்திருந்த ராஜபுத்திர வீரர்கள் நடுநடுங்கி ஓடிவந்து பாதம் பணிந்து "எங்கள் தாயே! தாங்கள் கர்ப்பவதியா யிருக்கின்றீர்கள். இவ்விதம் உயிரைத் துறப்பதால் தங்களுக்கு சிசுஹத்தி செய்த தோஷமுண்டாகும். ஆகையால் பிரசவம் முடிகிற வரையிலும் அவ்விதம் செய்யாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். மேலும், தங்கள் குமாரன் நமது ராஜ்யத்தை ஆண்டுவருகிறான். அவனுக்கு ஆறுதல் சொல்லத் தங்களைத் தவிர வேறு யாரிருக்கிறார்கள்? இவைகளை யெல்லாம் யோசிக்குமளவில் தாங்கள் இன்னும் சில காலம் இப் பூமியி லிருப்பது நலமென எங்கள சிற்றறிவுக்குப் புலப்படுகிறது. ஆகையால் தாங்கள் எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்றார்கள்.

ராணியார் தீர்க்கமா யாலோசித்து விசனத்தில் மூழ்கியிருந்தபோதிலும் அவ்விதம செய்யத் துணிந்திருந்ததைச் செய்யாமல் விட்டுவிட்டார்கள். ராணியார் சேனைத் தலைமையை வகித்த யுத்த வீரர்களாகிய ராஜபுத்திரர்களுடன் இந்தியாவுக்குத் திரும்பிப் போக ஏற்பாடு செய்தாள்.

இதற்குள் ராணியார் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். ராணியாருக்கு வைத்தியர்கள் செய்ய வேண்டிய சிகிச்சையை வெகு ஜாக்கிரதையாகச் செய்துவந்தார்கள். தாதிகள் குழந்தையைப் பாதுகாத்து வந்தார்கள். அதிகச் செல்வமும், ராஜ்யமுமுள்ள ராணியாருக்குக் காபூலில் ஓரிடத்தில் தமது குழந்தையைப் பெறவேண்டியிருந்தது தெய்வச் செயலன்றோ? ராணியாருக்கு என்ன குறைச்சல்? ஆயினும் தமது சொந்த ஊரில் இது நடந்



திருந்தால் அதிக சிறப்பாக இருந்திருக்குமல்லவா? சில காலம் அவ்விடத்திலேயே தங்கி யிருந்து பின்பு ராணி தமது தைரியமுள்ள வீரர்களுடன் தமது சொந்த ராஜ்யத்திற்குப் புறப்பட்டாள்.

போகும் வழியில் அநேகர் இவர்களை எதிர்க்கவே அவர்களை யெல்லாம் தோற்கடித்துக்கொண்டு பிஷாவார் என்ற பட்டணத்துக்குச் சுகமாக வந்து சேர்ந்தார்கள். ஜாட்பூரிலிருந்த ராஜபுத்திர வீரர்கள் தங்கள் ராணியார் திரும்பி வருவதை அறிந்து தங்கள் ராணியாரை இட்டுவரத் திரளாகப் புறப்பட்டுப் பிஷாவாருக்கு வந்து சேர்ந்தார்கள். ராணியார் தமது தேசத்திலிருந்துவந்த ஜனங்களைக் கண்டு சந்தோஷப்பட்டதற்கு அளவில்லை. அவர்களே தங்கள் ராணியாரைப் பத்திரமாகத் தங்கள் சொந்த ராஜ்யத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்க வந்ததையுமறிந்த ராணியாருக்கு அவர்களிடத்தில் அதிக சந்தோஷமும் அன்பு மிருந்திருக்கு மல்லவா?

நமது தேசத்திலும் மாதர்களிடத்தில் புருடர்கள் மிக்க மரியாதையாகவும் கௌரவமாகவும் இருந்திருக்கிறார்கள். அப்படி யிருந்திருப்பதற்கு இதோர் அத்தாட்சி யல்லவா!

பிஷாவாரிலிருந்து அவர்கள் டெல்லிபட்டணத்திற்கு வந்துதான் ஜாட்பூருக்குப் போகவேண்டும். அப்பொழுது அவர்கள் ஒருவேளை ஔரங்கசீப்பால் எதிர்க்கப்பட்டாலும் எதிர்க்கப்படலாம். வேறு வழியும் இல்லாமையால் அவ் வழியாகவே புறப்பட்டு டெல்லி பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்கள். யாதொரு தொந்தரவு மின்றி ஜாட்பூருக்குச் செல்லலாமென்று ராணியாரும் அவர்க

ளுடைய சேனைகளும் எண்ணி, முன் வைத்த காலைப் பின் வைக்காமல் போக ஆரம்பித்தார்கள்.

ராணியாருடைய தைரியம் பொருந்திய ராஜபுத்திர வீரர்கள் தங்கள் கைக்குழந்தையாகிய அரசனையும், ராணியாரையும் எதிரிகளினின்று தப்புவிக்கவும் காப்பாற்றவும் ஆயத்தமாயிருந்தார்கள். உடனே அக்குழந்தையைத் தங்களிடம் வைத்திருந்தால், அக்குழந்தையின் உயிருக்கே அபாயம் நேரிடுமென்று யோசித்து, ஒரு நம்பிக்கையுள்ள மகமதியன் கையில் குழந்தையை ஒப்புவித்துத் தாங்கள் திரும்பிவருகிற வரையிலும் ஓரிடத்தில் பத்திரமாக வைத்திருக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அம்மகமதியன் தானே ராணியார் முன் வந்து குழந்தையைப் பத்திரப்படுத்தி வைப்பதாகவும் சொன்னான். அவ்விதமே குழந்தையை மிட்டாய் விற்கும் கூடையில் வைத்து ஒருவரும் அறியாவண்ணம் அந்த விசுவாசமுள்ள மகமதிய கனவான் எடுத்துக் கொண்டுபோய் அவர்கள் வருகிறவரைக்கும் வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்தான்.

அந்த மனிதன் குழந்தையை எடுத்துக்கொண்டு போன பிறகு ராஜபுத்திரர்கள் யுத்தாயுதங்களை மாட்டிக் கொண்டு சடுதியில் தாங்களிருந்த இடத்திலிருந்து யுத்தத்திற்குப் புறப்பட்டார்கள். அவர்களுடைய ராணியும் கையில் கத்தியுடன் அவர்கள் மத்தியிலிருந்தாள். அவளுடைய கத்தியின் பிரகாசம் வெகுதூரம் வீசியதாம்.

ஔரங்கசீப் பெருத்த சேனைகளுடன் வந்து இவர்களைப் பட்டணத்திற்கு வெளியிற் போகவிடாமல் தடுத்தான். யுத்தம் டெல்ஹி பட்டணத்திலேயே வெகு மும்முரமாக நடந்தது. ராஜ புத்திரர்கள் வீரர்களைப்



போல் யுத்தம் செய்து யுத்தகளத்தில் வீரர்களைப் போலவே மடிந்தார்கள். ராஜபுத்திரர்களின் தொகை மிகச் சிறியதாக இருந்தாலும், அவர்கள் தங்கள் ராணிக்காகவும், தங்கள் ராஜகுமாரனுக்காகவும், தங்கள் சுய தேசத்திற்காகவும், பெருத்த மொகலாய சேனைகளுடன் யுத்தம் செய்தார்களே தவிர அவர்களுக்குப் பயந்து பின் அடையவில்லை. யுத்தத்தில் அநேகர் கொல்லப்பட்ட போதிலும் சிறுபான்மையோர் தங்கள் ராணியாரைப் பத்திரமாய்ப் பாதுகாத்து வந்தார்கள். இதுவும் அவர்கள் தங்கள் ராணியாரிடத்தில் வைத்திருந்த மதிப்பையும், அன்பையும் செவ்வனே காட்டுகின்றதல்லவா?

அவர்கள் காயத்தையும், தங்கள் தேகத்தில் இரத்தம் ஒழுகுவதையும் கவனியாமல் தங்கள் அன்பு மிகுந்த ராணியாரை இட்டுக்கொண்டு வேகமாகக் குழந்தையிருக்குமிடத்திற்கு ஒருவருக்கும் தெரியாமல் போய்விட்டார்கள். ராணி குழந்தையைக் கண்டு எடுத்து முத்தமிட்டுக் கொண்டு சிறிது நேரம் அதோடு கொஞ்சி விளையாடினாள். பின்பு அந்த மகமதியனுக்கு நன்றியறிதலைக் காண்பிக்கத் தனது கழுத்தில் அணிந்திருந்த முத்தாரத்தை எடுத்து அவனுக்குப் பரிசாக அளித்தாள்.

குழந்தையை எடுத்துக்கொண்டு அங்கு ஒரு நிமிஷங் கூடத் தங்காமல் தமது சகோதரனாகிய மீவார் தேசத்து ராஜாவினிடத்திற்குப் போகப் புறப்பட்டாள். வெகு துரிதமாகவும் வழியில் எங்கும் தங்கி இளைப்பாறிக் கொள்ளாமலும் ராஜபுத்திர வீரர்களுடன் சென்றாள்.

அங்கு போய்ச் சேர்ந்ததும், ராஜா மிக வருந்தித் தன் சகோதரிக்குச் செய்யவேண்டிய மரியாதைகளையெல்லாம் செய்தான். இரண்டு மூன்று நாட் சென்றபின்

அவர் உத்திரவு பெற்றுத் திரண்ட சேனையுடன் தனது ராஜ்யத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். அங்குள்ள ஜனங்கள் தங்கள் ராஜன் கொலையுண்டு போனதைக் குறித்து விசனப்பட்டபோதிலும் தங்கள் ராணியாரும், சிறு குழந்தையும் க்ஷேமமாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பி வந்ததைக் குறித்து மிக மகிழ்ந்து அவர்களை வாழ்த்தினார்கள்.

ராணியார் தமது சொந்தத் தேசத்திற்கு வந்ததும் சும்மா இராமல் ஔரங்கசீப்பை எதிர்க்கத்தக்க ஏற்பாடுகளைச்செய்ய முயன்று வந்தாள். மேலும் தன் குமாரனுக்குத் தக்க வயது வருமளவும் அவன் சுதந்தரத்தைப் பாதுகாத்து வந்தாள். அவனுக்குக் கல்வி புகட்டி வரவும், யுத்தத்தில் பயிற்சி உண்டாக்குவதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்து வந்தாள். தன் குழந்தையை வெகு ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்ததுடன் தானே அவனுக்கு நல்லறிவுண்டாகும்படியான விஷயங்களைப் போதித்து வந்தாள்.

தன் தேசத்தையும் சரிவரக் கவனித்து ஜனங்களையெல்லாம் ராஜ விசுவாச முடையவர்களாகச் செய்து ஔரங்கசீப்பை எதிர்க்கவும் ஏற்பாடுகள் செய்து வந்தாள். ஔரங்கசீப்பின் வீரமில்லாத செய்கையானது, அவனை எதிர்த்துத் தோற்கடிக்கும்படியும் ஜனங்களைத் தூண்டிற்று. அவன் உதவியற்ற கைம் பெண்ணாகிய ராணியாரையும், அவளுடைய கைக்குழந்தையையும் எதிர்த்துக் கொலைசெய்ய எண்ணினதானது ஜனங்களுக்குள் ஒற்றுமையை யுண்டாக்கிப் பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்தை யுண்டாக்கிற்று.

ராணியாருடைய குமாரன் மகா புத்திசாலியாகவும் சாமர்த்தியவானாகவும் விளங்கினான். யுத்தத்திற்கு வேண்டியவைகளை யெல்லாம் சீராய்க் கற்றுக் கொண்டான். தாயாருடைய குணங்களெல்லாம் பிள்ளையினிடத்திலு மிருந்தன. அவன் தாயாரின் வீர பராக்கிரமம் அவனிடத்திலு மிருந்தது. தாயார் தன் மகனுடைய கல்வித் தேர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தாள். ஆனால் சில வேளையில் தனது கணவனை நினைந்து துக்கிப்பாள். அவ்வித விசனக் குறிகளைத் தன் குமாரன் அறியாவண்ணம் அவனுடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பாள்.



ராஜபுத்திர வீரர்கள் மனத்தில் கோபம் பொங்கிக்கொண்டே யிருந்தது; அவர்களில் சிலர் தங்கள் தாயாராகிய ராணியாரிடத்திலும் அரசகுமாரனிடத்திலும் சென்று ஔரங்கசீப்புடன் யுத்தத்திற்குச் செல்லவேண்டுமென விண்ணப்பம் செய்துகொண்டார்கள்.

ராணியாரும் 'அவ்விதமே செய்யுங்கள், நானும் டெல்லி ராஜ்யத்தின் அழிவைப் பார்க்க மிக்க விரும்புகிறேன்' என்றாள்.

உடனே ஜனங்கள் ராஜ குமாரனுடன் ஔரங்கசீப்பை எதிர்க்கச் சென்று கோர யுத்தம் செய்து அவனைத் தோற்கடித்து விட்டு வந்துவிட்டார்கள். ராணியாருக்குண்டான சந்தோஷத்திற்கும் ஜனங்களுக்குண்டான ஆனந்தத்திற்கும் அளவேயில்லை.

ராணியார் தமது புத்திரனுக்கு விவாகம் செய்து வைத்து பட்டாபிஷேகமும் வெகு விமரிசையுடன் செய்து வைத்தார். சிலகாலம் சுகமாக இருந்து பின் ராணி இவ்வுலகத்தைத் துறந்து வானுலகிற்குச் சென்று தனது கணவனுட னிருந்தாள். ராணியார் இறந்தபொழுது அவருக்கு ஜனங்கள் வெகு மரியாதை செய்தார்கள்.

## 8. ராணி துர்க்காவதி

மத்திய இந்தியாவில் குருமண்டலம் என்ற ஒரு ராஜ்ய மிருந்தது. ஹிமய பருவதம் முதல் சமுத்திரம் வரையில் டெல்லிச் சக்கரவர்த்திகளில் பேர்போன ஆக்பரின் ஆக்ஞையின் கீழிருந்தபொழுது குருமண்டலம் மாத்திரம் சுதந்திரம் பெற்றுச் சுய அரசாட்சியுட னிருந்தது. இன்னும் அதிசயிக்கத்தக்க தென்னவெனில், இந்தத் தைரியமும் பெருமையும் பொருந்திய ராஜ்யத்திற்கு அதிபதியா யிருந்தவர் ஒரு மாதரசியே.

துர்க்காவதி குருமண்டலத்துக்கு ராணியாக இருந்தாள். இவள் வட இந்தியாவில் கண்ணோஜுக்கு அரசனாக விளங்கின சந்தனன் என்பவருடைய செல்வக் குமாரத்தி. இவளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். கல்வியும் தக்க ஆசாரியர்களைக் கொண்டு புகட்டி வைத்தார். இவள் கல்வி கேள்விகளில் மகா புத்திசாலியெனப் பெயரெடுத்து யாவராலும் புகழப்பட்டாள். இவள் மகா அழகு பொருந்திய சுந்தரி. இவ்வித அழகும் புத்தியும் வாய்ந்த பெண்ணைப் பெற்ற தாய் தகப்பனுக்கு சந்தோஷத்திற்கு அளவுண்டா?

இப் பெண் இரத்தினத்திற்கு வயது 16 ஆனவுடன் இவள் தகப்பனார் ராஜ புதனத்தை ஆளும் அரசனுக்கு மணம் புரிவிக்க எண்ணியிருந்தார். இச் சங்கதி துர்க்காவதிக்குத் தெரிந்தது. அவள் அவனை விவாகம்புரிய மனமொப்பவில்லை. இக் கன்னிகை குருமண்டல ராஜ



னைக் கண்டு நேசித்து அவனையே கணவனாக வரிக்கக் கருதி யிருந்தாள். சிலகாலஞ் சென்றபின் இச் சுந்தரி குருமண்டல ராஜனாகிய தல்பத் என்பவனைத் தன் தகப்பனிடத்திற்கு வந்து, அவர் அநுமதி பெற்றுத் தன்னை மணம் புரிந்துகொண்டு போகும்படி அவனுக்குத் தெரிவித்தாள்.

தல்பத் மிக மகிழ்ந்து உடனே புறப்பட்டு வந்தான். துர்க்காவதியின் தகப்பனார் தல்பத்துக்குத் தன் செல்வக் குமாரத்தியை விவாகம் செய்துவைக்க இஷ்டப்படாமல் மறுதலித்துவிட்டார். தல்பத் சிறியவனாக இருந்த போதிலும் வீரபராக்கிரம முள்ளவன். ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று எண்ணிவிட்டால் அதைப் பூராவாகச் செய்து வைப்பானே யொழிய மனந் தளர்ந்து பின்னடையமாட்டான்.

சந்தனன் மனதை யறிந்த தல்பத் தன் சேனைகளைத் திரட்டிக் கொண்டு வந்து சந்தனனை எதிர்த்து அவனைக் கொல்லாமலும் அவனுக்குக் காயமொன்றும் படாமலிருக்கும்படியும் யுத்தம் செய்து அவனைத் தோற்கடித்து அவனுடைய அரிய புத்திரியை எடுத்துக்கொண்டு ஜய பேரிகையுடன் தன் தேசம் சென்று, விமரிசையுடன் அவளை மணம் புரிந்து கொண்டான்.

சிலகாலம் இவ்விருவரும் இல்லறவாழ்வைச் சுகமாகக் கழித்து வந்தார்கள். இவளுக்கு மிக்க அழகு பொருந்திய ஒரு ஆண்குழந்தை ஜனித்தது. அக்குழந்தைக்கு வீரநாராயணன் என நாமம் சூட்டிச் செய்ய வேண்டிய சடங்குகளை யெல்லாம் சரியாகச் செய்தார்கள். குழந்தையைச் சீராட்டி, தாலாட்டி வளர்த்து வந்தாள். குழந்தையை வளர்ப்பதில் மிக்க ஜாக்கிரதை யுள்ளவள்.

அதற்கு வேளாவேளையில் தக்க ஆகாரத்தைக் கொடுத்துப் பிணியொன்றும் அணுகாமல் பாதுகாத்து வருவாள். தாய் தந்தையர்கள் குழந்தையினுடைய மழலைச்சொற்களைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிவார்கள். குழந்தையே தங்கள் ஆஸ்தியென்று எண்ணுவார்களே யொழிய தங்களுக்கிருக்கும் ஆஸ்தியைக்கண்டு பெருமை பாராட்ட மாட்டார்கள். இவர்களுக்கு அக் குழந்தையினிடத்தில் அவ்வளவு பிரிய மிருந்தது.

மேலும் மனைவியும் புருடனும் ஒத்துவாழ்ந்தார்கள். ராணி துர்க்காவதி ஒருவருக்கும் மனம் கோணாமல் நடந்து வந்தாள். புருடன் சொல்லுக்கு மீறி நடக்க மாட்டாள். புருடனும் தன் மனைவி சொல்லுக்கு விரோதமாக நடவான். மனைவியும் புருடனும் இவ்விதம் மனமொத்து வாழ்ந்து வருவதைக் கண்டு ஜனங்கள் சந்தோஷப்பட மாட்டார்களா? அவ்வித தம்பதிகளை வாழ்த்த மாட்டார்களா? அப்படியல்லவா தற்காலத்தி லுள்ளவர்களு மிருக்கவேண்டும்.

அப்படிக்கின்றி பெண்வீட்டாரிடம் புருஷன் எவ்வளவு பணம் அபகரிக்கலாமோ அவ்வளவையும் பெற முயலுகிறான். இதனால் மனைவிக்கும், புருடனுக்கும் மனஸ்தாபங்க ளிருந்து வருகின்றன. சில சமயம் மனைவியை அடிக்கிறான், சில சமயம் மனைவியுடன் கோபங் கொள்ளுகிறான். மனைவியைத் தன் மாமியார் மாமனார் கூட்டிக்கொண்டு தங்கள் ஊருக்குப் போனால், பின்னிட்டு அவர்களுக்குக் கடிதம் எழுதாமலும் தன் மனைவியின் யோகக்ஷேமங்களை விசாரியாமலு மிருக்கும் சில கற்றறிந்த புண்ணியவான்களு முண்டு. அப்படிக்கின்றி தம்பதிகள் மனமொத்துச் சண்டை சச்சரவுகளின்றி இல்லறத்தை நடத்த முயல்வதே விசேஷமானது.



ராணி துர்க்காவதியும், தல்பத் ராஜனும் தங்கள் குழந்தையினிடத்தில் அதிக பிரியமா யிருந்தபோதிலும் தங்கள் ராஜ்யத்தையும், பிரஜைகளையும் மறக்கவில்லை. அவர்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்து ராஜ்யத்தை நீதிதவறாமல் ஆண்டு வந்தார்கள். குழந்தைக்கு மூன்றாவது வயது வந்ததும் தல்பத் மரணமடைந்தான்.

மகா பதிவிரதா சிரோமணியாகிய ராணி துர்க்காவதியின் விசனத்திற்கும் துக்கத்திற்கும் கேட்கவேண்டுமோ? அவள் பட்ட துயரத்திற் களவில்லை. அப்படியே ஜனங்களெல்லாரும் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். ஐயோ! நமது காருண்ய மகாராஜன் போய்விட்டானே என்பார்கள். ஸ்திரீகள் அருந்ததியை யொத்த நமது துர்க்காவதிக்கு வைதவ்வியம் உண்டாக வேண்டுமோ என்று சொல்லி முறையிடுவார்கள். இவ்விதம் அவ்விராஜ்ய முழுமையும் விசனமே குடிகொண்டிருந்தது.

இப்படியிருந்தும் துர்க்காவதி தன் குழந்தையின் நிமித்தமும் தன் ராஜ்யத்தைப் பாதுகாப்பதின் பொருட்டும் தனது விசனத்தினின்றும் துக்கத்தினின்றும் விலகியிருக்க வேண்டியிருந்தது. துர்க்காவதி தன் சிறு குழந்தைக்குப் பதிலாகத் தானே ராஜ்ய பாரத்தை வகித்து, வெளிக்குத் தன் துக்கத்தையும் விசனத்தையும் காண்பிக்காமல் அரசுபுரிய ஆரம்பித்தாள். என்ன வெளிக்குத் தன் முகத்தில் விசனக்குறியைக் காண்பிக்காமலிருந்தும் மனதுக்குள் விசனமும் துக்கமும் பொங்கிக்கொண்டேயிருந்தன. தனக்கு ஒழிவிருக்கும் வேளையில் அரண்மனைக்குள் தனது மனதுக்கிசைந்த அன்புள்ள கணவனைப்பற்றி நினைத்துக்கொண்டு புலம்புவாள். கண்ணீர் தாரை தாரையாகச் சொரிவாள்.

ஆயினும் தனது மேன்மையான கணவனைப்போலவே ராஜ்யத்தைச் சாமர்த்தியமாயும் நீதிதவறாமலும் ஆண்டு வந்தாள். தனது கணவனால் தனக்கு விடப்பட்ட கடமைகளைப் பூராவாக யாவருக்கும் சந்தோஷமும் திருப்தியு முண்டாகும்படி கொஞ்சங்கூடப் பிசகாமல் செலுத்தி வந்தாள். சூழ்ச்சியுடன் தன் ராஜ்யத்தின் சுதந்தரத்தை நிலைநாட்டி வந்தாள். கீர்த்தி பெற்ற அக்பருடைய சேனைகளால் அடிக்கடி வளைக்கப்பட்டுத் தாக்கப்பட்டு வந்தபொழுதெல்லாம் தனது கணவன் செய்த மாதிரி தைரியத்தைக் கைசோர விடாமல் பெருமை பொருந்தி யிருந்தாள்.

எல்லாரும் இவ் வீராணியின் அரசாட்சியைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்துவார்கள். சிலர் ஒரு பெண்ணின் அரசாட்சி எவ்வளவு சிறப்பாக விளங்குகிறதென்பார்கள். சிலர் அவளுக்கு ஒரு முக்கிய குறை, கணவனை யிழந்த துர்ப்பாக்கியம் ஒன்றிருக்கிறதே தவிர வேறு என்ன விருக்கிறது? அவள் மகாலக்ஷ்மியே யென்பார்கள். ஸ்திரீகள் அவளைப் போற்றிக்கொண்டும், அவள் குழந்தை நீடித்து ஜீவித்திருக்கவேண்டுமென்றும் சதா கடவுளைப் பிரார்த்தித்து வந்தார்கள். பெரியோர், சிறியோர், ஆண், பெண், குழந்தை முதலியவர்களும் கஷ்டமின்றி ராஜ்யத்தில் வசித்துக்கொண்டு ராணியாரை வாழ்த்திக்கொண்டே வந்தார்கள். "பெண்ணுக்கும் பொன்னுக்கும் தோற்பு உண்டா?" என்பதற்கு இணங்க ஜனங்கள் இவளுக்கு இவளுடைய நற்குணங்களை ஆபரணங்களாக அமைத்து, இவள் அழகையும் குணாதிசயங்களையும் கண்டு களித்திருப்பார்கள்.

இந்தச் சிறிய ராஜ்யத்தின்மீது படையெடுக்க, மத்திய இந்தியாவுக்கு டெல்ஹி சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்ட கவர்னர்களில் ஒவ்வொருவரும் தங்கள் சக்கரவர்த்தியினிட மிருந்து உத்திரவுபெற மனு செய்து கொண்டு வந்தார்கள். ஆனால் அக்பர் சுலபமாய் உத்திரவு கொடுக்கவில்லை. அவருக்கு நீதியுடனும் பராக்கிரமத்துடனும் ஆளுபவர்களைக் கண்டு மெச்சும் குணமுண்டு; அந்தச் சிறிய ராஜ்யத்தின் ராணியாரின் கீர்த்தியைப்பற்றிச் செவ்வனே அறிந்திருந்தார். ஜனங்கள் அவ் வரசியைத் தங்கள் தாயாரென மதித்து வந்தார்கள். அவ் வீராணியும் உண்மையாகவே தாயாராகத்தா னிருந்தாள்.



தன் ராஜ்யமுழுதும் குளங்களை வெட்டி வைத்தாள். அநேக இடங்களில் சத்திரம் சாவடிகளையும் கட்டிவைத்தாள். அநேக கோயில்களையும் ஸ்தாபனம் செய்தாள். சத்திரங்களில் ஏழைகளுக்கு அன்னமிட்டு வரும்படியும் ஏற்பாடு செய்தாள். பாடசாலைகளை ஸ்தாபித்தாள். ஜனங்களுக்கு இன்னும் செய்யவேண்டிய நன்மைகளை யெல்லாம் குறைவின்றிச் செய்து வந்தாள்.

அக்காலத்தில் வெகு நன்றாக நீதிவழுவாமல் இந்தியாவில் ஆளப்பட்டு வந்தது குருமண்டலம் ஒன்றுதான். இத்தேசம் நீர்வளம் நிலவளம் உடையதாய் வெகு செழுமை பொருந்தி யிருந்தது. எங்கு பார்த்தாலும் வயல்களில் பொன் போன்ற தானியங்கள் விளைந்துகொண்டிருந்தன. தோட்டமும் தோப்புகளும் எங்கு பார்த்தாலும் ஏராளமாயுண்டு. வியாபாரமும் செழித்தோங்கிற்று. கைத்தொழில் உன்னதஸ்திதியிலிருந்தது. ஜனங்கள் கைத்தொழிலை ஆதரித்து வந்தார்கள். ஜனங்கள் ஐசுவரியவான்களாயும், சந்துஷ்டியாயும், சௌக்கியமாயும் ஜீவித்து வந்தார்கள்.

ராணியும் தன் பிரஜைகள் எப்பொழுதும் சுகமாயும், திருப்தியாயு மிருக்க அநேக நற்காரியங்களைச் செய்து

வந்தாள். இவ்வித நற்குணங்க ளமைந்த ராணியாரைப் பிரஜைகள் தாயாராக வகித்தும், மதித்தும் வந்தது நியாயந்தானே. அவ் விராணியார் தெய்வமாகக் கொண்டாடப்பட வேண்டியதும் அவசியமே.

ராணியின் குழந்தை வீரநாராயணனைக் கவனித்து அவனுக்குக் கல்வியும் தக்க உபாத்தியாயர்களைக்கொண்டு புகட்டி வந்தாள். அவன் யுத்தப் பயிற்சியிலும்கூடப் பழகிவந்தான். சிறிய குழந்தையா யிருந்தும் அற்புதச் செயல்களையெல்லாம் தீவிரமாய்ச் செய்வான். அம்பு எய்வதில் மகா சமர்த்தன். படிப்பதிலும் சுறுசுறுப்பும் தெளிவான புத்தியுமுள்ளவன். நமது ராணி தன் பிள்ளையை அதிக கவனமாகக் கவனித்து வந்தாள். அப்பொழுது வீரநாராயணனுக்கு வயது 12 தான். இவ் வயதிலேயே இவ்வித சாமர்த்தியங்களோடு விளங்கினான் சற்குணவதியின் புத்திரன்.

இச்சமயத்தில் அசப்கான் என்றவன் மத்திய இந்தியாவில் கவர்னராக இருந்தான். இவனுக்கு எப்படியாவது குருமண்டலத்தை ஜெயித்து டெல்ஹி ராஜ்யத்துடன் சேர்க்க வேண்டுமென்ற அவா மிகுதியாக இருந்தது. டெல்ஹி சக்கரவர்த்தியாகிய ஆக்பரண்டை யணுகி, "மகா சக்கரவர்த்தியே! குருமண்டலத்தை எதிர்த்துத் தங்கள் ராஜ்யத்துடன் சேர்ப்பிக்க எனக்கு ஆவலிருக்கிறது. தயவு கூர்ந்து உத்திரவு அளிக்குமாறு அதிக வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்" என மிக மரியாதையாக விண்ணப்பஞ் செய்துகொண்டான்.

ஆக்பர் குருமண்டலத்தின்மீது படை எடுத்து அதை ஜெயிக்க மனமொப்பாமல் பல சமயங்களில் உத்திரவு கொடுக்க மறுதலித் திருந்தபோதிலும், இச்சமயம்



எக்காரணத்தினாலோ அசப்கான் வேண்டுகோளுக் கிணங்கி உத்திரவளித்துவிட்டார். அசப்கான் மிக மகிழ்ச்சியுடன் அவர் ஆக்ஞைப்படி திரண்ட சேனையை யிட்டுக்கொண்டு குற்றமற்ற ராணியின் கைவசமா யிருக்கிற குருமண்டல ராஜ்யத்தை அபகரிக்கப் புறப்பட்டு விட்டான்.

துர்க்காவதியின் சேனை ஆக்பர் சேனைக்குச் சமமா? அல்லது அச் சேனையோடு யுத்தம்புரியப் பராக்கிரமமுண்டா? முன்னமேயே ஆக்பர் அந்தேசத்தை அபகரிக்க வேண்டுமென்று எண்ணி யிருந்தால், அவர் அவ்விதமே செய்திருப்பார். இவளுடைய ராஜ்யமோ மிகச் சிறியது. சிறியதா யிருந்தும் ஜனங்களும் ராணியும் ஒத்து வாழ்ந்து வந்தார்கள். உட்கலகம் சண்டை முதலியவைக ளின்றித் தேசம் செழித்துக் கீர்த்திபெற்று விளங்கிற்று.

துர்க்காவதி ஆக்பர் சேனையை எதிர்த்துத் தோற்கடித்துத் தன் தேசத்தின் சுதந்தரத்தைக் காப்பாற்ற எள்ளளவேனும் சமயம் வாய்க்குமோ? அப்படிச் செய்தால் அது பைத்தியக்கார யோசனையன்றோ? வராதது வருமோ? சக்தி யில்லாதபோது சக்தி எங்கிருந்து வரும்?

இவ்வளவு கஷ்டங்க ளிருந்தும் ராணி துர்க்காவதி மனோதைரியத்தை விடவில்லை. தன் தேசத்தின் சுதந்தரத்தை நிலைநாட்டக் கருதினாள். தன் உயிர்போனாலும் போகட்டும்; அருமையான தேசத்தின் சுதந்தரம் அழியக் கூடாதென்று தீர்மானங் கொண்டாள். அவ்விதமின்றித் தன் உயிர் போய்த் தன் தேசம் விரோதியின் கையில் தெய்வச் செயலால் அகப்பட்டுக்கொண்டால் நாமென்ன செய்வது? நமது கடமையை நாம் மனசாக்ஷிக்கு

விரோதமின்றிச் செய்வோமென எண்ணி, யுத்தத்திற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தாள்.

ராணி துர்க்காவதி தன்னால் சேகரிக்கக் கூடிய மனிதர்களைச் சேர்க்க முயன்றாள். அவ்விதம் செய்ததில் 800 குதிரை வீரர்களையும், இரண்டாயிரம் யானை வீரர்களையும் சேர்த்தாள். எல்லா ஜனங்களும் ஒருங்கே சேர்ந்து தங்கள் ராணியாருக்கு உதவிபுரிய முன்வந்து ராணுவத்தில் தாங்களே சேர்ந்துகொண்டார்கள்.

ராணி துர்க்காவதி சேனைத் தலைமையை வகித்த பொழுது ஜனங்களுக் குண்டான உற்சாகத்திற்கு அளவில்லை. அவர்களெல்லாரும் ஒரே மனதுடையவராய்த் தங்கள் தேசத்தின் சுதந்தரத்தை நிலைநாட்டுவதின் பொருட்டு எதிரிகளை எதிர்த்துத் துவம்சம்செய்யத் தீர்மானங் கொண்டார்கள். மேலும் தங்கள் உயிர் போகும் வரையில் தங்கள் மனதைரியமுள்ள ராணியாரின் கட்டளைப்படி சண்டை செய்வதாகவும் சொன்னார்கள்.

அசப்கான் பலமான சேனை குருமண்டலத்திலிருந்து திரளாக வருமென்று கனவிலும் நினைத்தவனல்ல. வெகு சுலபமாகக் குருமண்டலத்தை ஜயித்துவிடலாமென்று எண்ணி அவ்வூராருடன் யுத்தம் செய்ய 5000 குதிரைப் படைகளுடன் வந்தான். மேலும் சண்டை செய்யவேண்டிய வேலையே யிராதென்றும் அத்தேசத்துக்கு அதிபதி ஒரு பெண்தானே என்றும் எண்ணியிருந்தான்.

ஆனால் இவன் தன் சேனைகளுடன் குருமண்டலத்தை நோக்கிச் சமீபத்தில் வந்ததும் தான் முன் நினைத்திருந்த தப்பெண்ணத்தைப் பற்றி விசனமுற்றான். அவன் ராணியாரைச் சாதாரணமான பலமற்ற ஸ்திரீ என்று எண்ணியிருந்தது நேர் விரோதமாக இருந்தது. ராணி



யார் சேனைத்தலைமையை வகித்திருப்பதைக் கண்ட அசப்கான், அவள் பலபலாட்டியம் பொருந்திய ராணி என்று அறிந்து மனதில் திகிலடைந்தான்.

ராணியாரோ வீராவேசத்துடன் இவனுடன் யுத்தம் செய்ய வந்திருக்கிறாள். இவனுக்கு இப்பொழுது யுத்தம் செய்யாமல் திரும்பிப்போக முடியவில்லை. ஒருவேளை அவ்விதம் செய்தால் தனது கீர்த்தி அழிந்து அபகீர்த்தி யுண்டாகு மல்லவா? ஆனதபற்றி ராணியாரின் சேனையை முதலில் தாக்கும்படி தனது சேனைகளுக்கு உத்திரவளித்தான்.

யுத்தம் வெகு மும்முரமாகக் குருமண்டலத்தில் கோட்டைக்கு வெளிப்புறத்தில் இருதிறத்தாருக்கும் நடந்தது. அக்பர் சக்கரவர்த்தியின் சேனைகளைச் சின்னாபின்னமாக்கி பூர்ண ஜயத்தை ராணி யடைந்தாள். அசப்கான் தோற்கடிக்கப் பட்டபின் மனம் தடுமாறிச் செத்தேன் பிழைத்தேன் எனத் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தப்பி ஓடிவிட்டான்.

துர்க்காவதியின் சேனைகள் மிக்க குதூகலத்துடன் ஜய பேரிகையை முழக்கிக்கொண்டு தங்கள் ராஜ்யத்திற்குச் சென்றார்கள். ஜனங்களெல்லாரும் மிகச் சந்தோஷப் பட்டார்கள்.

ஆனால் ராணி துர்க்காவதி மட்டும் சிறிதேனும் ஜயம் கொண்டதைப் பற்றிச் சந்தோஷமாக எண்ணவில்லை. ஏனெனில், மறுபடியும் இன்னொரு சமயம் அவர்கள் பெருத்த சேனைகளுடன் வந்து தன் ராஜ்யத்தை எதிர்ப்பார்களென்று தெரியும்.

மேலும் டெல்ஹி சக்கரவர்த்தியே குருமண்டலத்தை எதிர்த்துத் தன் ராஜ்யங்களுடன் சேர்க்க எண்ணி

இருக்கையில், சொற்ப சேனைகளைக்கொண்டு அவர்களுடன் சமமாக யுத்தம் செய்து ஜயமடைய முடியாதென்பதும் துர்க்காவதிக்கு நன்றாகத் தெரியும். இதனால்தான் அவள் மனது சந்தோஷமின்றி விசனத்தில் மூழ்கியிருந்தது. கடவுள்தான் நமக்கு உதவி புரியவேண்டும் என்று எண்ணியிருந்தாள்.

ராணி மனத்தில் விசனத்துடன் தன் ராஜ்யத்தை ஒன்றரை வருடம் ஆண்டுவந்தாள். இதற்குள் அவள் எண்ணிய வண்ணம் டெல்ஹியிலிருந்து பெருத்த சேனை அசப்கான் சேனைக்கு உதவியாகவும், முதலில் நேரிட்ட அவமானத்தைப் போக்கித் தங்கள் வீரபராக்கிரமத்தை உலகத்தாருக்குத் தெரிவிக்கவும் அனுப்பப்பட்டது.

மேலும் அத் தேசத்தை ஜெயித்து அவ் விராணியைச் சிம்மாசனத்தினின்றும் விலக்கிக் குருமண்டலத்தை டெல்ஹி ராஜ்யத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கும்படி அசப்கானுக்குக் கண்டிப்பான உத்திரவு சக்கரவர்த்தியினிடமிருந்து வந்தது.

அசப்கான் உடனே திரண்டசேனைகளுடன் மனத்தில் திகிலடைந்து குருமண்டல ராணியுடன் யுத்தம் செய்யச் சென்றானே யொழிய தனக்கு ஜயம் உண்டாகுமென்ற எண்ணத்துடன் செல்லவில்லை. அசப்கான் கோட்டைக்குச் சமீபத்தில் வந்து யுத்தத்திற்கு ஆயத்தமாய்த் தான் வந்திருப்பதாய் ராணியாருக்குத் தெரிவித்தான்.

துர்க்காவதி இச்சங்கதியைத் தூதனால் அறிந்து தன் தேசத்தைச் சத்துருவினிடம் ஒப்புவிக்காமல் பாதுகாக்கத் தீர்மானம் செய்தாள். தான் உயிரோடிருக்குமளவும் தனது சிறிய ராஜ்யத்தை ஒருவரும் அபகரித்துக் கொள்ளக் கூடாது. அவ்விதம் செய்யாமலிருக்க என்னென்ன



பந்தோபஸ்துகள் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்து முடித்தாள்.

பின்பு தானும் முன்போலவே தைரியமாய்த் திரண்ட சேனைகளைச் சேகரித்துக் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டாள். இந்த இராணி கோட்டைக்கு வெளியில் திரளான சேனைகளுடன் வரும்பொழுதே, குதிரைகளின் காலடி சப்தத்தையும், சேனைகளின் கோஷத்தையும் அசப்கான் கேட்டு என்னென்ன எண்ணங்களையெல்லாம் எண்ணி, இத்தடவையும் தோல்வி சம்பவிக்குமோ வென்று பயந்திருந்தான்.

முன் காலத்தில் ராஜஸ்திரீகள் மற்றவர்களுக்கு ஒரு சிங்கம்போல தென்பட்டார்கள். மகா வீரபராக்கிரமமுடையவர்களாயுமிருந்தார்கள். குருமண்டலத்து ஜனங்களும், மகமதியர்களும் வெகுநேரம் யுத்தம் புரிந்தார்கள். துர்க்காவதி இன்னும் சிலகாலம் ராஜ்யத்தை ஆண்டுவரவேண்டியிருந்தது. ஆனதால் அவளுக்கு ஜயமுண்டாயிற்று.

அசப்கான் தோல்வியடைந்து தன் ஒழுங்கீனமான சேனைகளுடன் உயிர்தப்பினால் போதுமென்று எண்ணி யுத்தகளத்தினின்று நீங்கி ஓடிப்போய் விட்டான். சிதறுண்ட சேனைகளில் சிறுபான்மையோர் மாத்திரம் திரும்பி டெல்லிக்குச் சென்றார்கள்.

துர்க்காவதி தனது சேனைகளுடன் தன் ராஜ்யத்திற்குச் சென்று எப்போதும்போல் அரசு புரிந்தாள். இப்பொழுதும் மனக்கிலேச முடையவளாயிருந்தாள். தெய்வமே துணை எனக் கடவுளை நம்பித் தன் காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தாள்.

குருமண்டலத்தைச் சேனா பலத்தால் ஜெயிப்பது சுலபமல்ல வென்பதைக் கண்டுகொண்ட கபடமுள்ள அசப்கான், ராஜாங்க முறைப்படி தந்திரோபாயத்தால் தான் ஏதாவது அக்கிரமமான வழிகளில் பிரவேசித்து ஜயத்தையடைய முயல வேண்டுமென்று யோசித்தான். ஒற்றர்களைக் கூப்பிட்டு லஞ்சம் வாங்கும் மனதுடையவர்களுக்கு லஞ்சம் ஏராளமாக கொடுக்கும்படியும், ஜனங்களுக்குள் ஒற்றுமை யில்லாமல் செய்யவும், தேசத்தில் சண்டை சச்சரவுகள் உண்டாகும்படி செய்யவும், இன்னும் பற்பல கெட்ட வழிகளையும் நம்பிக்கைத் துரோகமான உபாயங்களையும் பிரயோகித்து வரும்படியும் அவனுடைய சேனையை ஒழுங்கீனமாகச் செய்து வரும்படியும் கூறி அனுப்பினான்.

கெட்ட எண்ணமுள்ள அசப்கானின் ஒற்றர்கள் அவ்விதமே திரவியம் பெற்று அவ் ராஜ்ஜியத்திற்குச் சென்று ஒருவன் செய்யத் துணியாத அக்கிரமங்களை யெல்லாம் செய்து அவ்வூரில் கலகம், ஒற்றுமையின்மை முதலியவைகளைப் பூராவாகச் செய்துவிட்டு வந்தார்கள்.

ஒரு வருடமான பின் மூன்றாம் தடவை அசப்கான் குருமண்டலத்தை நோக்கிப் படையெடுக்கப் புறப்பட்டான். ராணி துர்க்காவதி தனது பரிதாபமான ராஜ்யத்திற்கு அழிவுகாலம் வந்துவிட்டதென்பதை யறிந்து கொண்டாள். தனது இராணுவத்திலும், ஜனங்களுக்குள்ளும் ஐக்கிய மில்லாததையும் கண்டாள். தேசமெங்கும் உட்கலகம் பரவியிருப்பதையும் பார்த்தாள். மனந்தளர்ந்தாள், ஜயத்தைப் பற்றிய நம்பிக்கை யற்றிருந்தாள். தன் ராஜ்ஜியத்தின் விதி இப்படித்தா னிருக்குமென்று தெரிந்து கொண்டாள்.



ஆயினும் அசப்கானுக்குக் கீழ்ப்படியவில்லை. ஜயமுண்டாகும் என்ற நம்பிக்கை கிஞ்சித்தேனுமில்லை என்பதைத் தெளிவாய் அறிந்திருந்தும், தன் தேசத்தை உயிர்போகும் வரையில் காப்பாற்ற நிச்சயங்கொண்டாள். தன்னால் சேகரிக்கக் கூடிய சேனைகளைச் சேகரித்துக் கொண்டு பதினைந்து வயதுள்ள தனது அருமையான புத்திரனுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டாள்.

யுத்த வீரர்கள் மன உறுதியும், ராணியினிடத்தில் மகாவிசுவாசமும், தேசபக்தியுமுள்ளவர்களா யிருந்தார்கள். யுத்தகளத்திற்கு ராணியார் முதலிலும் மற்றவர்கள் பின்னால் வரிசைக் கிரமமாகவும் வந்து சேர்ந்தார்கள்.

யுத்தம் வெகு மும்முரமாய் இருதிறத்தாருக்கும் காலை முதல் சாயங்காலம் வரையில் நடந்தது. இருதிறத்தாரும் வீராவேசத்துடன் யுத்தம் செய்தார்கள். துர்க்காவதியின் செல்வக்குமாரன் படுகாயப்பட்டுக் குதிரையினின்று கீழே விழுந்ததைக் கண்டாள்.

உடனே ஜனங்கள் வந்து அக்குமாரனைப் பத்திரமாய் எடுத்துக் கொண்டு போனார்கள். அவன் மரணாவஸ்தையி லிருந்தான். ராணியாருடைய வேலையாட்கள் ஓடிவந்து மரணதறுவாயி லிருக்கும் குமாரனை வந்து பார்க்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது தைரியம் பொருந்திய ராணியார், "நான் இப்பொழுது போகமுடியாது, எனது வீரர்கள் என்னைக் காணாவிடில் மனந்தளர்ந்து போவார்கள். அவன் மரித்தால் வீரசுவர்க்கமடைவான், அவனை நாம் சுவர்க்கலோகத்தில் காண்போம்" என்று மனோ விசாரமின்றியும் புலம்பாமலும் பதிலுரைத்தாள்.

யுத்தம் இன்னும் அதிபயங்கரமாக நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது ராணியாரின் ஒரு கண்ணில்

அம்பு பாய்ந்தது. அவள் அதை எடுக்கப் பிரயத்தனப் பட்டாள். ஆனால் முடியவில்லை. ஆயினும் அதை ஒரு பொருட்டாக எண்ணிப் பின் அடையவுமில்லை; யுத்தம் செய்யாமற் போகவுமில்லை. ஒரு பெருமை பொருந்திய பெண் சிங்கத்தைப்போல் யுத்தம் புரிந்தாள். என்ன புரிந்து மென்ன? அவள் தேகமுழுவதும் படுகாயங்கள் உண்டாயின. அவள் ராணுவத்தில் பலர் கொல்லப்பட்டார்கள்.

சிலர்மாத்திரம் ராணியாரை எதிரிகள் கைதி செய்யா வண்ணம் பாதுகாத்து வந்தார்கள். தான் தப்பித்துப் போக இடமில்லாததையும் கண்டாள். சீக்கிரம் தன்னைச் சிறைப்படுத்தி விடுவார்களோ என எண்ணினாள். ஒரு தடவை யுத்தகளத்தைச் சுற்றிப் பார்த்தாள். தனது குரு மண்டலத்தைப் பார்த்துத் துக்கித்தாள். தான் செய்யப் போவதைப் பிறர் அறிவதற்குமுன் தற்கொலை புரிந்து கொண்டாள்.

ஒரு சேனைத் தலைவன், மகம்மதியர்கள் ராணியாரைக் கைதொட்டு அசுத்தப்படுத்துவதற்கு முன், அவளை தூக்கிக்கொண்டுபோய் அவளுக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்தான். அசப்கான் ஜயமடைந்து குருமண்டலத்தை டெல்லி ராஜ்யத்துடன் சேர்த்துவிட்டான்.

ஒரு ஸ்திரீ தன் தேசத்திற்காகத் தன் குமாரன் உயிரைக் கொடுத்ததும் தவிரத் தன் உயிரையும் தத்தம் செய்தாள். இவ்வித வீரமுள்ள மாதர்கள் அநேகர் முன் காலத்தி லிருந்தார்கள்.

## 9. ராணி பவானி

வங்காள ராஜதானியானது மகம்மதியருடைய ஆளுகையி லிருந்தபோது, சுதேச ராஜாக்களும் தங்கள் தங்கள் ராஜ்யத்தை அரசாண்டு வந்தார்கள். அவர்கள் அதிக பராக்கிரம முள்ளவர்கள். அவர்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் அரசாட்சி செய்து வந்தார்கள். வங்காள ராஜதானிக்கு முக்கிய பட்டணமாகிய மூர்ஷிடாபாத்தில் நவாப் வசித்துக்கொண்டு "இப்பொழுது கவர்னர் எவ்விதம் ராஜ்ய பரிபாலனம் செய்து வருகிறாரோ அவ்விதமே" ராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்தார்.

சிற்றரசர்களாகிய சுதேச ராஜாக்கள் வருஷா வருஷம் தங்கள் கப்பங்களை நவாப்பு அவர்களுக்குக் கட்டிக் கொண்டு வந்தார்கள். இச் சிற்றரசர்களில் எவராவது தங்கள் கப்பங்களைக் கட்டத் தவறினால் நவாப்பு அவர்கள் தங்கள் இராணுவ உத்தியோகஸ்தர்களை அவர்களிடம் அனுப்பி கப்பத்தை வசூல் செய்தும், இனி மரியாதையாகக் கப்பங் கட்டவேண்டு மென்று அவர்களுக்குச் சொல்லும்படியும் கட்டளையிட்டு வருவது வழக்கம்.

இப்படி யிருக்கும் காலத்தில் சென்ற நூற்றாண்டின் கடைசியில் மகம்மதியருடைய அரசாட்சியின் பலம் குறைந்து போகவே, இந்தியாவின் பிரதான சக்கரவர்த்தியாக டெல்லியிலிருந்து ஆண்டு வந்த சக்கரவர்த்திக்கு ஒரு

வரும் பயப்படவில்லை. இவர் பேருக்கு மாத்திரம் சக்கரவர்த்தியா யிருந்தார்.

சிற்றரசர்கள் சுயேச்சையாய்த் தங்கள் ராஜ்ஜியத்தை ஆளத் தலைப்பட்டார்கள். அதனால் மகமதியர்களுடைய பராக்கிரமமும், சக்கரவர்த்தி என்கிற மதிப்பும் போய் விட்டது. இவர்களுக்குள் அடங்கி அரசு புரியும் ராஜாக்களும் இவர்களுக்கு அடங்காமல் தங்கள் தங்களுடைய தேசங்களைத் தங்களிஷ்டப் பிரகாரம் அரசு புரியத் தலைப்பட்டுக் கலகஞ் செய்ய ஆரம்பித்தார்கள்.

இதனால் இவர்களுக்கு அபகீர்த்தி யுண்டானது மல்லாமல், இவர்களுடைய தேசங்களும் பலவீனம் அடைய ஆரம்பித்தன. மகமதிய ஆளுகையில் கடைசியாக வங்காள ராஜதானியை அரசு புரிந்தவர் ஆல்வர்டிகான் என்பவர். இவர் அதிக பராக்கிரமசாலி; ஆகிலும் இவருடைய ஆளுகையில் சண்டை அதிகரித்தே யிருந்தது. இவர் தம்முடைய பேரனை சுராஜுடௌலா என்ற சிறுவனை நவாபாக ஏற்படுத்திவிட்டு கி. பி. 1756-ம் வருஷம் இறந்துபோய் விட்டார்.

அப்பொழுது சுராஜுடௌலா பதினெட்டு வயதுடையவரா யிருந்தார். இவர் காலத்தில் இவராளுகையின் கீழடங்கிய நான்கு பராக்கிரமமுள்ள சுதேச ராஜாக்கள் இருந்தார்கள். அவர்கள், கிருஷ்ணநகர் ராஜா கிருஷ்ண சந்திரர் என்பவரும், தக்கணத்து ராஜா ராஜ ராஜவல்லபர் என்பவரும், பாடலீபுத்திரத்து (Patna) ராஜா ராஜராய் துர்லவர் என்பவரும், நாட்டூருக்கு ராணியும் உத்தம ஸ்திரீயுமாகிய ராணி பவானி என்கிற நால்வருமே யாவர்.

இந்நால்வரும் ராஜ்ஜியபாரஞ் செய்வதில் வல்லமையுள்ளவர்களாயும், அநுபவ முள்ளவர்களாயும் இருந்



தார்கள். இவர்களைப் போலவே சுராஜுடௌலாவின் சேனைத் தலைவராகிய மீர்ஜாபர் என்பவரும், தனவந்தராகிய ஜகத்சத் என்பவரும் அக்காலத்தில் அதிக திறமையுள்ளவர்களாகவும், அநுபவ முள்ளவர்களாகவும் இருந்தார்கள். இந்த ஆறுபேர்களுந்தான் கடைசியாக வங்காள ராஜதானியை இங்கிலீஷ்காரர் வசம் ஒப்புவித்தார்கள்.

இது நிற்க, மேற் சொல்லியவர்களில் ஒருவரும் நாட்டூர் ராணியுமாகிய ராணி பவானி அம்மாள் என்கிற உத்தம ஸ்திரீயின் சரித்திரத்தை எழுதுகிறோம். நாட்டூர் தேசத்தின் வருஷ வரும்படி ஒன்றரைக் கோடி ரூபாய். இதில் நவாப்புக்கு வருடந்தோறும் கட்டவேண்டிய பகுதி ரூபாய் ஐம்பத்திரண்டு லக்ஷம். மிகுதி ரூபாயைக் கொண்டு ஐம்பதாயிரம் காலாட்படைகளையும், குதிரைப்படைகளையும் போஷித்து மிகுந்ததை ராஜ்ஜிய பொக்கிஷத்தில் சேர்த்துக்கொண்டு வருவார்கள்.

நாட்டூர் மகாராஜா அவர்கள், தமது குமாரரான ராஜாராமகண்ட் என்பவருக்கு பவானி என்ற ஒரு ராஜ வம்சத்தைச் சேர்ந்த பெண்மணியை விவாகம் செய்வித்தார். விவாகமாய்ச் சில வருடங்கள் சென்ற பின்பு ராஜாராமகண்ட் என்பவர் தன் தகப்பனார் ஆண்டுவந்த நாட்டூர் தேசத்தின் ராஜபட்டத்தை யடைந்தார்.

இவர் பட்டத்துக்கு வந்தவுடன் துன்மார்க்கர்களுடன் சேர்ந்து, பொக்கிஷத்தி லிருக்கும் திரவியத்தையெல்லாம் வீண் விஷயங்களில் செலவு செய்துவந்தார். "கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது" என்றபடியும், நளமகா ராஜாவானவர் புஷ்கர ராஜாவினிடத்தில் சூதாட்டம் ஆட ஆரம்பிக்கும்போது மந்திரிகள் எவ்வளவோ நீதிகளை எடுத்துச் சொல்லியும் கேட்காமல் போனதுபோலவும்

தன் தகப்பனார் காலமுதல் மந்திரியாயிருந்து வருகிற தயாராம் என்கிற மந்திரி அநேக புத்திமதிகளைச் சொல்லியும் அவர் கேட்காமல் இருந்துவிட்டார்.

அதனால் மந்திரியாகிய தயாராம் என்பவருக்கு அவரை வீண் விஷயங்களில் செலவு செய்யாமலிருக்கும்படி தடுக்க முடியாமலிருந்தது.

ஆயினும் இவ்விராஜனுடைய புத்தி சாதுரியமுள்ள மனைவியாராகிய பவானி ராணியார் இது விஷயமாகத் தன் நாதனுக்குப் பல தடவைகளில் புத்தி சொல்லியும் அவர் கேட்காமலே போய்விட்டார். மந்திரி தன்னுடைய கெட்ட நடத்தைகளுக்கு இணங்காதவராய் இருந்தபடியால் அவரை வேலையினின்றும் நீக்கிவிட்டார். "தண்ணீரைத் தாராளமாய் செலவழிப்பதுபோல்" திரவியத்தை வீணான விஷயங்களிலெல்லாம் கண்தெரியாமல் செலவு செய்து வந்தார்.

"இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச் சீறிற் சிறுகுந் திரு" "மந்திரியினுடைய அபிப்பிராயங்களைக் கேளாமல் அவர் சொல்லும் நியாயங்களை வெறுத்துக் கோபிக்கின்ற அரசனுடைய செல்வம் கெடும்" என்றபடி தன்னுடைய ராஜகாரியத்தைச் சரியாகக் கவனியாமலும், உத்தியோகஸ்தர், சேவகர், சேனை முதலியோருக்குச் சம்பளம் சரியாகக் கொடாமலும், நவாப்புக்கு வருடந்தோறும் கட்டும் கப்பத்தைக் கட்டாமலும், இருந்துவிட்டபடியால் பொக்கிஷம் காலியாய் எல்லாம் பாக்கியாய் நின்றுவிட்டன.

இதன்பேரில் "நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ னாடொறு நாடு கெடும்" நாள்தோறும் நிலைமைகளை ஆராய்ந்து நன்மையைச் செய்யாத அரசனுடைய தேசம்



கெடும் என்பதுபோல நவாபு அவர்கள் சில ராணுவ உத்தியோகஸ்தர்களை அழைத்து நாட்டோருக்கு உடனே போய் ராஜாராமகண்ட் அவர்களை பட்டத்திலிருந்து நீக்கிப் பட்டத்திற்குரிய வேறொருவரை நியமிக்கும்படி கண்டிப்பான உத்தரவுசெய்து அனுப்பினார்.

நவாப்பினுடைய உத்திரவின்படி நடப்பதே சேனைகளுடைய கடமையாதலால், ராணுவ உத்தியோகஸ்தர்கள் உடனே நாட்டோருக்குப் புறப்பட்டுப்போய் ராஜாராமகண்ட் என்பவரை பட்டத்தினின்று நீக்கி வேறொருவரை நியமித்துவிட்டு நவாபு அவர்களிடம் வந்து தெரிவித்து விட்டார்கள்.

துர்ப்பாக்கியரும், ஏழையாய்ப் போய் விட்டவருமான ராஜாராமகண்ட் என்பவர் தாம் முன்பு நடந்துவந்த கெட்ட நடவடிக்கைகளைப் பற்றியும், மந்திரியும், தன் உத்தம மனைவியும் முன்பு சொல்லிவந்த புத்திமதிகளைக் கேட்காமலிருந்ததைப்பற்றியும், தன்னைத்தானே நொந்து கொண்டு அதிக மனவருத்த மடைந்தார். இனி தாம் என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாதவராய் மிக்க விசனப்பட்டுக்கொண்டு தன் மனைவியுடன் மூர்ஷிடாபாத்தில் வசித்துக்கொண்டிருக்கிற தன் ஆப்த சிநேகிதராகிய ஜகத்சேத் என்கிற தனவான் வீட்டிற்குப்போய் அவருடைய ஆதரவிலிருப்பதுதான் நலமென்று யோசித்து, தன் பெண் சாதியை அழைத்துக்கொண்டு மூர்ஷிடாபாத்துக்குப் போய் ஜகத்சேத் என்பவருடைய ஆதரவிலிருந்து வந்தார்.

இவர் இவ்விதம் ஏழ்மையாய்விட்டது இவருடைய புத்திக் குறைவினாலும் கெட்ட சகவாசத்தினாலுமேயன்றி வேறல்ல. இவர் இவ்விதம் தன் சிநேகிதராகிய ஜகத்சேத் என்பவருடைய வீட்டில் இருந்து வரும்பொழுது தமக்

குப் பிரியமான புத்தி சாதுரியமுள்ள தம் இல்லாளைக் கூப்பிட்டு, "நமக்கு நல்லகாலம் கிடைக்குமா? ஐயோ! உன்னுடைய வார்த்தையையும், புத்திசாதுரியத்தையும், அநுபவமுள்ள மந்திரியினுடைய வார்த்தையையும் கேட்காமலே போய்விட்டேனே! நான் துஷ்டர்களுடன் கூடிக் குலாவி பணத்தை வீணாக விரயம் செய்யாமலிருந்தால் இப்பொழுது எவ்வளவோ மேன்மையான அந்தஸ்திலிருப்பேனே! என்றால் உனக்கும் கஷ்டங்கள் உண்டாயினவே" என்று புலம்பினார்.

உடனே புத்திசாதுரியமுள்ள ராணி பவானி ஈஸ்வரனைத் தியானித்துத் தன் கணவனுக்குச் சில ஆறுதல்களைச் சொல்லி, அதன்பின் மந்திரியாகிய தயாராம் அவர்களை வரவழைத்துத் தான் அணிந்திருந்த நகைகளைக் கழற்றி அவரிடம் கொடுத்து அவைகளை விற்றுவரும்படி சொன்னாள்.

அவர் அவ்வண்ணமே அந்நகைகளை வாங்கிக்கொண்டு போய் விற்பனை செய்து, அதனால் கிடைத்த பொருளை அந்தம்மாளிடம் கொடுத்தார். அந்தம்மாள் அப்பொருளைப் பெற்றுக்கொண்டு நவாபு அவர்களுடைய உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுத்து, நவாபு அவர்களிடம் எவ்விதமாயாவது சொல்லித் தன் புருஷனை பழையபடி அரசளுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள்.

அவர்கள் அவ்விதமே நவாபு அவர்களிடம் சென்று, ராஜா அவர்கள் ஏதோ தெரியாமையால் ராஜ்யத்தை அவ்விதம் ஆண்டாரென்றும், இப்பொழுது அதற்காக வருத்தப்படுகிறாரென்றும், நவாபினுடைய மனம் இளகும்படி சொன்னார்கள். அதன் பேரில் நவாபு அவர்கள் அவருடைய ராஜ்யத்தை மறுபடி அவருக்கே கொடுக்கும்படி உத்தரவு செய்துவிட்டார்.



அவ்வுத்தரவை மேற்கொண்டவராகிய ராஜராமகண்ட் அவர்கள் தம் மனைவியுடன் தம் சிநேகிதராகிய ஜகத்சந்தினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு நாட்டுருக்குச் சென்று, முன்போலன்றிப் பிரஜைகளிடத்தில் மிக்க அன்பு வைத்துத் தர்மசிந்தையுடன் ராஜ்யத்தை ஆளத் தலைப்பட்டார். ஜனங்களும் இவர்களுக்கு மீண்டும் ராஜ்யம் கிடைத்ததற்காகவும், அவர்களிவ்வாறு தங்களுக்குண்டாயிருந்த வருத்தம் இப்பொழுது நீங்கியதற்காகவும் அதிகச் சந்தோஷமடைந்தார்கள்.

மறுபடி தங்கள் ராஜ்யத்தைக் கைவரப்பெற்ற ராஜராமகண்ட் என்கிற ராஜாவும், அவருடைய உத்தம மனைவியாகிய ராணிபவானி அம்மாளும் சுகமாக வாழ்ந்து வருங்காலத்தில் இவர்களுக்கு இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்து குழந்தைப் பருவத்திலேயே இறந்து போயின. பின்பு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்பெண் குழந்தைக்குத் தாரா என்கிற பெயரையிட்டு நாளுக்குநாள் வெகு அன்பாய் வளர்த்து கலியாணத்திற்குரிய வயது வந்தபொழுது, விவாகம் வெகு விமரிசையாகவும் செய்தார்கள். விவாகமாய்ச் சில வருடங்கள் சென்ற பிறகு அப்பெண்ணினுடைய கணவன் காலகதியால் மரணம் அடைந்தான்.

பெண்களைப் பெற்றவர்களுக்கு இதைவிடத் துக்கம் வேறொன்றுமில்லை. ஐயோ! பாவம்! சௌந்தரியமுள்ள தாராவுக்கு உண்டாயிருந்த விசனத்தைப் பார்க்கினும் எண்மடங்கு விசனம் தாய் தந்தைகளுக்கு உண்டாயிருந்தது.

இத் துக்கம் இவர்களைவிட்டு நீங்குவதற்குள் ராஜராமகண்ட் என்பவரும மரணமடைந்தார். அப்பொழுது

ராணி பவானியாருக்கு வயது 32. ஐயோ பாவம்! ராணி பவானியார் அநாதையாய் விட்டாள். தனக்கு ஆண் பிள்ளைகளோ கிடையாது. இருக்கிற ஒரு பெண்ணும் விதந்துவாய் விட்டாள். தன் கணவரோ எமலோகம் அடைந்து விட்டார். விசனமோ முன்னிலும் அதிகமாய் விட்டது.— இவ்வித துன்பங்களை யெல்லாம் வெளிக்குக் காட்டாமல் தன்னுள் அடக்கிக்கொண்டு, தன்னுடைய பெரிய ராஜ்யத்தைத் தானே ஆளத் தலைப்பட்டாள்.

அக்காலத்தில் தேசத்தில் கலகமுமுண்டாயிருந்தது. அதைப்பற்றிக் கவலையைத் தியாகித்துத், தனது ராஜாங்கங்களைத் தானே விருத்தி செய்தும், ராஜ தர்மத்திலும், குணத்திலும், பராக்கிரமத்திலும் ஒருவரும் இவ்விராணியாருக்கு நிகரில்லையென்று கண்டோர் சொல்லும்படி சுயேச்சையாய் ராஜாங்கத்தை நீதிவழி தவறாது அரசு புரிந்து வந்ததும் தவிர, தானே சேனைத் தலைவியாகவும் இருந்து வந்தார்கள்.

அக்காலத்தில் மோர்ஷிடாபாத்துக்குத் தெற்கிலுள்ள பிளாஸி என்ற விடத்தில் இங்கிலீஷ்காரர்களுக்கும், மகமதியர்களுக்கும் யுத்தம் நடந்தபோது ராணி பவானியார் அங்குபோய் அதைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். இவ்விதம் பார்த்ததால் அதிக அநுபவமும் யுக்தியும் ராணியாருக்கு உண்டானது என்றே சொல்லலாம். இந்த யுத்தமானது 1757-ம் வருஷத்தில் கிளைவுக்கும், சுராஜுத்டௌலாவுக்கும் நடந்தது. இவர்களில் சுராஜுத்டௌலா தோல்வி யடைந்தார்.

ராணி பவானியார் சுராஜுத்டௌலாவின் குணத்தை நன்கு அறிந்தவர்களானபடியால், தமது சேனைகளை முன்னிலும் அதிகமாகப் பலப்படுத்தி வந்தார்கள். சுராஜுத்



டௌலாவோ தன் முன்னோர்கள் சேகரித்து வைத்திருந்த திரவியத்தை யெல்லாம் துன்மார்க்க விஷயங்களில் செலவழித்துவிட்டுப் பின்பு செலவழிக்கத் திரவிய மில்லாதபடியால் சுதேச அரசர்களைத் தொந்தரை செய்தும், அக்கிரமமாக ஊரில் கொள்ளையடித்தும் திரவியத்தைச் சம்பாதித்துப் பலவித கொடுமைகளைச் செய்து வந்தான்.

அக்காலத்தில் இவனுக்குத் துர்மந்திரிகள் அநேகர் இருந்தார்கள்; அவர்கள் சொன்னபடி யெல்லாம் கேட்டு நடப்பான். இப்படி அவன் இருந்தபொழுது அநேக சிற்றரசர்கள் அவனுக்குப் பயந்திருந்தார்கள். ராணி பவானியாரோ அவனுக்குப் பயப்படாமலும், அவன் ஒருவேளை தம் தேசத்தை எதிர்க்கவந்தால் அவனுடன் யுத்தம் செய்வதற்கு என்னென்ன உதவிகள் வேண்டுமோ அவைகளை யெல்லாம் பலமாய்ச் சேகரித்துக்கொண்டும் வந்தார்கள்.

மேலும் அவன் துன்மார்க்கனாயிருப்பதால் அவனை நீக்கி இந்துக்களில் தகுந்த எவனுக்காவது ராஜாதிபத்தியத்தைக் கொடுக்க எண்ணங் கொண்டிருந்தார்கள். இதனால் தமக்கு அப்பதவி கிடைக்க வேண்டுமென்னும் ஆசை கொண்டவர்களல்ல. ஆனால் நவாபு அவர்கள் தம் தேசத்திலும் கொள்ளையடிக்க ஆரம்பித்தால், அக்கொள்ளையிலிருந்து தம் தேசத்தைக் காப்பாற்றுவதற்காகச் சைனியத்தைப் பலப்படுத்தினதுந் தவிரப் புதிதான சீர்திருத்தங்களும் செய்து யாவற்றையும் சீராய் ஒழுங்குபடுத்தி வைத்திருந்தார்கள்.

வங்காள ராஜதானியிலுள்ள சேனைகள் எல்லாவற்றுள்ளும் இம்மாது சிரோமணியின் சேனைதான் மிகுந்த பராக்கிரமமுள்ளதென்றும், ஒழுங்கும் யுத்தப் பயிற்சியில்

தேர்ச்சியு முள்ளதென்றும் யாவராலும் மெச்சப்பட்டு வந்தது.

இவ்விதம் ராணி பவானியார் தம் தேசத்தை அதிக ஜாக்கிரதையாக ஆண்டுவருங் காலத்தில், சில துன்மார்க்கர்கள் ராணி பவானியாருடைய குமாரத்தியாகிய தாராவைவிட அழகுள்ள பெண் ஒருவரும் கிடையாதென்று நவாப் இடத்தில் சொன்னார்கள். கெட்ட எண்ணமுள்ளவர்கள் துன்மார்க்கருடைய வார்த்தைகளுக்கு இணங்குவார்கள். அவர்கள் சொற்படியே நடப்பார்கள். நல்லோர்களைக் கண்டால் வெறுப்பார்கள்.

இவ்விதமே நவாப் இச்சொல்லைக் கேட்டு அவர்களுடைய துர்ப்போதனைக் கிணங்கி, அந்த ரூபவதியைப் பலவந்தமாய் எடுத்துக்கொண்டு வரும்படியும் ராணியாருடைய பொக்கிஷத்தைக் கொள்ளையடித்து வரவும் உத்தரவளித்துச் சில துன்மார்க்கர்களை அனுப்பினர்.

அப்படியே அவர்கள் சில சிப்பாய்களைக் கூட்டிக்கொண்டு நாட்டூருக்குப்போய் நவாப்பின் பேரைச்சொல்லி ராணி பவானியாருடைய பொக்கிஷத்தைக் கொள்ளையடிக்க யோசித்து, ஒரு தூதனை ராணி பவானியாரிடம் போய் அவர்களுடைய குமாரத்தியை நவாப் அவர்களுக்குக் கொடுக்கச் சம்மதமாவென்று கேட்டு வரும்படி அனுப்பினார்கள்.

ராணி பவானியார் தம்மிடம் அனுப்பப்பட்ட தூதன் திரும்பிச்சென்று சமாச்சாரம் சொல்ல முடியாமலிருக்கும்படி அவனைக் கொன்றுவிட உத்தரவளித்து விட்டார்கள். இச்சங்கதியை யறிந்த துன்மார்க்கர்கள் சிப்பாய்களுடன் ராணி பவானியாருடைய பொக்கிஷத்தைக்



கொள்ளையடிப்பதற்கும், அவர்களுடைய சௌந்தரியவதியைப் பலவந்தமாய் எடுத்துக்கொண்டு போகவும் ஆரம்பித்தார்கள்.

ராணி பவானியார் முன்னமேயே இவ்விதம் உண்டாகுமென்று நினைத்திருந்தது வீண்போகவில்லை. ஆயினும் தைரியத்தைக் கைவிடாமல் திரண்ட தம் சேனைகளைக் கூட்டிக்கொண்டு மகமதியர்களை எதிர்க்கச் சென்றார்கள். ராணி பவானியாரே சேனைத் தலைமையை வகித்து அவர்களுடன் யுத்தம் புரிந்தார்கள்.

கடைசியாக மகமதியர்களைத் தோற்கடித்தும் அவர்கள் சேனைகளைச் சின்னபின்னமாக்கியும், தம் தேசத்தின் எல்லையைவிட்டு ஓடிப் போகும்படியாயும் செய்து விட்டார்கள்.

இச்சங்கதி வங்காள ராஜதானி முழுவதும் பரவின பொழுது அங்குள்ள சிற்றரசர்களெல்லாம் மகமதியர்களுக்கு விரோதமாகக் கிளம்பி அவர்களைக் கண்டவிடத்தில் கொன்றார்கள். அவர்கள் கொள்ளையடித்து வைத்திருந்த திரவியங்களையும் சாமான்களையும் அபகரித்துக் கொண்டார்கள்.

இச் சங்கதியைச் சொல்லச் சிலர் செத்தோம் பிழைத்தோமென்று திகிலடைந்து தப்பி ஓடிப்போய் சுராஜுத்தௌலாவுக்குச் சொன்னார்கள். நவாப் தைரியத்தை யிழந்து துக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

சுராஜுத்தௌலா சக்கரவர்த்தி என்ற பேரை வகிக்கத் தகாதவனாய்விட்டான். இவனுக்குத் தேசமெங்கும் விரோதிகள் கிளம்பி விட்டார்கள். எப்பக்கத்தில் எதிர்க்

கிறதென்றும் தன்னை எவ்விதம் காப்பாற்றிக் கொள்வதென்றும் அவனுக்குப் புலப்படவில்லை. மற்ற ராஜாக்கள் இவனைச் சிம்மாசனத்தினின்றும் நீக்கி மற்றொருவனை வைக்கத் தீர்மானித்து விட்டார்கள்.

ராஜகிருஷ்ணசந்திரரும், ராஜராஜவல்லபரும், ராஜ ராய்துர்லவரும் ஜகத்சத் வீட்டில் ஒருமிக்கக் கூடிப் பேசினார்கள். அவ்வாலோசனைக் கூட்டத்திற்கு ராணி பவானியாரை வரவழைத்திருந்தார்கள்.

ஜகத்சத், "மீர்ஜாபர் நம்முடைய யோசனையையும், புத்திமையையும் கேட்டு நடக்கவும் வங்காள ராஜதானியை நீதியுடன் ஆளுவதாகவும் வாக்களித்திருக்கிறபடியால், அவரையே சிம்மாசனத்திற் குரியவராக நியமிக்க எண்ணிவிட்ட" மென்றார். "மேலும் அவர் நவாபினுடைய சேனைக்குத் தலைவர், மகமதியருடைய சேனைகள் இவர் கையின் கீழுள. ஆகையால் இவரையே சிம்மாசனத்தில் வைத்தால் தேசம் சண்டை சச்சரவின்றியும், கொலையும், இரத்த வெள்ளமுமின்றியு மிருக்கும்" என்றும் சொன்னார்.

"மகாராஜாக்களே! சினேகிதர்களே! வங்காள தேசத்துச் சிம்மாசனத்திற்குரிய ஒரு இந்துவை ஏற்படுத்த முடியாதா?" "இதுதான் தக்க காலம், தருந்த சமயம்" என்று ராணி பவானியார் கேட்டார்.

"ராணியாரே! தாங்கள் சொல்லியதை விரும்பாதவர் எவராவதுண்டா? அப்படிச் செய்ய யாருக்குத்தான் மனமில்லை? ஆனால் அநேக ஆயிரம் வருடங்களாக இதர தேசத்து மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறோம்; நமக்குக் கௌரவமும் யோக்கியதையும் கிடை-



யாது. இதரர்களை எதிர்க்கத் தக்க சேனைபலமும் நம்மிடத்தி லில்லையே. மேலும் ஐக்கியத்திற்கும் நமக்கும் வெகுதூரம். நம்மிடத்தில் ஒற்றுமை என்பது கிஞ்சித்தேனும் கிடையாது. பொறாமையோ நம்மிடத்தில் குடிகொண்டிருக்கிறது.

இந்துவை ரா. ஜாக ஏற்படுத்தினால் பிரஜைகளுக்குள் கலகமுண்டாவது நிச்சயம். அவ்விதமுண்டாகுங்கால் மகமதியர் இச்சாக்கிட்டு நமது ராஜ்யத்தை நம்மிடத்திலிருந்து சுலபமாகக் கைப்பற்றிக் கொள்வார்கள். அவர்களுக்கும் நமக்கும் அறிமுகமே கிடையாது. அவர்கள் நமக்கு அன்னியர்தான்; அவர்கள் குரூர சிந்தையுள்ளவர்கள். நாம் வெகு காலமாக மகமதியர்களுடன் சிநேகப்பான்மையோடு வாழ்ந்து வருகிறோம். அவர்களை நன்றாக நமக்குத் தெரியும். அவர்களும் நம்மைச் சிறப்பாக மதித்துவருகிறார்கள். வேறொருவனைச் சிம்மாசனத்தில் வைப்பதைப் பார்க்கிலும் அவர்களி லொருவனை நியமிப்பதுதான் உத்தமம்" என்று ராஜகிருஷ்ண சந்திரர் பதிலுரைத்தா .

ராணி பாவனியார் — தாங்கள் சொன்னது சரிதான். நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் மீர்ஜாபர் சிம்மாசனத்தை அடைந்தபிறகு சுராஜ்-உத்-டௌலாவைப்போல் கெட்டவனாக ஆய்விட்டால் நாம் என்ன செய்வது? அவனை எவ்விதம் சீர்ப்படுத்துவது?

ராஜராஜ வல்லபர் — அவ்விஷயத்தைக் குறித்து நிராலோசித்தோம். மீர்ஜாபர் நமக்கு யாதொரு இடையூறும் செய்யாமல் இருப்பதற்கும் அவனுக் எப்பொழுதும் பயமிருக்கும்படியாகவும் செய்ய ஆங் யர் உதவியைக் கேட்க உத்தேசித்திருக்கிறோம். அவ கள் மிக

வும் பராக்கிரமசாலிகள்; அவர்கள் சாதாரண வியாபாரிகளா யிருப்பதால் ராஜ்யத்தையடைய ஒருபொழுதும் நினைக்கமாட்டார்கள். அவர்கள் சுயேச்சையாய் வியாபாரம் செய்ய நாம் அநுகூலம் செய்தால் அவர்கள் எப்பொழுதும் நம்பக்கத்திலேயே யிருப்பார்கள். அவர்கள் உதவியைக் கொண்டு மீர்ஜாபர் சட்டத்தை மீறி நடக்காமல் தடுத்துக்கொண் டிருக்க முடியும்.

ஜகத்சந் — சுராஜுடௌலா கல்கத்தாவி லுள்ள அவர்கள் கோட்டையை அழித்துவிட்டான். நிச்சயமாகவே அவனைத் தண்டிக்க அவர்கள் முயலுவார்கள். புதிய நவாபு யாராயிருந்தாலும் சரி, ஆங்கிலேயருடன் சிநேகமாக இராவிடின், அவன் ராஜ்யத்தை யாளத் தொடங்குகையிலேயே அவர்களுடன் சண்டை செய்ய வேண்டி வரும்.

ராஜாராய் துர்லபர் — தக்ஷிணத்து மகமதிய நவாபை அவர்கள் தோற்கடித்ததாக நான் கேள்விப்பட் டிருக்கிறேன்.

ராணி பவானியார் — மகாராஜாக்களே! நானோ ஒரு ஸ்திரீ, சிறந்த ராஜாங்க விஷயங்களில் உங்களுக்குப் புத்தி சொல்ல நான் துணியமாட்டேன். மேலும் அப்படிச் செய்ய முன்வரத் தகுந்த யோக்கியதையுள்ளவளுமல்ல. ஆனால் ஒரு சந்தேகமாத்திரம் என் சிற்றறிவுக்குத் தோன்றுகிறது. மராட்டியர்களைப் போல் அவர்களும் குரூர முள்ளவர்களாயும், பேராசை யுடையவர்களாயு மிருந்தால் என்ன செய்வது? ராஜாங்க ருசியைக் கண்டபின் அவர்களும் வியாபாரத்தை விட்டு விட்டு ராஜ்யத்தைப் பெற்று அரசாள எண்ணினால் என்ன செய்வது? நாம் அவர்களை எப்படித் தடுப்பது? வழி என்ன? மராட்டியர்களைவிட அவர்கள் அந்நியர்கள். அவர்களைப்



பற்றி நமக்கொன்றும் தெரியாது. ஆகையால் மீர்ஜாபரை ஏற்படுத்துவதில் எனக்குச் சம்மதமில்லை. மராட்டியர்களை வரவழைப்பதிலும் எனக்கு இஷ்டமில்லை. ஆங்கிலேயர் கூட்டுறவும் எனக்குப் பிடிக்கவில்லை. சுராஜுடௌலாவின் குடும்பத்திற்கு நாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட் டிருக்கிறோம். அவர்களுடன் வெகு காலமாகச் சிநேகப்பான்மையுட னிருந்திருக்கிறோம். ஆகையால் அவனை நீக்கிவிட்டு அவன் குடும்பத்தில் எவனாவதொருவனை நியமிப்பது நலமென்று எண்ணுகிறேன். பிறகு உங்களிஷ்டம். என் மனத்திலிருப்பதை வெளிப்படையாக உங்களுக்கு அறிவித்து விட்டேன்.

அநேக மணி நேரம் இவ் விஷயத்தைக் குறித்துத் தர்க்கம் வெகு மும்முரமாக நடந்தது. கடைசியாக ஆங்கிலேயர் உதவியைக்கொண்டு மீர்ஜாபரைச் சிம்மாசனத்திற் குரியவனாக ஏற்படுத்த ராணி பவானியார் தமது சம்மதத்தை அளித்தார்கள். ராணி பவானியார் வெறுப்புடன் ஒத்துக்கொண்ட பொழுது, "மகாராஜாக்களே! நீங்கள் செய்யும் தீர்மானத்திற்குக் கட்டுப்பட் டிருக்கிறேன்; ஆனால் இவ்வித சூழ்ச்சி தேசத்திற்கு நன்மையைப் பயக்காதென என் மனது சொல்லுகிறது. ஆங்கிலேயர்தான் முடிவில் மிகு மேன்மையான ஸ்திதியி லிருப்பார்கள். ஆகையால் சிம்மாசனத்தில் பலவீன முள்ள மகமதியனை ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஆங்கிலேயரையே நியமித்துவிடலாமே. நம்மில் ஒருவனை நியமிக்க நாம் இணங்கி வரமாட்டோம், மராட்டியர்களை நம்பவும் மாட்டோம். ஆங்கிலேயர் சிறந்தகுண முடையவர்களாயும் நல்லவர்களாயு மிருப்பார்கள். நாம் இச் சமயத்தை வீணாகவிடாமல் அவர்களுக்கே கொடுப்போம்" என்று சொன்னார்.

ராஜகிருஷ்ண சந்திரர் — முதலில் மீர்ஜாபரை நியமித்துப் பார்ப்போம்; அவன் தவறினால் பின்னிட்டு ஆங்கிலேயரை வரவழைப்போம்.

அவர்கள் யாவரும் கடைசியாக மீர்ஜாபரை நியமிக்க ஒத்துக்கொண்டு கூட்டத்தைக் கலைத்துவிட்டுத் தங்கள் தங்க ளிருப்பிடம் சென்றார்கள்.

சுரௌஜடௌலா சிம்மாசனத்திற்கு வந்து ஒரு வருடத்திற்குள் ஜனங்களைப் பலவிதங்களிலும் இம்சித்து வந்தான். சிற்றரசர்களும் ஜனங்களும் இவன் எப்பொழுது ஒழிவான் என்று பிரார்த்தித்துக்கொண்டே யிருந்தார்கள். மேற்கூறிய சிற்றரசர்கள் மீர்ஜாபரைச் சிம்மாசனத்திற் குரியவனாக நியமித்தார்கள்.

மீர்ஜாபர் கர்னல் க்ளைவைத் தனக்கு உதவி புரியும்படி கேட்டுக்கொண்டான். மேலும் அவர்கள் சுரௌஜடௌலாவை எதிர்த்தால் தானும் பெருத்த சேனையுடன் வந்து அவர்களுக்கு உதவிபுரிவதர்கவும் வாக்களித்தான். அவ்விதமே க்ளைவும் ஒத்துக்கொண்டார். நவாப்பு இச்சங்கதியையறிந்து அநேக ஆங்கிலேய கைதிகளை விடுதலையாக்கி க்ளைவுடன் சிநேகம் செய்துகொள்ள முயன்றான். அது பிரயோசனப் படவில்லை. இரு திறத்தாருக்கும் பலமான யுத்தம் ப்ளாஸி என்ற இடத்தில் நடந்தது. சுரௌஜடௌலா தோல்வியடைந்து தன்னுயிர் தப்பினால் போதுமென்று ஓடிப்போய்விட்டான். ராணி பவானியார் தமது சேனையுடன் யுத்தகளத்தின் ஒரு புறத்தில் நின்றுகொண்டு யாவற்றையும் பார்த்துப் பின் தமது இருப்பிடத்திற்குச் சேனைகள் பின்தொடரச் சென்றார்கள்.

க்ளைவு மூர்ஷிடாபாத்துக்கு வந்து நவாபினுடைய பொக்கிஷத்தைக் கைவசப் படுத்திக்கொண்டு மீர்ஜாபரை



நவாபாக நியமித்துவிட்டுப் பொது ஜனங்களுக்கும், ஆங்கிலேயருக்கும் செய்யவேண்டிய நன்மைகளை யெல்லாம் செய்ய உத்தரவளித்துவிட்டுக் கல்கத்தாவுக்குச் சென்றார்.

சிலவருடங்களாக வங்காள ராஜதானியில் கலகமுண்டாய்க் கொண்டே யிருந்தது. மீர்ஜாபர் அடிக்கடி அபினி



லார்ட் க்ளைவ்.

தின்றுகொண்டும் பணத்தை வீணாய் வேடிக்கைகளில் செலவு செய்துகொண்டு மிருந்தான். சோம்பேறியா யிருந்தமையால் தனது பெரிய ராஜ்யத்தைக் கவனியாமலு மிருந்தான். இவன் சிம்மாசனத்தினின்றும் நீக்கப்

பட்டு இவனது மருமகனை மீர்காசிம் நவாபாக நியமிக்கப்பட்டான். இவன் அதிருப்தியாக நடந்தமையால் இவனும் நீக்கப்பட்டு மறுபடியும் மீர்ஜாபர் நியமிக்கப்பட்டான். இவ்விதம் பலதடவை நடந்தது. இவையெல்லாம் மூர்ஷிடாபாத்து அரண்மனைக்குள்ளேயே நடந்தன.

வங்காளம் முழுவதும் சமாதானமும், திருப்தியும் குடிகொண்டிருந்தன. ஏனெனில், அச்சமயத்தில் வட வங்காளம் ராணி பவானியாராலும், தென் வங்காளம் ராஜகிருஷ்ண சந்திரராலும், கீழ் வங்காளம் ராஜராஜ வல்லபராலும், மேற்கு வங்காளம் ராஜராய் துர்லபராலும் வெகு நன்றாக ஆளப்பட்டு வந்தன. நவாப்பு உள் நுழைந்து அக்கிரமம் செய்ய மிகப் பயந்திருந்தான். ஆங்கிலேயர் இவர்களுடைய ஆட்சியைக் கண்டு சந்தோஷப்பட்டு உள் நுழையாமலிருந்தார்கள்.

மேலும் இவர்கள் தங்கள் கப்பங்களைச் சரிவர செலுத்தி வந்தார்கள். இவர்கள் நவாபுக்கும், ஆங்கிலேயருக்கும் சிநேகிதர்கள். அவர்கள் ஆளுகையைப் பற்றிக் குற்றங் குறை கூற ஒன்றுமில்லாமலிருந்தது. இவர்கள் ஜீவித்த காலம்வரை வங்காளம் யாதொரு கலகமுமின்றி நன்றாகத்தானிருந்தது. வங்காள முழுமையும் சமாதானமாயும், அமைதியாயுமிருந்தது.

ராணி பவானியார் முதலில் பற்பல சங்கடங்களை அநுபவித்தபோதிலும் பிற்காலத்தில் தமது வாழ்நாளை யாதொரு மனக்கவலையுமின்றிச் சுகமாகக் கழித்தார். தமது தேசத்தை அரசுபுரிய அபாரசக்தியுள்ள திவானை ஏற்படுத்தினார். சட்டதிட்டங்களையெல்லாம் ஜனங்களுக்குச் சௌகரியமாயிருக்கும்படிச் செய்தார். தேசத்திற்கு இன்னும் வேண்டியவைகளையெல்லாம் செய்து



வைத்தார். திவான் தமது புத்தி சாதுரியத்தால் தேசத்தை ராணி பவானியாரின் சட்டதிட்டப் பிரகாரம் ஆண்டு வந்தார். ஜனங்களும் ராணி பவானியாரை வாழ்த்திக் கொண்டேயிருந்தார்கள்.

தமது தேசம் அமைதியாய் யாதொரு பயமுமில்லாமலிருந்ததால் ராணி ஒரு குமாரனை ஸ்வீகாரம் செய்துகொண்டு அவனை அரசனாக்கினார். அவன் பெயர் ராஜராமகிருஷ்ணன். அவன் ராணியாரிடத்தில் பழகி வந்தமையால் நல்ல குணமுள்ளவனாயும் தெய்வபக்தியுள்ளவனாயுமிருந்து ராஜ்யத்தை நீதி வழுவாமல் ஆண்டுவந்தான். ராணியார் கங்காநதிக் கரையில் வசித்துத் தமது வாழ்நாளைக் கடவுளைப் பூஜிப்பதிலும், ஸ்துதி செய்வதிலும் செலவழிக்கத் தீர்மானித்தார். மூர்ஷிடாபாத்துக்கப்பால் கொஞ்சம் தூரத்தில் கங்காநதிக் கரையில் ஒரு அரண்மனை கட்டிக்கொண்டு அங்கு எப்பொழுதும் தேவ பூஜை முதலியவைகளைச் செய்துகொண்டு வந்தார். ராணி பவானியாரிருக்குமிடத்தைச் சுற்றி ஜனங்கள் சூழ்ந்து சிறிய வீடுகளைக் கட்டிக்கொண்டு வசித்தார்கள். காலக்கிரமத்தில் அது ஒரு பெரிய பட்டணமாய்விட்டது. தானதர்மம் செய்வதிலும், குளம், குட்டை, கிணறு முதலியவைகளை வெட்டுவதிலும், கோயில்கள் பாடசாலைகள் கட்டுவதிலும் வருடம் 25 லக்ஷம் ரூபாய் செலவு செய்து வந்தார்கள். சம்ஸ்கிருத கலாசாலை கட்டி வைத்து, அப்பாஷையைப் படிப்பவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார்கள். ஏழை ஸ்திரீகளுக்கும் மனிதர்களுக்கும் அநாதைக் குழந்தைகளுக்கும் அன்ன வஸ்திரம் கொடுத்து உதவிபுரிந்து வந்தார்கள். அநேக அன்ன சத்திரங்களையும் கோயில்களையும் கட்டி வைத்துப் பரிபாலித்தார்கள். ஜல கஷ்டமுள்ள இடங்களிலெல்லாம்

அநேக குளங்களை வெட்டி வைத்தார்கள். வெயில் காலங்களில் பிரயாணிகள் தங்குவதற்குத் தோப்பு துரவு சாவடி முதலியவைகளையும் நியமித்தார்கள். இவைகளைத் தவிர காசியில் இப்பொழுதுள்ள அநேக கோயில்களும், சத்திரங்களும் இவ்விராணியாரால் கட்டப்பட்டவைகளாம்.

1803-ம் வருடத்தில் இவ்விராணியார் பரலோகமடைந்தார்கள். இவருடைய ஸ்வீகார புத்திரனும் தனக்கு முதிர்ந்த வயது வந்தவுடன் ராஜ்யத்தை விட்டு விட்டுத் துறவு பூண்டு சத்காலக்ஷேபங்களில் காலத்தைக் கழித்து வந்தான். சந்நியாசியாவதற்குமுன் தன்னுடைய ஆஸ்தியில் முக்கால் பாகத்தைத் தர்மம் செய்வதில் உபயோகித்தான். மீதிய இவன் ராஜ்ஜியத்தில் சேர்க்கப்பட்டது. இவர் இறந்தபொழுது நாட்டூர் ராஜ்யம் சரியாக ஆளப்படாமல் க்ஷீணதசையை யடைந்து முக்கால் பாகத்திற்குமேல் கடனாளிகளுக்குப் போய்விட்டது. மீதியுள்ள கொஞ்சபாகம் இப்பொழுதும் அவ்வம்சத்தைச் சேர்ந்தவரால் ஆளப்பட்டு வருகிறது. அவருக்குக் காருண்ணிய பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மகாராஜா பஹாதூர் என்ற பட்டம் அளித்திருக்கிறார்கள்.

# 10. அகலியாபாய்

இந்தூர் ராஜ்ஜியமானது மராட்டியர்களின் சுயாதிபத்தியத்தில் முக்கியமானவைகளில் ஒன்றாக இருந்தது. அது ஹோல்கார் வம்சத்தாரால் ஆளப்பட்டு வந்தது. இந்தூரை அரசாண்டு வந்த மல்ஹாரிராவ் 1765-ஆம் வருஷத்தில் மரணமடைந்தார். இவருடைய புத்திரன் கண்டேராவு ராஜ்யத்தை ஆண்டு வந்தார். இவருக்கு அகலியாபாய் என்ற ஸ்திரீ ரத்னம் மனைவியாக வாய்த்தாள். இப்பெண்மணி குழந்தையாயிருந்தபொழுது சம்ஸ்கிருதமும், மராட்டி பாஷையிலுள்ள கிரந்தங்களையும் நன்றாகப் படித்து வந்தாள். அப்பொழுது இவள் புத்தி கூர்மையுள்ளவளென்றும், படிப்பதில் மிக்க ஆவலுடையவளென்றும் அநேகர் சொல்லத் தலைப்பட்டார்கள். இப்பெண்மணி சகல கலைகளையும் நன்றாகக் கற்று வந்ததுடன் ராஜாங்க தர்ம முறையைப் பற்றியும் படித்துவந்தாள்.

பெரியோரிடத்தில் மரியாதை, தெய்வபக்தி, பரோபகாரம், தேசாபிமானம், மதாபிமானம் முதலிய நற்குணங்கள் இவளிடத்தில் அமைந்திருந்தன. சௌந்தரியத்தில் மகாலக்ஷ்மியைப் போலவும், கல்வி அறிவில் வாணியைப் போலவும்; தர்மத்தில் தருமபுத்திரரைப் போலவும், தானம் செய்வதில் கர்ணனைப் போலவும், தெய்வபக்தியில் ப்ரஹலாதனைப் போலவு மிருந்தாள். இவ்வித அழகும் நற்குணங்களும் பொருந்திய அகலியாபாய் என்ற



அகலியாபாய்



ராஜகன்னிகைக்கும் கண்டேராவுக்கும் விவாகம் ஆயிற்று. அக்கால முதற்கொண்டு தன் கணவனுக்குச் செய்யவேண்டிய பணிகளைத் தவறாமல் செய்து வந்தாள். ராஜவம்சத்தைச் சேர்ந்தவளாயிருந்தபோதிலும் ஸ்திரீகளின் கடமையை மறவாமல் தான் படித்த அறிவைக்கொண்டு ஒருவருக்கும் யாதொரு மனவருத்தமும் வாராவண்ணம் தன் குடும்பத்தை அதிக சாமர்த்தியத்துடன் நடத்தி வந்தாள்.

இவ்விதம் இவ்விருவரும் வாழ்ந்து வருகையில் இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். அதற்குத் தக்க வயது வந்தபொழுது மல்லிராவு என்று பெயரிட்டு வித்தியாப்பியாசம் செய்வித்துத் தக்க ஆசிரியனை நியமித்துத் தமது குழந்தைக்கு நன்றாய்க் கல்வி கற்பித்து வரும்படி ஏற்பாடு செய்தார்கள். மல்லிராவு நன்றாகப் படித்து வருகையில் தன் தாயின் குணமனைத்தையும் பெற்று, வயதானபின் அவளைப் போல் விளங்கி வந்தான். மேலும் முக்தா என்ற பெண் குழந்தையும் பிறந்தது. அதைச் சீராட்டி முத்தமிட்டு வளர்த்து வந்தாள். தக்க வயதில் கல்வியும் கற்பித்துவர ஏற்பாடு செய்தாள். பெண்மணியும் தாயைப்போலப் புத்திசாலியாக விளங்கி வந்தாள். அகஸ்மாத்தாய் கண்டேராவு, பில்ஸ் என்ற காட்டு ஜாதியாரால் கொல்லப்படவே, இளம்பிராயமுள்ள மல்லிராவு பட்டத்திற்கு வந்து ராஜ்ஜியத்தை தர்மநெறி தவறாமல் அரசுபுரிந்து வந்தான். அகலியாபாய் தன் கணவரது அகால மரணத்தைக் குறித்து மிக வருந்தினபோதிலும் தன் புத்திரனுக்கு யாதொரு விசனமும் அதிகரிக்காமலிருக்க வேண்டுமென்று எண்ணித் தன் மனவருத்தத்தை வெளிக்குச் சிறிதேனும் காட்டாமல், தனிமையாகக் கடவுளை வணங்

கிக்கொண்டும் விரதம் முதலியவைகளை அநுஷ்டித்துக் கொண்டும் வந்தாள்.

ஆனால் மல்லிராவு நெடுங்காலம் ஜீவிக்கவில்லை. அற்பாயுசுள்ளவனாய்த் திடீரென்று மரணமடைந்தான். இவனுக்குப் புத்திரனுமில்லை, புத்திரியுமில்லை. சிம்மாசனத்திற்குரியவர் ஒருவருமில்லாததைப்பற்றி இவனுடைய தாயாராகிய அகலியாபாய் தான் தனிமையாக ஜீவித்து வந்ததை விட்டுவிட்டுத் தானே ராஜ்யத்தை ஆளவேண்டியிருந்தது. இவளிடத்தில் வியப்பான அறிவும், தைரியமும், சாமர்த்தியமும் பொருந்தியிருந்தன.

ராணி அகலியாபாய் வானுலகம் சென்று 150 வருடகாலமானபோதிலும் தென்னிந்தியா முழுமையும் ராணி அகலியாபாயின் பெயர் கௌரவமாக வழங்கப்பட்டு வருகிறது. ராணி அகலியா இறந்தபின் அநேக அரசர்களும், அரசிகளும் ராஜ்ஜியத்தை ஆண்டுவந்தார்கள்; ஆயினும் ஜனங்கள் கண்டோராவின் மனைவியாராகிய அகலியாபாயை விரும்பியும், தொழுதும், மெச்சியும் வந்ததுபோல் அவர்களில் ஒருவரும் கொண்டாடப்படவில்லை.

பிரபஞ்சத்தில் துஷ்டர்கள் பொருளாசை, அதிகாரப் பிரியம் முதலியவைகளைப் பெற விரும்பும்பொழுது அவர்கள் அவைகளை எவ்விதமாய் அடையலாம் என்பதை முழுவதும் மறந்து விடுகிறார்கள். தோஷங்களுக்கு அஞ்சார்கள். தெய்வத்திற்குப் பயந்து நடவார்கள். பெரியோர், சிறியோர், ஸ்திரீ ஜாதி யென்றும் பாரார்கள். அவர்களிடத்தில் பஞ்சமா பாதகம் குடிகொண்டிருக்கும். கெட்ட எண்ணமும், துராசையும் அவர்கள் மனத்தில் உதித்துக்கொண்டே யிருக்கும்; பாப கிருத்தியங்களையே செய்து வருவார்கள். இவ்விதமே சில துன்மார்க்கர்கள்



இந்தூர் ராஜ்யத்தில் கெட்ட காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ராணி அகலியாபாய் பலவீனமுள்ள ஒரு ஸ்திரீ என்று நினைத்து ராணியாரைப் பட்டத்தினின்று நீக்கவும், ராஜ்யாதிகார முழுவதையும் அடையவும், பொக்கிஷத்தையும், ஜனங்களுடைய சொத்துக்களையும் கொள்ளையடிக்கவும் துராலோசனை செய்தார்கள். ஆகாயத்தில் வீடு கட்டலாம் என்று ஒருவன் யோசிப்பதுபோல் இவர்கள் இன்னும் பற்பல விதமாய்க் கொடிய செயல்களைச் செய்யத் துணிந்தார்கள். கடைசியாக ஒரு உறுதியான கோட்டையை உடைப்பது எவ்வளவு அசாத்தியமோ அப்படியே ராணி அகலியாபாயையும் அவர் ராஜ்ஜியத்தையும் பாழாக்குவது கடினமென்று அறிந்துகொண்டார்கள். நாம் செய்யத் துணிந்தது பிசகென்று எண்ணி விசனமுற்றார்கள்.

ராணி அகலியாபாய் அவர்கள் சாதாரண ஒரு ராஜஸ்திரீயாக இருக்கவில்லை. பேதைமைக் குணமும் பயங்காளித்தனமும் அவ்விராணியாரிடத்தி லில்லை. ராஜ்யத்தைத் திறமையுடன் ஆளும் ராணியாக விளங்கினாள். மேலும் இந்தூரை இதற்குமுன் அரசாண்ட எல்லா ராஜாக்களையும்விட அதிக பராக்கிரமும், ராஜ்யத்தை அரசு புரியும் சக்தியுமுடைய ராணியாக இருந்தாள். ராணி ராஜ்யத்தை முழுச் சுதந்தரத்துடன் தர்மநெறி தவறாமல் அரசு புரிந்து வந்தாள். ராஜாங்க விஷயத்தில் பிறர் நுழைந்து யாதொன்றும் செய்யாவண்ணம் தடுத்துவந்தாள். உயர்ந்த பதவியில் புத்தி சாதுர்யமும், சாமர்த்தியமும் பொருந்தியவர்களையே நியமித்தாள். பிரிடிஷ் ராஜாங்கத்தில் இப்பொழுது கல்விஇலாகா, காட்டு இலாகா, போலீஸ் இலாகா, உப்பு இலாகா வென எப்படிப் பற்பல பாகங்களிருக்கின்றனவோ அப்படியே தமது ராஜ்யத்திலும் பற்பல விஷயங்

களுக்குத் தக்க உத்தியோகஸ்தர்களை நியமித்து, அவர்கள் ஜனங்களை ஒரு விஷயத்திலும் வருத்தாமலும், தங்கள் அலுவல்களைச் சரியாய்ச் செய்துவரவும், தங்களிஷ்டப் படி எல்லாக் காரியத்தையும் நடத்திவர ஒருவருக்கும் இடங்கொடாமலும், ஒவ்வொரு உத்தியோக சாலையையும் நேரில் பார்வையிட்டும் வந்தாள். இவ்விதம் ராணியார் செய்து வந்தமையால் உத்தியோகஸ்தர்கள் தப்பு வழி களில் பிரவேசித்து லஞ்சம் வாங்காமலும், ஜனங்களை இம்சிக்காமலும் இருந்தார்கள். ஜனங்களும் யாதொரு தொந்திரவுமின்றி ராணியாருடைய ஆளுகையைப் புகழ் ந்துகொண்டும், ராணியாரை வாழ்த்திக்கொண்டும் சுகமாக அவ்விராஜ்யத்தில் வசித்துக்கொண்டிருந்தார்கள். மேலும் ராணியார் அடிக்கடி சகல விஷயத்தையும் தாமே கவ னித்து வந்தமையால் உத்தியோகத்திலுள்ள துஷ்டர்களை யெல்லாம் வேலையினின்றும் நீக்கித், தமது ராஜ்ஜியத்தில் துர்க்கிருத்தியம் நடவா வண்ணம் செய்ய நேர்ந்தது.

இவ்விதம் ராணியார் கெட்டவர்களை நீக்கி நல்லவர் களை அவர்கள் ஸ்தானத்தில் ஏற்படுத்தி ராஜ்யத்தைச் செவ்வனே ஆண்டுவருகையில் துஷ்டர்களுக்குக் கோபம் மூண்டது. அவர்கள் பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்று கோபாவேசத்துடன் ராணி அகலியாபாயைப் பட்டத்தினின்று நீக்க ராஜத் துரோக சிந்தையுடன் ஒரு கூட்டம் கூடினார்கள். கங்காதா யஸ்வந்த் என்பவர் அக் கூட்டத்திற்குத் தலைமையாயிருந்தார். இவர்தாம் ராஜ வம்சத்திற்குப் புரோகிதர். ஆகையால் இவருக்கு அரண் மனையிலும், உத்தியோகசாலை முதலியவைகளிலும் அதிக செல்வாக்குண்டு என்று நினைத்திருந்தார். ஆனால் அக லியாபாய் ஒரு விஷயத்திலும் இவர் பிரவேசிக்கா வண் ணம் தடுத்துவிட்டாள்.



"குரு பட்டம் தரித்த எனது குருச் சிரேஷ்டரே! மதசம்பந்தமான விஷயத்தில் தாங்கள் என்ன சொன்ன போதிலும் அவைகளைக் கேட்டு நடக்க நான் சித்தமா யிருக்கிறேன்; ஆனால் தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் தாங்கள் தலையிட்டுக்கொள்ள வேண்டா மென்று நான் தங்களை மிக வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று சொன்னாள்.

இவ்விதம் ராணியார் சொன்னது, புரோகிதர் தாம் எண்ணியபடி முடியவில்லையே என்று வருத்தப்படும் படி செய்தது. ராணியார் வார்த்தைகள் அவருக்கு அதிக கோபத்தை யுண்டாக்கின. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதுபோல் ராணியாருக்குக் கெடுதல் செய்யத் தீர்மானித்து மாதுராவின் சிற்றப்பனாகிய ரகு பத்தாவை தன் பக்கம் சேரும்படி தூண்டினான். ரகு பத்தா யாவராலும் மதிக்கப்பட்டு வந்தார். இவரைக் கண்டால் யாவரும் பேசக்கூடத் துணியமாட்டார்கள். இவரிடத்தில் ஜனங்களுக்கு அவ்வளவு பயம். மகா வல்லமைசாலி, செல்வாக்குள்ளவர். புரோகிதர், இவ ரையும், இன்னும் சில ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர் களையும் துராலோசனைக் கூட்டத்திற் சேர்த்துக்கொண் டார். இன்னும் பெரிய அலுவல் கிடைக்காதவர்களும், வேலையினின்று நீக்கப்பட்டவர்களும் துரிதமாக அக் கூட்டத்தில் சேர்ந்தார்கள். அது ஒரு பெருத்த ராஜத் துரோக சபையாயிற்று. இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, ரகசியத்தை எவ்விதமாய் வெளிப்படுத்தலா மென்று யோசனை செய்து, கடைசியாக ராணி அகலியாபாயிக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். "ராஜ புத்திரர்கள் ஒரு பக் கத்திலும், மற்றோர் பக்கத்தில் ஆங்கிலேயரும் படை

வெடிப்பதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் பொழுது ஒரு ஸ்திரீயாக இருக்கிற நீ இந்தூர் சிம்மாசனத்தில் வீற்றிருப்பது தகுதியல்ல. மேலும் நீ ஒரு புத்திரனைச் சுவிகாரம் செய்துகொண்டு அவனுக்குப் பதிலாக ஒருவனை ஆளுபவனாக நியமிக்கவும் வேண்டும்" என்று எழுதிப் பகிரங்கமாக அனுப்பினார்கள்.

இவ்விதத் துராலோசனைகளைச் செய்வோர் இருப்பதாக நுட்பமாக முன்னமே அறிந்திருந்தாள். கங்காதர யஸ்வந்த் அவர்களோடு சேர்ந்து சூழ்ச்சி செய்வதினால் அவர்களில் ஒவ்வொருவனுடைய நடவடிக்கையையும், செல்லுமிடம் முதலியவைகளையும் அதிக ஜாக்கிரதையாகக் கவனித்து வரும்படி காவலாளிகளை நியமித்து வைத்தாள். ராணியாரும் இவர்களுக்குச் சிறிதேனும் பயப்படவில்லை. இப்படி ஒருவேளை சம்பவித்தாலும் சம்பவிக்கலாமென்று தான் எண்ணி அவ்விதக் கூட்டத்தைக் கலைக்கவும் செய்யவேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து முடித்தார்கள்.

அவர்கள் எங்கு சென்றாலும் அவர்கள் பின்னால் ஒருவன் சென்று அவர்கள் செய்யப் போகும் காரியத்தை அறிந்துகொண்டு வந்து ராணியாருக்குத் தெரிவிப்பான். அவர்கள் செய்யும் ஒவ்வொன்றையும் அறிந்து வர ஒற்றர்களும் போய் வருவார்கள். அவர்கள் வீடுகளின் சமீபத்தில் சிப்பாய்கள் ரகசியமாக வைக்கப்பட்டார்கள். போலீசார், அவர்களுடைய ஆலோசனைச் சபை கூடுமிடத்திலும் மாறுவேடம் பூண்டு துப்பறிந்து வருவார்கள். அவசரமாகச் சேனைகள் எப்பொழுது தேவையோ அப்பொழுது தயாரா யிருக்கும்படி உத்திரவளித்திருந்தார்கள். திடீரென்று எவ்வித வேளையிலும்



தாம் சேனைத்தலைமையை வகித்து யுத்தம் புரியத் தயாரா யிருந்தார்கள்.

மேற் கூறியவாறு ராணி எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தானபொழுது ரகுபத்ராவுக்கும், துராலோசனை செய்வோருக்கும் பின்வருமாறு பதிலளித்தாள் — "நீங்கள் என்னை பயமுறுத்தவும், என் ராஜ்யத்தில் கலகமுண்டாகும்படியான எதையும் செய்யவும் உங்களை விடுவேன் என்று நினைக்கவேண்டாம். நானொரு மராட்டிய ஸ்திரீ, ஆகையால் உங்களை ஆளுவோராகிய ராணிக்கு வெறுப்புண்டாகும்படியான செயல்களைச் செய்வதைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நீங்கள் துஷ்டச் செய்கை செய்வீர்களென்று நான் ஐயுறுவதால் உங்களையெல்லாம் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்து வைக்க எனது உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவளித்திருக்கிறேன்." சதியாலோசனை செய்பவர்கள் இக்கடிதத்தைப் பெற்றவுடன் அவர்களெல்லாம் ராணியாரை எதிர்க்கப் பிரயத்தனம் செய்யும் முன் பிடிக்கப்பட்டுக் காராக்கிருகத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

கங்காதர யஸ்வந்த் ராணியாரை மன்னிப்புக் கேட்டுக் கொண்டதின்மேல் நியாயஸ்தலத்தில் விசாரணை செய்யும்பொழுது வர உத்தரவு பெற்றார். மற்றத் துராலோசனை செய்தவர்கள் இனி ராஜத் துரோகமான செய்கை யொன்றையும் செய்வதில்லை யென்றும், ராஜபக்தி யுள்ளவர்களா யிருப்போ மென்றும் மிகுந்த பயத்துடன் பிரமாணிக்கம் செய்ததினால், விடுதலை செய்யப்பட்டார்கள். ரகுபத்ர இந்தூர் ராஜ்யத்தை விட்டு வேறெங்காவது போய் வசிக்கும்படி சுயேச்சையாக விடப்பட்டான்.

ஆனால் இவன் அதி சீக்கிரத்தில் அக்கூட்டத்தில் சேர்ந்ததனால் தனக்கு உண்டான அவமானத்தை மறக்கவில்லை. ராணி அகலியாபாய் தன்னை வேறு தேசத்தில் வசிக்கும்படி செய்ததைக்குறித்து உள்ளுக்குள்ளே மிகவும் வருந்தினான். தன் வம்சத்து ஸ்திரீகளில் மிகச் சிறந்தவளாகிய ராணிக்கு ஏதாவதொரு கெடுதல் செய்யவும், அதற்கு எப்பொழுது சமயம் வாய்க்குமென்றும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ராஜபுத்திரர்களுடன் இரகசியமாய்க் கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். அவர்களை இந்தூர் ராஜ்யத்தின்மீது படையெடுத்து வரும்படி தூண்டியும் வந்தான். இன்னும் என்னென்ன செய்தால் ராணியாருக்கு அபகீர்த்தியுண்டாகுமோ அவைகளையெல்லாம் செய்தும் வந்தான்.

அகலியாபாய் சாதாரண ஸ்திரீயல்லவென்றும் மிகுந்த புத்திசாதுரிய முள்ளவளென்றும் முன்னமே சொன்னோமல்லவா? மிகுந்த ஜாக்கிரதையுடன் ஒவ்வொன்றையும் கவனித்து வந்தாள். ரகுபத்தா இன்னது செய்து வருகிறானென்பதும் ராணியாருக்குத் தெரியும்; சீக்கிரமாகவாவது அல்லது சிலகாலஞ் சென்றாவது ராஜபுத்திரர்கள் தம் தேசத்தை எதிர்க்க வருவார்களென்றும் நினைத்திருந்தாள். இதற்காகவே தக்க பிரயத்தனங்கள் செய்துகொண்டிருந்தாள். தாழ்ந்த ஜாதியிற் பிறந்த துல்காஜி ஹோல்கார் என்பவனைத் தனது சேனைக்குத் தலைவனாக நியமித்தாள்.

ஏனெனில், இவன் மகா சமர்த்தன், யோக்கியதையுள்ளவன். தனது ராணியாரிடத்தில் அன்பும் நன்றியறிதலு முள்ளவன், தேசாபிமானம் பொருந்தியவன். மேலும் இவனைப்போன்ற ராணுவப்பயிற்சி யுள்ளவனு



மில்லை. இவனுக்குச் சமமானவனுமில்லை. இவனுடைய போதனையால் ராணியாருடைய சேனை சகலவித யுத்தப் பயிற்சியிலும் தேறி, யாவரும் கண்டு நடுங்கும்படியிருந்தது. அகலியாபாயின் சேனையென்றால் அக்காலத்தில் எத்தேசத்து மன்னனும் அஞ்சுவான்.

ரகுபத்தாவினிடம் உதவியை ரகசியமாய்ப் பெறுவோமென்ற நம்பிக்கையாலும் ஒரு ஸ்திரீயின் கையில் ராஜ்யமிருப்பதினாலும் ராஜபுத்திரர்கள் இந்தூர் ராஜ்யத்தின் எல்லையைத் தைரியமாய்த் தாண்டினார்கள்.

தாண்டியவுடன் அவ்வாசையுள்ள ராஜபுத்திரர்கள் நிம்பேரியா என்ற கோட்டையைப் பற்றிக்கொண்டு அதன் கவர்னராகிய திப்ஞறையைத் துரத்தி விட்டார்கள். இச் சமாச்சாரம் இந்தூருக்கு எட்டியவுடன் ராணியார் தனது சேனை 5000 போர்வீரர்களுடன் துக்காஜி சிந்தியா, ஸ்ரீபாய் என்ற சேனைத் தலைவர்களையும் திப்ஞறைக்கு உதவிபுரியத் துரிதமாகப் போகும்படி அனுப்பினார்கள். பின்னிட்டுத் தாமும் சில வீரர்களுடன் ராஜபுத்திரர்களை எதிர்த்து எல்லையைவிட்டுத் துரத்திவிடப் புறப்பட்டார்கள்.

ராணியார் போய் யுத்தம் செய்யப்புகும் முன்னமே, முன்சென்ற இருசேனைத் தலைவர்கள் நிம்பேரியா என்ற கோட்டையை மறுபடியும் கைவசமாக்கிக்கொண்டு ராஜபுத்திரர்களைப் பட்டணத்திற்கு வெளியில் துரத்திவிட்டார்கள்; அவர்களில் அநேகர் காயம் பட்டார்கள்; சிலருக்குக் கால் போய்விட்டது; சிலருக்குக் கை போய்விட்டது; சிலர் மடிந்தார்கள். மீதியுள்ளவர்கள் ராணி அகலியாபாய் அவர்கள் பெருத்த சேனையுடன் வருகிறார்களென்பதை யறிந்து பின்வாங்கி ஓடிப்போய் விட்டார்கள்.

ராணி அகலியாபாய் ஜீவித்திருக்கும் வரையில் அவ்விந்தூரின் எல்லையை மறுபடியும் தாண்டிவரத் துணியவேயில்லை. ராஜபுத்திரர்கள் அவ்வளவு பயத்துடன் ராணியாருக்கு நடுங்கிப் பதுங்கிக்கொண்டிருந்தார்கள். ரகுபத்தாவோ அவமான மடைந்து இனி யாதொரு துர்ச் செய்கையும் செய்யக்கூடாதென்று எண்ணித் துக்கித்தான்.

ராணி அகலியாபாய் வீரியமுள்ள ஸ்திரீயாயிருந்ததுடன் சேனையை நடத்தி யுத்தம் புரியும் சக்தியுடையவளாயுமிருந்தாள். மேலும் ராஜதந்திரத்திலும், ஸ்தானாதிபத்தியத்திலும் சிறந்து விளங்கினாள். இவ்விராணியார் சிம்மாசனத்தில் வீற்றிருந்த காலம் வரைக்கும் ராஜ்ய முழுவதும் சமாதானமும், செழிப்பும் குடிகொண்டிருந்தன. ஆயினும் ராணியார் முதலில் ராஜ்யத்தை ஆளத் தொடங்குகையில் தக் என்ற முரட்டுக் காட்டு ஜாதியாரும், இன்னும் சில கொள்ளை யடிப்போரும் ராஜ்ய முழுவதும் கொள்ளை யடித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் உயிருக்கும் ஆஸ்திக்கும் அதிக பயமிருந்தது. ராணி அகலியாபாய் பகிரங்கமாக எவன் இவ்வித கொள்ளைக்காரர்களை யடக்கித் தேசத்திற்கு க்ஷேமத்தை யுண்டாக்குகிறானோ அவனுக்குத் தமது குமாரத்தியாகிய முக்தாவை விவாகம் புரிந்து வைப்பதாக யாவருக்கும் தெரிவித்தார்கள்.

ராஜ வம்சத்தைச் சேர்ந்த தைரியமுள்ள வாலிபனான யஸ்வந்தராவு என்பவன் இந்த முக்கிய அலுவலைச்செய்து முடிக்கத் தீர்மானித்துத் தக் முதலிய கொள்ளை யடிப்போரைப் பிடித்துச் சிறையில் அடைப்பித்துத் தண்டனையும் செய்வித்தான். அப்படி இவன் செய்யவே ராஜ்யத்தில் கொள்ளைப் பயமென்பதே சிறிதேனும் கிடையாது.



ஜனங்கள் சுகமாகத் திருட்டுப்பயம் நீங்கிற்றே என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

ராணியாருடைய செல்வக் குமாரத்தியோ கல்வியறிவில் தேறி மிகச் சாமர்த்திய முள்ளவளாயும், தாயைப்போல் சகல குணங்களையும் பெற்று விவாகப் பருவத்தையடைந்தாள். இவள் மகா அழகுபொருந்தியவள். இவ்வித குணமுள்ள பெண்ணைச் சொன்னவண்ணம் மறு பேச்சு பேசாமல் ராணியார் ஒரு சுபமுகூர்த்தம் ஏற்படுத்தி அத்தினத்தில் யஸ்வந்தராவுக்கு மணமுடித்து வைத்தார்கள். அக்காலத்தில் தானதர்மங்கள் அளவிடக் கூடாமல் செய்தார்கள். தமது மருமகனுக்கும் மகளுக்கும் ராஜ்யத்தை ஸ்ரீதனமாக அளித்தார்கள். அப்பொழுது அநேகருக்கு அன்னமளித்து வஸ்திரதானம் ஏராளமாகச் செய்தார்கள். யஸ்வந்தராவும் ராணியாருடைய குமாரத்தியைத் தன் அருமை மனைவியாக அடைந்து அதிக சந்தோஷப்பட்ட போதிலும், தான் வீரத்தன்மையுடன் துஷ்டர்களாகிய கொள்ளைக்காரர்களை வேருடன் அத்தேசத்தினின்று களைந்து விட்டதற்காக அதிக மகிழ்ச்சியடைந்தான்.

இவன் தன் மனைவியுடன் இல்லறத்தைச் செவ்வனே நடத்திவந்தான். முக்தாவும் தன் கணவன் மனம் கோணாமலும் தன் அருமைத் தாயாரின் இஷ்டப்படியும் நடந்து வந்தாள். தன் தாயாரைத் தெய்வமெனப் பாவித்து வந்தாளே தவிர தாய் சொல்லுக்கு மறு உத்திரம் சொல்லவே மாட்டாள். இப்படியே தன் கணவனையும் தெய்வம்போல் பாவித்து அவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை யெல்லாம் சிறிதேனும் தவறாமல் சரிவரச் செய்து வந்தாள்.

ராணியார் நீதி செலுத்துவதில் மகா கண்டிப் பானவள். சாமர்த்தியமும் நல்ல யோக்கியதையு முள்ளவர்களை நியாயாதிபதிகளாக நியமித்தாள். இவர்கள் செய்த தீர்ப்பைப் பின்னிட்டு மறுவிசாரணை தாமே செய்வார்கள். தமது பிரஜைகளில் ஒருவரையாவது தொந்தரவுசெய்ய உத்தியோகஸ்தர்களை ஒருபொழுதும் விடவேயில்லை.

ஒருகாலத்தில் மஹியா என்ற கிராமத்தில் சர்கம்தாஸ் என்ற பெருத்த வியாபாரி இறந்துவிட்டார். இவருக்கு ஒரு மனைவி யிருந்தாள். ஆஸ்தியோ அளவற்றதா யிருந்தது. தன் கணவனைப் பறிகொடுத்த அம்மனைவி ஒரு ஆண்குழந்தையைச் சுவீகாரம் செய்துகொள்ள யோசித்தாள்; ஆனால் பணத்திற்கு அதிகாரியாகிய கலெக்டர் அவள் அப்படிச் செய்யாவண்ணம் தடுத்து வந்தார். அவளுடைய ஆஸ்தி யெல்லாம் ராஜ்ய பொக்கிஷத்திற்குச் சேரவேண்டு மென்று செய்தாரே யொழிய தான் அவ்வாஸ்தியைப் பெறவேண்டு மென்றல்ல; ஏனெனில் அவ்விதவை ஒரு குழந்தையைச் சுவீகாரம் செய்துகொள்ளாவிடின் அவளுடைய பணமெல்லாம் ராஜ்ய பொக்கிஷத்தில் சேர்ந்துவிடும். இவ் வெண்ணத்தைக்கொண்டு அவளுக்குப் பல இடையூறுகளை யெல்லாம் செய்துவந்தார்.

ஆனால் ராணி அகல்யா இவ்விஷயங்களை யெல்லாம் செவ்வையாக அறிந்து கொண்டவுடன் கலெக்டரை தமதூரையே வரவழைத்து அவரைக் கடிந்து அவ்விதவை ஒரு குழந்தையைச் சுவீகாரம் செய்து கொள்ளும்படி உத்திரவளித்தார்கள். அவள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவ்விதமே ஒரு குழந்தையைச் சுவீகாரம் செய்துகொண்டு தன் ஆஸ்தியை யெல்லாம் பெற்றுத் தானதர்மம் செய்து சுகமாக ராணியாரை வாழ்த்திக்கொண்டு வாழ்ந்து வந்தாள்.



இன்னொரு சமயம் தனவந்தர்களான தல்பதாஸ், பாரம்தாஸ் என்ற இருவர் குழந்தைகளின்றி இறந்துவிட்டார்கள். அவர்களுடைய மனைவிமார்கள் ராணியார் முன்சென்று "ராணியாரே! எங்களுக்கிருக்கும் ஏராளமான ஆஸ்தியைத் தயைகூர்ந்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்" என்று மிக வணக்கத்துடன் கேட்டுக் கொண்டார்கள். அன்றியும் "நாங்கள் யாத்திரை செய்ய விரும்புகிறோம், எங்களுக்கு ஆஸ்தியொன்றும் தேவையில்லை" என்றும் சொன்னார்கள்.

"பிரியமுள்ள சகோதரிகளே! என்னிடத்தில் நீங்கள் வைத்துள்ள அன்பிற்காக வந்தனம் செய்கிறேன்; எனக்கு வேண்டிய பொருளை கடவுள் அளித்திருக்கிறார். எனக்குத் தேவையுமில்லை, அதிகம் வேண்டுமென்ற விருப்பமுமில்லை. ஜலக் குறைவுள்ள விடங்களில் குளங்களை வெட்டி வையுங்கள். தர்ம சத்திரங்களில்லாத விடங்களிலெல்லாம் தர்ம சத்திரங்களைக் கட்டி வையுங்கள். இன்னும் ஜனங்களுக்கு என்னென்ன செய்தால் நன்மை பயக்குமோ அவைகளை யெல்லாம் செய்யுங்கள்" என்று ராணியார் உதார குணத்துடன் பதிலளித்தார்கள்.

அவர்கள் ராணியார் சொன்னவைகளுக்குப் பதில் சொல்ல வழியில்லாததைக் கண்டு அவர்கள் சொன்னவண்ணம் திரவியத்தை யெல்லாம் எடுத்துக்கொண்டு தர்ம கைங்கரியங்கள் செய்து வந்தார்கள்.

இவ்வித குணமுள்ள ராணியாரை எவர்தான் புகழமாட்டார்கள்! முன்காலத்தில் ஸ்திரீகள் பரோபகாரம் செய்வதில் முழுமனதைச் செலுத்தி வந்தார்கள். தற்காலத்தில் ஸ்திரீகளனேகர் கல்வியறிவின்றித் தானதர்மம் செய்யாமல் சுயநயத்தைப் பாராட்டி வருகிறார்கள். இப்

படிச் செய்வது தப்பு. தங்கள் வரும்படியில் 100-க்கு ஒன்று வீதமாவது தர்மம் செய்வதில் செலவழித்து வரவேண்டும்

ராணியாருடைய பிற்காலத்தைப் பற்றிச் சற்று விசாரிப்போம். ராணியார் மிகச் செல்வமும் கீர்த்தியும் பெற்றிருந்தும் சிறிதேனும் டம்பமின்றிச் சாதாரண ஸ்திரீகளைப்போல் வசித்து வந்தார்கள். தர்பாருக்குவரும்பொழுதுகூடச் சாதாரண புடைவையைத் தரித்துக் கொண்டுதான் வருவார்கள். ராணியாரென்ற கர்வம் எள்ளளவும் கிடையாது. சிக்கனமாகச் செலவு செய்வதில் மகா சமர்த்துள்ளவர்கள். இதனால் தர்மம் செய்வதில் பின் வாங்கவில்லை. ராணியார் சேர்த்து வைத்த பணத்தையெல்லாம் பொது ஜனங்களுக்கு மிக முக்கியமானவைகளைச் செய்வதிலும் தேவையான சாலைகளைக் கட்டி வைப்பதிலும் செலவழித்தார்கள்.

இவர்கள் கிணறு அல்லது குளம் வெட்டி வைக்காத கிராமம் கிடையாது. தர்மசாலை ஸ்தாபிக்காத கிராமமும் கிடையவே கிடையாது. அவர்களுடைய ராஜ்யமுழுவதும் கணக்கில்லாத ஆலயங்களால் நிறைந்திருந்தன. இந்துக்களின் சிற்ப சாஸ்திர விதிப்படி அதிக மேன்மையாக மதிக்கப்படும் கய (Gaya) அல்லது காசியிலுள்ள விஷ்ணுபாதம் என்ற கீர்த்திபெற்ற திவ்ய ஆலயம் இவ்விராணியாரால்தான் கட்டப்பட்டது. அவ்வாலய சாசுவத செலவுக்காக ஏராளமான திரவியத்தையும் பூமியையும் அளித்திருக்கிறார்கள்.

விஷ்ணுபாதம் என்ற ஆலயம் இந்துக்களுடைய யாத்திரை ஸ்தலங்களில் மிகவும் விசேஷமாக மதிக்கப்பட்டுள்ளது. சாதாரண ஏழைகூட இவ்வாலயத்திற்குச்



சென்று தன் மாதாபிதாவுக்குப் பிண்டம் போட்டு வருவது வழக்கம். இந்தியா முழுவதிலுமுள்ள ஜனங்கள் இப்பொழுதும் அங்கு சென்றால், ராணி அகலியாவை நினைத்துக் கொள்வார்கள். மேலும் அங்கு சென்று வந்தவர்களும் ராணி அகலியாபாயின் தர்மவிசேஷத்தைப்பற்றி வர்ணிப்பதைப் பலதடவைகளிலும் கேட்டிருக்கிறோம்.

இக்காலத்தில் தனவந்தர்கள் ஒருகாசு தர்மம் செய்வதற்குப் பிராணனை விட்டுவருகிறார்களே! அகலியா அப்படிக்கின்றி முழுமனத்துடன் தம் ஆஸ்தியையெல்லாம் ஏழை ஜனங்களுக்காகக் கொடுத்துத் தர்மம் செய்து வந்ததாகப் பற்பல புஸ்தகங்களால் நமக்குத் தெரிகின்றது.

ராணியார் ஜனங்களுக்கு மாத்திரம் நன்மைகள் செய்துவிட்டு அத்துடன் நிற்கவில்லை. மிருகங்களையும் மறவாமல், தமது ராஜ்யத்தில் அவைகள் மேயவிஸ்தாரமான இடத்தை விட்டார்கள். பட்சிகளையும் இம்சிக்காமல் பாதுகாத்து வந்தார்கள். அநேக பட்டணங்களில் மிருகங்களுக்கு வியாதிவந்தால் சௌக்கியப்படுத்த வைத்திய சாலைகளை ஸ்தாபித்தார்கள். இம்மாதிரி சாலையொன்று சென்னைமாநகரி லிருக்கிறது. அதற்கு நமது [illegible]ன்னிய கவர்னரவர்களும் மற்ற[illegible] பிரபுக்களு[illegible] பொருள் கொடுத்து உதவி புரிந்து வரு[illegible]ர்கள். [illegible]தில் அநேக மிருகங்களுக்கு சிகிச்சை செய்து வருகிறார்கள். சென்னையில் நொண்டிக் குதிரைகளையும், வியாதியுள்ள குதிரைமாடு முதலியவைகளையும் இம்சித்து வண்டியில் கட்டிக்கொண்டு போகக்கூடாது. அப்படிச் செய்பவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும்.

ராணியார் 30 வருஷம் தமது ராஜ்ஜியத்தில் சமாதானத்துடன் தானதர்மங்கள் செய்துகொண்டும் கடவு

னத் தியானம் செய்துகொண்டி யிருந்தார்கள். தமது புத்திரியையும் மருமகளையும் கண்டு களித்து அவர்களுக்கு வேண்டிய புத்தி மதிகளைச் சொல்லி நல்வழியில் நடத்திக் கொண்டு வந்தார்கள். இப்படி ராணியார் செய்ததமை யால் அவர்களும் தெய்வபக்தி, பரோபகாரம், தர்ம சிந்தை முதலியவைகளை யுடையவர்களாயிருந்து, ஜனங் களுக்குப் பற்பல நன்மைகளைச் செய்துகொண்டு சுகவாழ் வுடன் ஜீவித்திருந்தார்கள்.

ராணியார் 1795-ம் வருஷத்தில் இந்தூர் ஜனங்கள் மாத்திரமல்ல-இந்தியா முழுவதுமுள்ள ஜனங்கள் துக்கப் படும்படி வானுலகிற்கு ஏகினார்கள். அப்பொழுது குழந் தைகள் முதற்கொண்டு முதியோர் வரையிலும் அழுது விசனப்பட்டு துக்கம் கொண்டாடினார்களாம். இப்படி இந்தியா முழுவதும் செய்வானேன்? அவ்விராணியா ருடைய பொது நன்மைகளும், தர்ம காரியங்களும் இந் தியா முழுமையிலும் பரவியிருந்தன. அவ்விராணியா ருடைய திவ்ய நாமம் இமயபர்வதத்திலிருந்து கன்னியா குமரி வரைக்கும் பரவியிருந்தது. இனி இவ்வித நற் குணங்களமைந்த ராணியாரைப் போன்ற பெண்மணி நமக்கு எப்பொழுது வாய்க்குமோ என்று ஜனங்கள் எண்ணி வியந்தார்கள்.

தெய்வச் செயலாய் நமக்கு லக்ஷ்மியே உருவெ டுத்தாற்போல் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணி யாரவர்கள் ஜனித்தார்கள். இந்தியா முழுமையும் அவர் களுடைய ஜன்ம தினத்தைக் கொண்டாடி அவர்க்கு தீர்க்காயுளுண்டாகும்படி கடவுளை ஸ்தோத்திரம் செய்தார் கள். அவ்விதமே அவர்கள் வெகு காலஞ் ஜீவித்திருந்து எவ்வளவோ நன்மைகளை யெல்லாம் செய்து வந்தார்கள்.



நமது தயார் விக்டோரியா மகாராணியார் காலஞ் சென்ற போதும் இந்தியாவி லுள்ளவர்களெல்லாம் துக்கப்பட்ட திற்கு அளவே யில்லை. இன்றும் ஒவ்வொரு வீட்டிலும்



விக்டோரியா மகா ராணியார்.

அவருடைய படத்தை வைத்து பூசித்து வருகிறார்கள். ஏழாவது எட்வர்ட் மகாராஜாவின் குமாரரும், விக்டோரியா மகாராணியாரின் பேரனுமாகிய 5-வது ஜார்ஜ் அரச சக்கர



டெல்லி தர்பார்



வர்த்தியார் தமது மேரி ராணியாருடன் டெல்லிமா நகருக்கு 1912-ம் வருஷம் டிசம்பர் மாதம் வந்து தர்பார் கூட்டிவைத்த விஷயங்கள் யாவருக்கும் தெரியுமல்லவா? அச்சமயத்தில் நமக்கு அவர் வந்து அளித்த நன்மைகளும் யாவருக்கும் தெரியும். நமது சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் நெடுங்காலம் ஜீவித்திருந்து நமக்கு இன்னும் வேண்டிய நன்மைகளைப் புரியும்படி கடவுள் அருள் புரிவாராக.

அகலியாவைப் போல் நம் தேசத்திலுள்ள பிரபுக்களின் மனைவிமார்களும் தங்களாலியன்ற நன்மைகளைச் செய்துவரும்படி ஈசன் அருள் புரியுமாறு வேண்டுகிறோம். சுயநலம் பாராட்டாமல் கல்விச்சாலை வைத்தியசாலை முதலியவைகளுக்கு உதவி புரிந்து ஏழைகளைப் பாதுகாக்கவேண்டும். பெண்மணிகளுக்கு நற்குணங்களுண்டாகும்படியும் தர்மம் செய்யும்படியும் நடத்தி வருவதுடன் அவர்களுக்கு உயர்தரக் கல்வியையும் கற்பித்து வருவதுதான் விசேஷம்; அப்படிச் செய்து வந்தால் அகலியாவின் ஆத்மா திருப்தியடையும்.

## 11. அரக்களா ராணி

பீஹாரில் பக்ஸார் என்று வழங்கும் நகரத்திற்குச் சமீபத்தில் அரக்களம் என்ற இந்து சமஸ்தானமிருந்தது. இச் சமஸ்தானத்திற்கு கௌதமன் அரசனாயிருந்தான். இவன் காலத்தில் நாஜர் உத்தீன் டெல்லி சக்கரவர்த்தியாயிருந்தான். இவனுக்கு அநேக அரசர்கள் அடங்கி கப்பங்கட்டி வந்தார்கள். கௌதமன் கப்பம் கட்டமாட்

டேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டான். டெல்லி சக்கரவர்த்தி மிகவும் கோபங்கொண்டு அயோத்திக்கு கவர்னரா யிருந்தவனைத் தன் சேனைக்குத் தலைமை வகித்து கௌதமனை எதிர்த்து சண்டை செய்யும்படி அனுப்பினான்.

அயோத்தி கவர்னர் உடனே இரண்டு சேனைகளுடன் சென்று கௌதமனுடன் யுத்தம் புரிந்தான். கவர்னருடைய சேனையில் அநேகர் கொல்லப்பட்டார்கள். ஆகவே, கவர்னர் தோல்வியடைந்தார். இவர் உடனே மீதியுள்ளவர்களுடன் தம தேசத்திற்குப் போக ஏற்பாடு செய்தார். கௌதமனோ தனது அரண்மனைக்குச் சென்று சந்தோஷத்துடனிருந்தான். இதற்காக ஒரு விருந்தும் செய்துவைத்தான்.

பின்பு அமாவாசை வந்துவிடவே, கௌதமனுடைய மனைவியாகிய ராணி கங்கையில் ஸ்நானம் செய்தால் ஆபத்துகள் நீங்கி க்ஷேமம் உண்டாகுமென்று எண்ணினாள். ஆனால் கங்கைக் கரையில் விரோதிகள் பொய்க்கொண்டிருந்தார்கள். இவர் தங்கியிருந்தார்கள். வருவது வரட்டும் என்று எண்ணி ராணி சில தாதிமார்களுடன் மறைவாக ஆயுதங்களை வைத்துக்கொண்டு புறப்பட்டாள்.

ஸ்நானம் செய்யுமிடத்திற்கு ராணி வந்து கங்கையில் ஸ்நானம் செய்தாள். தோழிமார்களும், ராணியும் கங்கா தேவியைப் பூஜை செய்தார்கள். உடனே ராணியார் இங்கு வந்திருக்கும் சங்கதி அயோத்தி கவர்னருக்குத் தெரிந்தது. அவன் ராணியைச் சிறைப்பிடிக்க உத்திரவளித்தான்.

ராணியார் தமது தோழிமார்களுடன் தமது இருப்பிடத்திற்குத் திரும்பிப் போகும்பொழுது மகமதிய சேனவீரர்கள் ராணியாரைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அரக்களா ராணி மனதுக்குள் திகில் அடைந்தாள். ஆனால் சிறிதும் கண்ணீர் விடவில்லை. அவளது கண்கள்



கோபாக்கினியால் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. கலங்காத நெஞ்சுடனும், சாந்தத்துடனும், தன் கோபப் பார்வையால் சத்துருக்களை நிந்தித்தாள். அவர்களை லக்ஷியம் செய்யாமல் தன்னிடத்திலிருந்த கடாரியைக் கையிலெடுத்துக்கொண்டாள். உடனே தோழிமார்களும் தங்கள் வஸ்திரத்தில் ஒளித்து வைத்திருந்த கடாரியைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டார்கள். இவர்கள் விரோதிகளை விலக்கிக்கொண்டு வழிசெய்து தங்கள் அரண்மனைக்குப் போக முயன்றார்கள். இது முடியாத காரியமென்பதை ராணி அறிந்துகொண்டு, பின்வருமாறு கெட்டியாகச் சொன்னாள்:—

"இந்த தாய்மார்களிடத்திலும், சகோதரி பெண்மணிகளிடத்திலும் பிரியமுள்ள சகோதரர்களில்லையா? அவ்விதமிருந்தால் உடனே எழுந்து உதவி செய்ய வாருங்கள். தெய்வசாக்ஷியாய் உங்களைப் பிரார்த்திக்கிறேன். அவ்விதம் உதவிசெய்ய வராவிடின் நான் உங்களை சபிக்க வேண்டி வரும்"

கோபாவேசத்துடன் ராணியார் சொல்லியவைகள் அவ் வழியாகப் போய்க்கொண்டிருந்த வீரர்களாகிய அப்பச்சந்த், பிரயசந்த் என்பவர்களின் காதில் விழுந்தன.

இவ் வார்த்தைகள் இவர்கள் காதில் விழுந்தவுடன் தங்களுடன் வந்திருந்த சில பரிவாரங்களுடன் ஓடிவந்து விரோதிகளின்மீது புலி பாய்வதுபோல் பாய்ந்து யுத்தம் செய்தார்கள். சிறிது நேரத்திற்குள் இவ்விரு வீரர்களும் ராணியார் பக்கம் வழியை உண்டாக்கி, ராணியார் அருகே சென்றார்கள். அப்பொழுது ராணியாரும் அவளுடைய தோழிமார்களும் தங்களைச் சூழ்ந்துள்ள மகமதியர்களைத் தைரியமாக எதிர்த்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்விரு வீரர்களும் யுத்தம் செய்து சத்துருக்களை விலக்கி வழியை உண்டாக்கினார்கள். உடனே இவர்கள் ராணியாரையும், தோழிமார்களையும் மிக பத்திரமாயிட்

டுக்கொண்டு அரண்மனைக்குப் போக முயன்றார்கள். இவர்களது முயற்சி வீணாகப் போயிற்று. யுத்தமோ பலமாக நடந்தது. ஒரு அடிக்கு ஒரு அடி இந்துக்களில் அநேகர் கஷ்டப்பட்டு ஜயித்தவர்களும் இவர்களில் அநேகர் கத்திக்கு இரையானார்கள்.

தைரியமுள்ள நிர்பயச்சந்த் படுகாயப்பட்டு மரணமடைந்தான். இவனுடனிருந்தவர்கள் அநேகர் யுத்தகளத்தில் மடிந்தார்கள்.

"ஆபத்து வேளையில் தெய்வமே நமக்குத் துணை" என்று ராணி எண்ணி சிறிதும் மனந்தளராமல் யுத்தம் புரிந்தவண்ணமாய் இருந்தாள். கடவுள் திருவருளால் ராணிக்கு உடனே உதவி கிடைத்தது. அரக்களா அரசனுக்கு இச் சமாசாரம் தெரிந்தது. உடனே அரசன் சில துருப்புடன் துரிதமாகத் தன் மனைவியைக் காப்பாற்ற ஓடிவந்தான். மகமதியர்கள் இவனையும், இவனது தைரியம் பொருந்திய சேனையையும் கண்டு நடுநடுங்கி ஓட்டம் பிடித்தார்கள்.

அரக்களா அரசன் அபயச் சந்தின் தைரியத்தைக் கண்டு மெச்சி அவனுக்குத் தனது அருமையான மகளை விவாகம் செய்து வைத்தான். தைரியமற்ற அந்த கவர்னரின் கதி என்ன? அவனது சிநேகிதர்களும், விரோதிகளும் அரக்களா ராணியை எதிர்த்ததற்காகக் குற்றம் கூறி அவனை அவமானம் செய்தார்கள். மேலும் ஒரு ஸ்திரீயை எதிர்க்கச் சென்ற அவ்வயோக்கிய கவர்னரை அவன் சாகுமளவும் யாவரும் நிந்தித்து வந்தார்கள்.

முற்றிற்று.

PRINTED AT THE 'CAXTON PRESS', MADRAS — 1921.

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் ஜூன் வருடம் 1984
செப்பனிட்டு முடித்த
மாதம் ஜூலை வருடம் 1984
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

3584/13

# தமிழ் நவீன கதைகள்

| | | | |
|---|---|---|---|
| மாண்டிகிறிஸ்டோ (இரண்டு பாகம்) | 3 | 0 | 0 |
| போத சரித்திரம் | 2 | [illegible] | 0 |
| அபாஷா (இரண்டு பாகம்) | 1 | [illegible] | [illegible] |
| இந்திராணி | 1 | [illegible] | [illegible] |
| இராக்கராயகி | [illegible] | [illegible] | [illegible] |
| கன்னியின் முத்தம் (முதற்பாகம்) | [illegible] | [illegible] | 0 |
| கன்னியின் முத்தம் (இரண்டாம் பாகம்) | [illegible] | [illegible] | [illegible] |
| கன்னியின் முத்தம் (மூன்றாம் பாகம்) | 1 | 4 | 0 |
| கன்னியின் முத்தம் (நான்காம் பாகம்) | 1 | 4 | 0 |
| பத்மரேகை | [illegible] | [illegible] | 0 |
| திரிலோக மோகினி | 1 | 0 | 0 |
| அரண்மனை இரகசியம் | 1 | 0 | 0 |
| இந்திரஜித்தன் | 1 | 0 | 0 |
| பத்மலோசனி | 0 | [illegible] | 0 |
| மீரா | 0 | 12 | 0 |
| சந்திரன் | 0 | 12 | 0 |
| ஆனந்த சுந்தரி | 0 | 12 | 0 |
| ஆங்கில இரோமானியர் | (அச்சில்) | | |
| மங்கையர்க்கரசி | 0 | 12 | [illegible] |
| நீதிபாலன் | 0 | 12 | 0 |
| பூபதி | 0 | 12 | 0 |
| புருஷோத்தமன் சரித்திரம் | 0 | 10 | 0 |

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெரு, சென்னை.

11968